# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது


Volume-18 Issue-9 செப்டம்பர்-2025 ஸபர்-ரபியுலவ்வல் 1447




தமிழகத்தில்
30 லட்சம் வாக்காளர்கள்?

## யார் இந்த
# இப்ராஹிம் தரோரா?

## ஈரானுக்கு எதிராக அணி திரளும்
# ஐரோப்பிய நாடுகள்



முகமது முஸ்லிம்களுக்கு மட்டுமே
சொந்தமானவரல்ல [மீலாது விழாவில் பெரியார்] 1

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

செப்டம்பர்-2025 | ஸபர்-ரபியுலவ்வல் 1447

வரலாற்றுத் தடத்தில் ...
இஸ்லாமியப் பார்வையில்...
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்...
படியுங்கள்... பரப்புங்கள்...
பாதுகாத்து வையுங்கள்...


- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps
G Pay · பே · UPI · BHIM · Paytm


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





ஈரானில் நடக்கும் இஸ்லாமிய ஆட்சியும் அதைக் கவிழ்க்கத் துடிக்கும் மேலை நாடுகளும் - 7
இப்ராஹிம் தரோரா கொல்லத் துடிக்கும் அமெரிக்கா..! - 17
தமிழகத்தில் 30 லட்சம் வாக்காளர்கள் காணவில்லை - 20
வெளிச்சத்திற்கு வந்த இஸ்ரேலின் இன்னொரு இழப்பு - 27
இனி விஞ்ஞான உலகிற்கு இஸ்ரேல் தீண்டத்தகாத நாடு - 28
நரம்பியல் மனமும் & இதயத்தின் உணர்வுத் திறனும் - 29
பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 32
டெல்லி கலவரம் (தொடர்) - 37
அவரவர் குலத் தொழிலை அவரவர் செய்ய வேண்டுமாம்! - 43
இந்தியாவில் முஸ்லிம்கள் - 45
சிலுவைப் போர் 2.0 - 49
மகளிர் மன்றம் - 52
பெற்றோரைப் பேணுங்கள் - 55
மருத்துவம் - 57
பெருநாள் சந்திப்பு - 58
தலையங்கம் - 61


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# ஈரானுக்கு எதிராக அணி திரளும் 14 ஐரோப்பிய நாடுகள்

**13-6-2025இல்** இஸ்ரேல்-ஈரானை தாக்கியது. பல (20) இராணுவ தளபதிகளையும், பல அதிகாரிகளையும் கொலை செய்தது.

பல அணுவிஞ்ஞானிகளையும் படுகொலை செய்தது. இந்தத் தாக்குதலில் இஸ்ரேல்- இவ்வளவு சேதாரங்களை ஏற்படுத்திட இயன்றது என்றால், அதற்கு முக்கியக் காரணம், இஸ்ரேல் ஈரானுக்குள் படரவிட்டிருந்த உளவுத்துறைதான்.

அதாவது “மொசாத் தான்'

தாக்குதல் தந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட பின், 18 மணிநேரம் கழித்து ஈரான் தன் பதிலடியைத் தொடங்கியது.

12 நாள் தொடர்ந்து நடத்திய தாக்குதல்களில் இஸ்ரேல் மாபெரும் அழிவுக்கு ஆளானது.

தாக்குப் பிடிக்க இயலாத இஸ்ரேல் அமெரிக்காவின் காலில் வீழ்ந்தது.

அமெரிக்க தன்னுடைய அதீத விமானப் படையை ஏவி ஈரானின் அணு உலைகள் மூன்றனவற்றின் மீது, தாக்குதல் நடத்தியது. ஆனால், அந்தத் தாக்குதல்கள், பயனளிக்க வில்லை. காரணம், ஈரானின் கான்கிரீட் என்ற தளம் அத்தகையது. அந்தத் தளத்தை தாண்டி எந்த குண்டும் உள்ளே செல்லாது.

தாக்கிட வந்த விமானங்கள் எதுவும் மீண்டும் அமெரிக்கா போய்ச் சேரவில்லை. அந்த விமானங்களும் அதனை ஓட்டி வந்தவர்களும் என்ன ஆனார்கள், என்பது இன்றளவும் கண்டுபிடிக்க இயலவில்லை. அண்மையில் ஜப்பானுக்குப் பக்கத்தில் ஓர் விமானியின் பிணம் கிடைத்தது. அந்த உடல் இந்த விமானங்களை ஓட்டி வந்தவர்களில் ஒருவரின் உடலா என்பது இன்னும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

அமெரிக்க இராணுவ தலைமையகமான “பெண்டகன்”னும் அமெரிக்கா அதிபர், டிரம்ப் இன்னும், இன்றும் அதுபற்றி வாய்த்திறக்க வில்லை.

இந்தப் போரினிடையே, ஈரான் தான் எதிர்நோக்கும், பேராபத்து ஒன்றை உணர்ந்தது.

அது மொசாத் முதலாய இஸ்ரேலிய உளவுத் துறைகளின் ஊடுருவல்.

**ஊருடுவல் - மொசாத்** ETC

“ஊடுருவல்” என்றால் ஊருக்குத் தெரியாமல் ஊடுருவியது அல்ல. மாறாக, இந்த உளவு நிறுவனங்கள் ஒரு இணைபடை அமைப்பையே ஈரானில் நடத்தி இருக்கின்றன.

(Missiles) மிஸில்கள், என்ற ஏவுகணைகளை இஸ்ரேலிலிருந்து ஈரானுக்குள் கடத்தி இருக் கின்றன. இவை ஒன்று இரண்டு என்ற

எண்ணிக்கையில் அல்ல, மாறாக ஆயிரக்கணக்கில் ஈரானுக்குள் கடத்தி வரப்பட்டுள்ளன.

ஆளில்லா விமானங்கள் என்ற Drones - டுரோன்ஸ்-ஐ பொறுத்தவரை அவற்றை இஸ்ரேலின் செலவில் ஈரானில் உற்பத்தி செய்யும் ஆலைகளே அமைக்கப்பட்டிருந்தன.

இவை அனைத்தையும் கண்டு கொண்டார்கள். எடுத்த எடுப்பிலேயே 700 மொசாத் என்ற இஸ்ரேலின் உளவுத்துறையினர் கைது செய்யப்பட்டார்கள்.

மெல்ல மெல்ல இந்த எண்ணிக்கை 2000 என்றானது. பல ஆளில்லா விமான உற்பத்திக் கூடங்கள், கைப்பற்றப்பட்டன. ஒரே சோதனையில் 10,000 ஆளில்லா விமானங்கள் கைப்பற்றப்பட்டன.

இதனால் ஈரானின் ஆயுதபலம் மேலும் அதிகரித்தது. இஸ்ரேல் ஆளில்லா விமானங்களை தனது ஆதரவாளர்களான ஐரோப்பிய நாடுகளிடம் கடன் வாங்கிட வேண்டியது வந்தது.

இன்னும் இந்தக் கைதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த உளவாளிகளில் பலர் விசாரிக்கப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள். இன்னும் பலர் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் இப்போது இன்னொரு உண்மை வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. அது பல (14) ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்காக ஈரானை வேவு பார்த்து வந்திருக்கின்றன.

அவற்றில் வட அமெரிக்கா, கேனடா, ஆகிய நாடுகள் அதிகமாக வேவு பார்த்திருக்கின்றன. இன்னும் இதில் அல்பேனியா, ஆஸ்டிரிய்யா, பெல்ஜியம், செஸ் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாண்ட்ஸ், ஸ்பெயின், யுனைடெட் கிங்டம்... ஆகிய நாடுகளும் இதில் பெரும் பங்காற்றியுள்ளன.

இந்த நாடுகளைச் சார்ந்தவர்கள் 13.6.2025இல் ஈரான் தன் எதிர் தாக்குதலை இஸ்ரேல் மீது தொடங்கியபோது, தாங்கள் பிடிபட்டுவிடுவோம் என்பதை உணர்ந்தார்கள். ஈரானை விட்டு ஓடிவிட்டார்கள்.

ஆனால் ஈரானின் உளவுத்துறை அவர்களை விடாமல் துரத்திக்கொண்டிருக்கின்றது.

அந்தந்த நாடுகளில் புகுந்து இந்த உளவாளிகளையும் அவர்களின் அனைத்துச் செயல்களையும் கண்காணித்து வருகின்றது.

இதனால் இந்த உளவாளிகள், திணறிப் போய் நிற்கின்றார்கள்.

இந்த உண்மைகள் எப்படி வெளியே வருகின்றன என்றால் அண்மையில் இந்த நாடுகளெல்லாம் ஒன்றாய் இணைந்து ஓர் கூட்டறிக்கையை வெளியிட்டன.

அந்த அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

எங்கள் நாட்டு மக்கள், ஈரானின் உளவுத் துறைகளால், மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளாகுகின்றார்கள். எங்கள் நாட்டு குடிமக்கள், இரகசிய கொலைகள், கடத்தல், தொல்கைகளுக்கு உள்ளாக்குதல் ஆகிய (Assasination, Kidnapping, And Harassment) வற்றிற்கு இலக்காக்கப்படுகின்றார்கள். இது எங்களுடைய இறையாண்மையை நேரடியாக அச்சுறுத்துவதாகும். சர்வதேச விதிகளுக்கும் எதிரானது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்"

இந்தக் கண்டனத்தையும் அதை உள்ளடக்கிய கூட்டறிக்கையையும், வெளியிட்ட அனைத்து ஊடகங்களும், ஈரான் உளவுத்துறை மீது இவர்கள் வைத்திடும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரத்தையும் தந்திடவில்லை, என்பதை மிகவும் தெளிவாகவே குறிப்பிடுகின்றன.

இதற்கு உடனேயே ஈரானுடைய வெளி விவகாரத்துறையின் சார்பில் இப்படிப் பதில் தந்திருக்கின்றார்கள். அதனுடைய செய்தி தொடர்பாளர் இஸ்மாயில் பக்கி மாலிக்கி!

"ஈரானுக்கு எதிரான அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள நாடுகள், பலப்பல தீவிரவாத அமைப்புகளை தொடங்கி, தொடர்ந்து ஆதரவு கொடுத்து வருபவை. இவை சர்வதேச விதிகளைத் தொடர்ந்து மீறிக்கொண்டிருப்பவை. அவர்கள் ஈரான் மீது வைக்கும் குற்றச்சாட்டுகள், பச்சையான பொய்கள். அவை ஈரானோஃபோபியாவை பிரச்சாரம் செய்கின்றார்கள். ஈரான் மீது ஒரு வெறுப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விடுகின்றன. ஈரான் மீது ஓர் அழுத்தத்தைக் கொண்டு வந்திட நினைக்கின்றார்கள். இந்த

**மேலும் ஒரு மொசாத் உளவாளிக்குத் தூக்குத் தண்டனை....**

**ஈரானின் முக்கிய அணுவிஞ்ஞானிகளை இஸ்ரேலுக்குக் காட்டிக் கொடுத்தவர்கள் Rauezwad ரவூஸ்வாடி என்பவர். இவரை ஈரான் கைது செய்து விசாரித்தது. இவர்தான் 13.06.2025 அன்று இஸ்ரேலின் முதல் தாக்குதலில் ஈரானின் பல அணு விஞ்ஞானிகள் கொலை செய்யப்படு வதற்குத் தேவையான உளவுகளை மொசாத்திற்குக் கொடுத்தவர் என்ற உண்மைத் தெரியவந்தது. இவருக்குது தூக்குத் தண்டனை விதித்தது நீதிமன்றம். இவர் 7.8.2025 அன்று தூக்கிலிடப்பட்டார்.**

- Mehr News Agency.

நாடுகளின் செயல்கள் சர்வதேச விதிகளுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தங்களுக்கும் எதிரானவை. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ள நாடுகள், தங்களுடைய பொறுப்பற்ற செயல்களுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்”

(ஆதாரம், Webanagah News Agency, Mehr News Agency and ABC News)

இந்த 14 நாடுகளின் கூட்டறிக்கை ஓர் உண்மையை வெளியே கொண்டு வருகின்றது.

அது, 14 நாடுகளிலுள்ள சிலர் மொசாத்திற்கு துணை நின்று, ஈரானுக்கு எதிராக வேலை செய்துள்ளனர்.

அவர்களை, இப்போது ஈரான் அடையாளம் கண்டுள்ளது. அவர்களைத் துரத்திக் கொண்டிருக் கின்றது. சிலரை கைது செய்துள்ளது.

மொத்தத்தில் ஈரான் ஒரு பெரிய இழப்பை சந்தித்த பின்பு, விழித்துக்கொண்டுள்ளது. வேகமாக செயல்படுகின்றது. விவேகத்துடன் இயங்குகின்றது.

அதே நேரத்தில். இன்னொரு உண்மையும் பளிச்சிடுகின்றது. அது 14 நாடுகள் அணி திரண்டு ஈரானை தாக்கிட தயாராகின்றன.

**ஈரானின் அதிரடி நடவடிக்கை**

ஈரான் தனக்கு எதிராகக் கொண்டுவரும் சூழ்ச்சியைக் கண்டுகொண்டது.

இந்த அறிக்கை வந்த உடனேயே ஈரானின் சுப்ரீம் தலைவர் அயாத்துல்லாஹ், ரூஹுல்லாஹ் அலீ காமினி அவர்கள் தனது தலைமையின் கீழுள்ள Supreme National Security Council என்ற உச்சபட்ச தேசிய பாதுகாப்பு குழுவின் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த குழு ஒரு National Defence Committee தேசிய தற்காப்பு குழுமம் ஒன்றை அமைத்துள்ளது.

இது, இஸ்ரேல், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இவற்றிலிருந்து வரும் ஆபத்துக்களை எதிர்கொள்ளும்.

சாதாரணமாக ஈரானுக்கு எதிரான அணியினர் IRGC-யினுள்ள, அதாவது Islamic Revolutionary Guards Corps என்ற ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் பாதுகாப்புப்படையின் முக்கியமான வர்களைத் தாக்கும். அதனால் பாதுகாப்புப் படையில் ஷஹீதாக்கப்படுபவர்களுக்கு அல்லது கொலை செய்யப்படுபவர்களுக்குப் பின் யார்? யார்? பொறுப்பேற்றிட வேண்டும் என்பதை இப்போதே முடீவு செய்துவிட்டார்கள்.

இமாம் அலீகாமினி அவர்கள் ஷஹீதாக்கப் பட்டுவிட்டால், உடனேயே அந்தப் பொறுப் பிற்கு யார் வந்திட வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது.

இதனிடையே ஈரான், இஸ்ரேலுக்கும் இதர எதிரிகளுக்கும் ஆதரவாகச் செயல்பட்டவர்களை விசாரணைக்கு உட்படுத்தி, நீதியின் முன் நிறுத்தி தூக்கிலிட்டு வருகின்றது. இது உளவு நிறுவனங்களிடையே ஒரு பீதியை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த பயமும் பீதியும் இந்த 14 நாட்டு உளவுத்துறையையும் பிடித்துள்ளது என்பதைத் தான் இந்தக் கூட்டறிக்கை உறுதிபடுத்துகின்றது.

இதில் தானாக வெளிவரும் உண்மை என்ன வெனில், இந்த 14 நாடுகளின் உளவுத்துறையும் ஈரானுக்கு எதிராகச் செயல்பட்டிருக்கின்றன.


இந்த சாக்கில், ஈரானுக்கு ஓர் அணியையும் அமெரிக்கா தயார் செய்துவிட்டது என்பது புலப்படுகின்றது.

ஈரானும் தயார் நிலையில் உள்ளது. இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் இதழ்களில் எல்லா தகவல்களையும் தருகிறோம். -

**MGM**



vaigarai velicham official



# ஈரானில் நடக்கும் இஸ்லாமிய ஆட்சியும் அதைக் கவிழ்க்கத் துடிக்கும் மேலை நாடுகளும்

**ஈரான்** இராணுவ பலத்தில் எப்படி பலமான நாடாக இருக்கின்றதோ, அதேபோல், அங்கு நடக்கும் ஆட்சியும், இஸ்லாத்தின் பாதையில் பலமாக இருந்து வருகின்றது.

அந்த ஆட்சியைக் கவிழ்க்க, அமெரிக்கா, அதன் கைத்தடி இஸ்ரேல் - இந்த நாடுகளின் தீவிரவாதத்திற்கும் - கூட்டுப்படுகொலைகளுக்கும் லாலிபாடும் ஐரோப்பாவும், கவிழ்த்திட வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன.

இந்த முயற்சிகள் இன்று, நேற்றல்ல.. ஈரானில் இஸ்லாமிய ஆட்சி அமையப்பெற்ற நாள்களிலிருந்தே நடந்து வருகின்றன.

இமாம் கொமைய்னி அவர்களின் தலைமையின்கீழ் நடந்த ஆட்சியை, தீவிரவாத ஆட்சி என்றும், அந்த நாடு (ஈரான்) தீவிரவாத நாடு என்றும் பிரச்சாரம் செய்தன ஐரோப்பிய - அமெரிக்க நாடுகள்.

இவற்றின் பொய்ப்பிரச்சாரங்களை ஊதி பெருக்கின மேலைநாட்டு ஊடகங்கள்.

அந்தப் போக்கையும், பொய்ப் பிரச்சாரத்தையும் இன்றளவும் கைவிடவில்லை இந்த மேலை நாடுகள்.

இஸ்லாம் எங்கேனும் தலைதூக்கினால் அங்கே உடனேயே தீவிரவாதம் தலை தூக்கி விட்டது எனக் கூப்பாடு போடுவது இந்த இஸ்லாமிய வெறுப்பாளர்களின் நிலையான கொள்கை.

இஸ்லாமிய வரலாற்றின் தொடக்கக் காலங்களில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட ஒரு மார்க்கம் என காலமெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். அது எடுபடவில்லை. இஸ்லாம் மிகவும் வேகமாக உலகில் பரவியது. அதே போல்தான் இந்தத் தீவிரவாதம் என்ற பிரச்சாரமும்.

பலநடுவு நிலையான எழுத்தாளர்களும் இப்போது வாளால் என்பதை “தீவிரவாதம்” எனத் தீவிரவமாகப் பரப்பி வருகின்றார்கள். அதுவும் எடுபடவில்லை என்பதே உண்மை.

மேலை நாடுகளின் - இஸ்லாத்திற்கு எதிரான முடிவுறா இந்தப் போரின் நடுவேதான் ஈரானில் இஸ்லாத்தை முன்னிறுத்தி ஓர் புரட்சி ஏற்பட்டது. “டைனாசிட்டி- Dynacity” என்ற மன்னர் பரம்பரை ஆட்சி உடைக்கப்பட்டு, ஈரான், Islamic Republic of Iran - ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்றானது.

அதுமுதல் அங்கொரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்திட, மேலை நாடுகள், அரபு நாட்டு மன்னராட்சிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

இப்போது அமெரிக்காவின் உதவியோடு இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களிலும் பிரதான நோக்கங்களில் ஒன்றாக ஈரானில் ஆட்சி

மாற்றம் என்பதாகத்தான் இருந்தது.

ஈரானில் இஸ்லாமிய ஆட்சி என்றால் அங்கே ஏன் நான்கு ஆண்டுகளுக்கொருமுறை தேர்தல் நடக்கின்றது?

இங்கேதான்,

நாம் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அது நாடாளும் மன்றங்கள் என்பவை மக்களின் பிரநிதித்துவ அவைகள். - அதை மக்களவை என்றுதான் அழைப்பார்கள்.

அதாவது மக்கள் தங்கள் பிரச்சனைகளை அரசிடம் கூறிட, விவாதித்துத் தீர்வுகளைத் தேடிடும் அவை, மக்கள் அனைவரையும் ஒரே இடத்தில் கூட்டிட இயலாது என்பதால், அவர்களை பல்வேறு தொகுதிகளாகப் பிரித்து அவர்களின் பிரநிதிகளாக ஒருவரை தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார்கள். அங்கே அந்தப் பகுதி அல்லது தொகுதி மக்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. தீர்வுகள் பெறப்படுகின்றன. அரசு நடவடிக்கைகளை எடுக்கின்றது. மக்கள் குறைகள் களையப்படுகின்றன.

**மனித வரலாற்றில்**

மொத்தத்தில் மக்களின் குறை தீர்க்கும் மன்றங்கள். இந்த மக்கள் குறைகேட்டு குறை தீர்க்கும் முறை மனித வரலாறு முழுவதும் செயலில் இருந்திருக்கின்றது.

மன்னராட்சி முறைகளில் "தர்பார்-ஹால்" என்றொன்று வரலாறு முழுவதும் இருந்து வந்திருக்கின்றது. இஸ்லாமிய ஆட்சி காலத்திலிருந்து மக்கள் குறைதீர்க்கும் மன்றங்கள், தர்பார்-ஹால் என அழைக்கப்படுகின்றன.

பெரும்பாலும் எந்த மன்னர் மாளிகையிலும், இந்த தர்பார் ஹால் இல்லாமல் இருந்ததில்லை.

அன்றும் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இன்றும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இவர்களின் முக்கியமான வேலை மக்கள் பிரச்சனைகளை அரசிடம் எடுத்துச் சொல்வதுதான்.

எல்லா நாடுகளிலும் ஓர் அரசியல் சாசனம் இருக்கும். அதில் மக்களின் உரிமைகளும் அரசின் கடமைகளும் விவாதிக்கப்பட்டிருக்கும். மக்கள் பிரச்சனைகள் இந்த அரசியல் சாசனத்தின் வரையறைக்குள் நின்று விவாதிக்கப்படும்.

இஸ்லாமிய ஆட்சியில், இந்த அரசியல் சாசன சட்டம் இருக்கும் இடத்தில் திருக்குர்ஆனும், நபி வழியும், மொழியும் இருக்கும்.

இந்த இரண்டு பொக்கிஷங்களுக்கும், எதிரே போகாமலும், இந்த இரண்டு பொக்கிஷங்களுக்கும் உட்பட்டு மக்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் காணப்படும்.

இந்த இரண்டு பொக்கிஷங்களும் வாழ்வின் எல்லாத்துறைகளுக்கும் வழிகாட்டும் அற்புதங்கள்.

**அரசியல் சாசனங்கள் VS அல்குர்ஆன்**

ஆக நாடுகளிடையே பீற்றப்படும் அரசியல் சாசனம், மக்கள் தங்களுக்கு வேண்டிய சட்டங்களைத் தாங்களே ஏற்றுக்கொள்கின்றார்கள். இந்தச் சட்டங்கள் பெரும்பான்மை எண்ணிக்கையின் அடிப்படையில் நிறைவேற்றப்படும்.

இங்கே நேற்று தீமை, மனித இனத்திற்கு எதிரானது, எனத் தடுக்கப்பட்டவற்றை, இன்று காலங்கள் மாறிவிட்டன என சில சாக்குப் போக்குகளைச் சொல்லி ஆகுமானதாக ஆக்கிவிடுகின்றார்கள், ஆக்கிவிட்டார்கள். அதாவது, இஸ்லாமியச் சொல்லாட்சியில் நேற்று ஹராம் - இன்று ஹலால்.

விபச்சாரம், வட்டி, குடி, இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

குடியைப் பொறுத்தவரை அது குடியைக் கெடுக்கும் என்பதே உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் ஒருமித்தக் கருத்து. ஆய்வாளர்கள், மருத்துவ நிபுணர்கள் அனைவரும் இதையே சொல்கிறார்கள். குடி குடியைக் கெடுக்கும் என்பது சாராயக் கடைகளின் ஸ்லோகம். அதை தடை செய்யாத நாடுகளே அத்தனை நாடுகளும், பின்னர் குடியை அனுமதித்தன. பல்வேறு காரணங்களைக் கூறின.

எல்லா நாடுகளும் மது ஒழிப்பு என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்றே முடிவு செய்தன.

முஸ்லிம் நாடுகளைத் தவிர..,!

மதுவைத் தடை செய்தால் கள்ளச் சாராயம் பெருகும் - கள்ளச்சாராயத்தை குடிப்பவர்கள், செத்து மடிகின்றார்கள். இதனால் அவர்களைச் சார்ந்து நிற்கும் குடும்பங்கள் வீதிக்கு வந்து


vaigarai velicham official

விடுகின்றன என்றொரு சப்பைக் கட்டு. அந்தக் குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்க சாராயத்தை ஆதரிக்கின்றோம் என்றொரு சப்பைக் கட்டு.

பின்னர் நல்ல சாராயம், நாமே கொடுப்பது நல்லது என அரசே அந்த வியாபாரத்தைத் தொடங்கிற்று, பின்னர் அதில் கிடைக்கும் வருவாயைச் சார்ந்து பட்ஜெட்கள்.

சாராயம் நல்ல விற்பனையாவதால் அந்தச் சாராயத்தை உற்பத்திச் செய்யும் ஆலைகளை - அரசில் அங்கம் வகிப்பவர்களே நிறுவி நடத்துகின்றார்கள்.

இதனால் இனி மது ஒழிப்பு என்ற பேச்சே எடுபடாது என்ற நிலைக்கு வந்துவிட்டன, நாடுகள் - முஸ்லிம் நாடுகளைத் தவிர. இஸ்லாமிய ஆட்சி நடக்கும் நாடுகளில் மட்டுந்தான் எல்லா நிலைகளிலும் மது ஒழிக்கப்பட்டுள்ளது. காரணம் அந்த நாடுகள் திருக்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு, அதாவது தங்கள் அரசியல் நிர்ணயச் சட்டங்களாகக் கொண்டு ஆட்சி செய்கின்றன. திருக்குர்ஆனின் வழிகாட்டுதல்கள், சட்டங்கள் எந்த நீக்குப் போக்குமின்றி குடி பழக்கத்தை தடை செய்கின்றன.

இறைவன் வகுத்து வழங்கிய இந்தச் சட்டங்கள், சிறுபான்மை, பெரும்பான்மை என வாக்கெடுப்பிற்கு விட்டு மாற்றிட இயலாது. இதனால் இந்தச் சட்டங்கள். இந்த உலகம் உள்ளவரை தடுக்கப்பட்டதாகவே இருக்கும்.

பெரும்பான்மையினர் வாக்களித்து விட்டார்கள். அதனால் இனி மாடெல்லாம், ஆடு, பாம்பையெல்லாம் பசு என்ற முட்டாள் தனத்திற்கு இஸ்லாத்தில் என் மூக்கின் முனை அளவுகூட இடமில்லை.

எப்படி மது, ஆகாது மனிதனுக்கு என இஸ்லாம் தடுத்துள்ளதோ. அதேபோல் விபச்சாரத்தையும், இஸ்லாம் தடுத்துள்ளது. ஆனால், இந்தத் தீமை இப்போது பல்வேறு அங்கீகாரத்துடனும் உலா வருகின்றது.

பாலியல் தொழிலாளர்கள் Sex workers திருமணம் செய்யாமலே சேர்ந்து வாழுதல், Live in Relationship, திருமணமானவர்கள். கணவனுக்கும் மனைவிக்கும் செய்யும் துரோகத்திற்கு Consentied sex or consensual sex இருவரும் சம்மதித்த உறவு என்றெல்லாம் பெயர் வைத்து நியாயப்படுத்தப்படுகின்றது. அதை அங்கீகரிக்கச் சட்டங்கள்.

இவை ஒவ்வொன்றுக்கும், பெரும்பான்மையினர் மக்கள் பிரதிநிதித்துவ அவைகளில் வாக்களிக்கின்றார்கள் சட்டமாகின்றது.

இந்தத் தீமைகளை அங்கீகரிக்கும் சட்டங்களுக்கு முற்போக்குச் சட்டங்கள் எனப் பெயர் வைத்துப் போற்றப்படுகின்றன.

ஆனால், அனைத்தையும் படைத்த இறைவன் வகுத்து வழங்கிய சட்டத்தில் இவையெல்லாம் பெரும்பான்மை, சிறுபான்மை வாக்குகள் என்ற நிலை இல்லை.

இந்தத் தீமைகளும் இன்னும் பல தீமைகளும், மனித இனத்திற்கு என்றென்றும் தடுக்கப்பட்டவை. அவற்றை மக்கள் தங்கள் மனம்போல் மாற்றிட இயலாது.

இப்படி இஸ்லாமிய ஆட்சியில், இந்தத் தீமைகளை மக்களிடையே அழுத்தமாக செயல்படுத்திட வேண்டுமானால் நடைமுறை நியதிகளை யாத்துக்கொள்ளலாம். ஆனால் அவற்றை ஆகுமானவையாக ஆக்கிக்கொள்ள முடியாது.

இன்றைய ஈரானில் மக்கள் பிரதிநிதித்துவ அவை, இந்தப் பணியைத்தான் செய்திடும். அதற்குமேல் ஷரீஅத் சட்டங்களை வளைக்கவோ நெளிக்கவோ அந்த அவைக்கு அதிகாரமில்லை.

இதனை பாதுகாத்திட, இந்த நிலையிலிருந்து ஆட்சியாளர்களோ, மக்கள் பிரதிநிதித்துவ அவையோ மாறிவிடாமல் பாதுகாப்பதற்கு அங்கே அதாவது ஈரானில் இன்னொரு அமைப்பு அனைத்து அதிகாரத்தையும் பெற்று வீற்றிருக்கின்றது.

அதுதான் ஓர் மார்க்க அறிஞரை தலைவராகக் கொண்டு இயங்கும் ஹுரா முறை. இவர் இந்த மார்க்க அறிஞர் அனைத்து அதிகாரத்தையும் பெற்றவர். ஆனால், அவர் “ஷுரா” என்ற கலந்தாலோசனை அவைக்கு முற்றிலும் கட்டுப்பட்டவர். கட்டுப்பவர் என்பதைவிட அதனால் வழிகாட்டப்படுபவர். இந்த ஷுராவிலும் கை சிறந்த மார்க்க அறிஞர்களோ இருப்பார்கள். இப்போதுள்ள ஈரானில் இருக்கின்றார்கள்.

### இரண்டு ஆட்சி முறை

ஆக, ஈரானைப் பொறுத்தவரை இரண்டு ஆட்சி அமைப்புகள் ஏக காலத்தில் இருக்கின்றன, இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒன்று நூறு விழுக்காடுகள் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த ஆட்சிமுறை.

இன்னொன்று மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அவை, அந்த அவையால் தேர்ந்தெடுக் கப்பட்ட குடியரசுத் தலைவர்.

இந்த மக்கள் அவை முழுக்க முழுக்க தலைமை இமாமுக்கும் - அவர்களுக்கு கீழ் இயங்கும் "மஜ்லிசே ஷூரா"வுக்கும் கட்டுப்பட்டது.

தலைமை இமாமை சுப்ரீம் லீடர் Supreme Leader - உச்சபட்ச தலைவர் என்று அழைக்கின் றார்கள்.

மஜ்லிசே ஷூரா - என்பது சுப்ரீம் லீடருக்கும் கீழே இயங்கும் அவை என்பதைவிட அவருக்கு ஆலோசனை வழங்கும் அவை எனக்கூறுவதே பொருந்தும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் நாடாளும் மன்றம் எடுக்கும் முடிவுகள் - காணும் தீர்வுகள், இவையெல்லாம் மஜ்லிசே ஷூராவின் ஆய்வுக்கும், உச்சபட்ச தலைவரின் முடிவுக்கும் கட்டுப்பட்டவையாக இருக்கும்.

இந்த ஆலோசனைக் குழு (மஜ்லிசே ஷூரா) எடுக்கப்பட்ட முடிவுகள் தீர்வுகள், இறைமறை - இறைவனின் அறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வு, வாக்கு இவற்றின்படி இருக்கின்றனவா என்பதை சீர்தூக்கிப் பார்க்கும். அதனடிப்படையில் - முடிவுகள் உச்சபட்ச தலைவரின் ஒப்புதலைப் பெற்று செயலில் வரும்.

### இமாம் கொமைய்னீ (ரஹ்) அவர்களின் ஏற்பாடுகள்

காலங்கள், நகரும், இஸ்லாத்தின் எதிரிகள் அவர்களின் வேலைகளைக் காட்டுவார்கள். இளைய தலைமுறையை, நவீனம், புதினம், முற்போக்கு என்ற போர்வைகளின்கீழ் பயிற்றுவிப்பார்கள்.

மொத்தத்தில் இஸ்லாத்திற்கெதிராக அடுத்தத் தலைமுறையைத் தயார் செய்து விடுவார்கள். இந்தத் தலைமுறை நவீன விரும்பிகள். இஸ்லாத்தின் விழுமியங்களுக்கு எதிராகவும், இஸ்லாமிய ஒழுக்க நெறிகளுக்கு எதிராகவும் களமிறங்குவார்கள்.

கேட்டால், இஸ்லாம் பிற்போக்குத்தன மானது. (Reactionary) நாங்கள்தாம் நவீன வாதிகள். "Modernist" நிதானமானவர்கள் (Moderates) என்பார்கள். இவர்களை மேலை நாடுகள் பணம், பதவி, விருது இவற்றையெல்லாம் வழங்கி வாழ்த்தி வளர்க்கும்.

அதனால், இப்போது 1979இல் ஏற்படுத்திய இஸ்லாமியப் புரட்சிக்கு எதிராக இந்த மக்கள் கிளர்ச்சிச் செய்ய முற்படுவார்கள். ஆகவே இரண்டு ஏற்பாடுகள் தேவை என்றார்கள் இமாம் கொமைய்னீ (ரஹ்) அலை அவர்கள்.

ஒன்று 1979 வரை இயங்கிய கல்வி நிலையங்களை மூடினார்கள். ஒருவருடம் எடுத்து மன்னர் ஷாபஹ்லவி காலத்திலிருந்த மேலை நாட்டுக் கல்வி முறையை மாற்றினார்கள். முற்றாகப் பாடத்திட்டங்களையும் மாற்றினார்கள்.

ஒரு வருடத்திற்குள், இஸ்லாமியப் பாடத் திட்டங்களைச் செயலில் கொண்டு வந்தார்கள்.

அதே பாடத்திட்டத்தில் அறிவியல் வளர்ச்சி யையும் புகுத்தினார்கள்.

இன்றைக்கு நாம் ஈரானில் பார்க்கும் மகோன்னத ஆற்றல்களுக்கும், ஆயுத பலத் திற்கும் 46 ஆண்டுகளுக்கு முன் இமாம் ஆயத்துல்லாஹ் ரூஹுல்லாஹ் கொமைய்னீ அவர்கள் செய்த (Educational Reforms) கல்விப் புரட்சியே காரணம்.

அடுத்து இஸ்லாத்தின் எதிரிகள் (1979) இஸ்லாமியப் புரட்சியையும், அதனால் ஏற்பட்ட இஸ்லாமிய ஆட்சியையும், "Islamic Republic of Iran" ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்பதையும் முற்றாகக் கவிழ்த்திடாமல் இருப்பதற்கும் - ஆயுதங்களை எடுத்து போர் செய்யாமல் இருப்பதற்கும் மொத்த படை பலத்தையும் இஸ்லாமியத் தலைமயின்கீழ் கொண்டுவந்தார்கள். பிரிதொரு சிறப்புப் படைப்பிரிவையும் ஏற்படுத்தினார்கள். அதன் பெயரே IRGC - Islamic Revolationary Guards Corp. - "இஸ்லாமியப் புரட்சியின் பாதுகாப்புப் படை"

இமாம் கொமைய்னீ அவர்களின் இந்த ஏற்பாடுகளே இன்றளவும் இஸ்லாமிய விழுமி


vaigarai velicham official



யங்கள் பட்டுப் போகாமல் பார்த்துக்கொள் கின்றன.

இமாம் கொமைய்னீ அவர்களின் இந்த ஏற்பாடுகளால் விளையும் நிறைவான பயன்களை நாம் இன்றும் கண்டு வருகின்றோம்.

### இஸ்லாமியக் குடியரசின் இப்போதைய நிலை

அத்தனை ஏற்பாடுகள் இருந்தாலும் இஸ்லாமியப் புரட்சி 1979ஆல் விரட்டியடிக் கப்பட்ட மன்னர் ஷாபஹ்லவின் குடும்பத்தினர் அங்கே சில அரசியல் கட்சிகளை நடத்தி வருகின்றார்கள். இவர்கள் மேலை நாட்டு சதிகாரர்கள், இஸ்ரேல், அமெரிக்கா, இவர் களுடன் இணைந்து, அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வருகின்றார்கள்.

எந்த அளவுக்கு இந்த உதவிகள் இடம் பெறுகின்றன என்றால், இவர்கள் இஸ்ரேலின் உளவுத்துறை மொசாத்துடன் இணைந்து செயல்படுகின்றார்கள். ஆட்சியைக் கவிழ்க்க முழு அளவில் உதவி செய்கின்றார்கள்.

அங்கே கிருஸ்தவர்களும், யூதர்களும் வாழுகின்றார்கள். இவர்களில் சிலரும் இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்க்க, வாய்ப்புக் கிடைத்தால் நழுவவிடுவதில்லை.

யூதர்களும், கிருஸ்தவர்களும், எல்லோரும் ஷாபஹ்லவியின் குடும்பத்தோடும், அவர்கள் நடத்திடும் அரசியல் கட்சிகளோடும் நிற்கின் றார்கள் எனச் சொல்வதற்கில்லை. எனினும் பலர் இஸ்ரேல் அள்ளிக் கொட்டும் பணத்திற்கு அடிமையாகி விடுகின்றனர்.

மாறாக, அவர்களிலிருந்தும் மொசாத்திற்கு போதுமான அளவிற்கு ஆட்கள் கிடைக் கின்றார்கள்.

இவர்களின் நோக்கம் அங்கு இருக்கின்ற தலைமை இமாம் என்ற ஏற்பாட்டையும் "மஜ்லிசே ஷுரா" என்ற அமைப்பையும் அகற்றிட வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையும் குடியரசு என்ற அமைப்பும் போதும் என்றாக்குவது.

இவர்களைப் பயன்படுத்தி, இஸ்லாமிய முறையை அழித்துவிட்டு, தனக்கு வேண்டிய வர்களை ஆட்சியில் அமர்த்தலாம் என திட்டமிடுகின்றன அமெரிக்காவும் இஸ்ரேலும்.

தங்களுக்கு வேண்டியவர்களை ஆட்சியில் அமர்த்திவிட்டால் ஈரானிடமிருக்கும் ஆயுதங்கள், தங்களுக்கு எதிராகத் திரும்பாது முடிந்தால் அந்த ஆயுதங்களை நிரம்பவே விலை வந்து தங்களுடையதாக ஆக்கிடலாம் என்பதும் அமெரிக்கா, இஸ்ரேல், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் இலக்கு.

ஈரான் என்ற அச்சம் போய்விடும், அனைத்தும் தங்களுடையதாக ஆகிவிடும்.

இவற்றிற்கெல்லாம் ஈரானில் கொட்டிக் கிடக்கும் எண்ணெய் வளம் தங்கள் கைவசம் வந்துவிடும். அதேபோல் அங்கே கொட்டிக் கிடக்கும் இயற்கை வளம், இதர வளங்களும் தங்களுடையதாக ஆகிவிடும் என்றே ஆசைப்படு கின்றார்கள்.

இதைத்தான் அதாவது, ஈரானில் வீற்றிருக்கும் இஸ்லாமிய முறையை - இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் இவர்களின் திட்டம். இதையே ஈரானில் ஆட்சி மாற்றம் என்கின்றார்கள்.

இஸ்லாமிய ஆட்சி முறையை பிடுங்கி எறிந்துவிட்டால், பின்னர் ஜனநாயகம், மதச் சார்பின்மை எனப் பேசி, மக்களிடமிருந்து, எல்லா இஸ்லாமியச் சிந்தனைகளையும் காலப் போக்கில் போக்கிடலாம் எனத் திட்டமிட்டுச் செயல்படுகின்றார்கள்.

### அன்றே மேற்கொண்ட முயற்சிகள்

இந்த முயற்சியில் அவர்கள் அதாவது இஸ்லாத்தின் எதிரிகள் - இப்போதுதான் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றில்லை. இஸ்லா மியப் புரட்சி ஏற்பட்ட 1979ஆம் ஆண்டிலிருந்தே செய்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது கடந்த 46 ஆண்டுகளாகவும் செய்து வருகின்றார்கள்.

இதற்காக ஏராளமான பணமும், பொருளும் கொட்டப்படுகின்றன.

*1959*இல் இஸ்லாமியப் புரட்சி முழுமை பெற்று, இஸ்லாமிய ஆட்சியைப் பிரகடனப் படுத்திட இருந்த நேரத்தில் உலகெங்கிலுமிருந்து பல பிரதிநிதிகள் இமாம் கொமைய்னீ அவர்களைக் காண வந்தார்கள்.

இந்தத் தகவல் இமாம் கொமைய்னீ அவர்களிடம் சொல்லப்பட்டது. இந்த உலகப் பிரதிநிதிகளைச் சந்திக்க நேரம் ஒதுக்குமாறு, இமாம் கொமைய்னீ அவர்களிடம் கேட்டார் ஈரானின் பிரதிநிதிகள்.

இமாம் கொமைய்னீ அவர்கள், வந்தவர்களை இஸ்லாமிய முறைப்படி "விருந்தோம்பல்" தந்து தங்கிட வையுங்கள், எல்லோரும் வந்தபின் நான் அவர்களைச் சந்திக்கின்றேன் எனக் கூறிவிட்டார்கள்.

அதேபோல் வந்தவர்களை மிகவும் நன்றாகவே உபசரித்து வைத்தார்கள். இறுதியில் இமாம் கொமைய்னீ அவர்கள், அவர்களைச் சந்தித்தார்கள். அத்தனை பேரையும் ஒரே இடத்திற்கு குழுமச் செய்து,

குழுமிய உலகப் பிரதிநிதிகளுக்கு முதலில் நன்றி சொன்னார்கள் இமாம் அவர்கள். பின்னர் அவர்கள் வந்ததின் நோக்கத்தைக் கேட்டார்கள்.

வந்தவர்கள் இமாம் கொமைய்னீ அவர்களின் சீறிய முயற்சிகளைப் பாராட்டினார்கள். பின்னர் தங்கள் நோக்கத்தை கூறினார்கள்.

அது, மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. மிகவும் மகிழ்ச்சியானது. இனி ஜனநாயகம், மதச் சார்பின்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சியில் அமைக்கப்பட வேண்டும் என்றார்கள். சிலர் ஜனநாயக ஆட்சியில் மேன்மையையும் - மதச் சார்பற்ற ஆட்சியின் மகத்துவத்தையும் எடுத்தோதத் தொடங்கினார்கள்.

அவர்கள் அத்தனை பேர்களின் கருத்து களையும் செவிதாழ்த்திச் செவிமடுத்தார்கள் இமாம் கொமைய்னீ அவர்கள்.

பின்னர் அவர்களுக்குப் பதில் தந்தார்கள் இப்படி :

மன்னராட்சியை நாங்கள் ஒழித்தது, நீங்கள் சொல்லும் ஆட்சியமைப்புகளைக் கொண்டு வருவதற்கல்ல.

நாங்கள் மன்னராட்சியை ஒழிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்களல்ல.

இஸ்லாமிய ஆட்சியை ஈரானில் நிலை நிறுத்த வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம்.

இந்த இலட்சிய ஓட்டத்தில் இங்கே நிலை கொண்டிருந்த மன்னராட்சி பெரிய தடையாக இருந்தது. அதனால் அதை ஒழித்தேன்.

நாங்கள் எப்படி ஆட்சியை நடத்திட வேண்டும் என்பதை திருக்குர்ஆனும் எங்கள் தூதர் (ஸல்) அவர்களும் எங்களுக்கு வழிகாட்டி இருக்கின்றார்கள்.

*1400* ஆண்டுகளாக உலகின் பல்வேறு நாடுகளையும், இஸ்லாமிய நெறிமுறைகளின்படி ஆட்சி செய்த பாரம்பரியம், எங்கள் பாரம் பரியம். அதுமட்டுமின்றி உங்கள் அறிவுரைகள் தேவையில்லை.

நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு ஒன்றி என சுருக்கமாகப் பேசி அனுப்பினார்கள் இமாம் கொமைய்னீ அவர்கள்.

அன்று முதலே மேலை நாடுகள், இஸ்ரேல் அமெரிக்கா முதலானவை.

ஈரானுக்கு எதிரான அரபு நாடுகளும் அணிவகுத்து நிற்கின்றன.

இந்த அரபு நாடுகளிலும், இருப்பது மன்னராட்சி, வம்சாவழி ஆட்சி.

அதற்கு எங்கே ஆபத்து வந்து விடுமோ? எங்கே அங்கும் மக்கள் புரட்சி செய்து விடுவார் களோ என்றே அச்சம்.

இதனால் இந்த அரபு நாடுகள் இஸ்ரேல், அமெரிக்கா ஐரோப்பியா நாடுகளுடன் அணிவகுத்து நிற்கின்றன.

பணத்தை அள்ளிக் கொட்டுகின்றன. அதேபோல் பலவழிகளிலும் இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் உதவி செய்கின்றன.

இப்போது, காஸாவில் ஆயிரக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் கொலை செய்யும் போதுகூட இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் ஆயுத உதவி, உளவு, பெட்ரோல், பணம், ஆகியவற்றை அள்ளிக்கொட்டிக் கொண்டிருக் கின்றன.

ஆக ஈரானில் ஆட்சி கவிழ்ப்பு என்பது என்றும் நடக்காது. இன்ஷாஅல்லாஹ். பொறுத் திருந்து பார்ப்போம்.

- MGM

## யார் இந்த இப்றாஹிம் தரோரா? (வயது 37)

ஆப்ரிக்கக் கண்டம்.

அதில் 54 நாடுகள்

அதில் உள்ள ஒரு நாடு. “புர்கினோ பாஸோ”

அதில் கெரா என்ற இடத்தில் 14-3-1988இல் பிறந்தவர்.

அறிவியல், நில சாஸ்திரம் - இவற்றில் இளம் நிலை பட்டம் பெற்றவர்.

தொடக்கக் காலத்தில் புர்கினோ பாஸோவின் இராணுவத்தில் இணைந்தார்.

பல நாடுகளிலும், இராணுவப் பயிற்சி பெற்றவர். ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் பல நாடுகள் அமைதிப் படையில் பணியாற்றி இருக்கின்றார்.

முதலில் வலதுசாரி சிந்தனைகளுடன் தொடர்பில் இருந்தார். அந்நிலையில், புர்கினோ பாஸோவில் இஸ்லாமிய ஆட்சியை நிலை நாட்டிட உழைத்த இஸ்லாமிய இயக்கங்களுக்கு எதிராக அன்றைய அரசு போர் செய்தது, அதில் இப்றாஹிம் தரோரா கலந்துகொண்டார்.

பின்னர் அங்கு இயங்கிய Association of Muslim students என்ற முஸ்லிம் மாணவர் அமைப்புடன் தொடர்பு கொண்டார், உறுப்பினரானார். அதில் இஸ்லாத்தைப் பற்றிய முழு அறிவையும் பெற்றிருக்கின்றார் என்பதை அவருடைய இப்போதைய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுக்கின்றன.

புர்கினோ பாஸோ பல்வேறு கட்டங்களிலும் இராணுவ ஆட்சியின் கீழ்தான் இருந்தது.

2022இல் அவ்வாறு நடந்த ஆட்சியொன்றை கவிழ்த்துவிட்டு, அந்நாட்டின் குடியரசு தலைவரானார். அவர் பல்வேறு திட்டங்களின் வழி புர்கினோ பாஸோவை வளர்த்து வருகின்றார். அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அடிமைத் தனத்திலிருந்தும், சுரண்டலிலிருந்தும் புர்கினோ பாஸோவை விடுவித்து வருகின்றார். இப்போது உலகமே திருப்பிப் பார்க்கும் தலைவராக ஆகி வருகின்றார்.

தனது வளர்ச்சித் திட்டங்களுக்கு இஸ்லாம்தான் வழிகாட்டுகின்றது என்கின்றார்.

தொழுகை முதலாய இறை வழிபாடுகளில் அதிகமான ஈடுபாடு காட்டி வருகின்றார்.

அவருடைய சாதகளில் சிலவற்றை இங்கே தருகின்றோம்.

**- MGM**



# யார் இந்த இப்ராஹிம் தரோரா?

**மேலை நாடுகளுக்குத் தந்த அதிர்ச்சிகள் புர்கினோ பாஸோ என்ற நாட்டின் ஆட்சியாளர்.**

*அவர் 2022இல் புர்கினோ பாஸோவை கையகப்படுத்தினார். அதன் ஆட்சியாளர் ஆனார். அன்று முதலே தெளிவான பார்வையோடு புர்கினோ பாஸோவை நடத்திக் கொண்டிருக்கின்றார்.*

*இந்தத் தெளிவான பார்வை என்பதன் பொருள், ஆப்பிரிக்காவை மேலைநாட்டு சுரண்டல்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதே!*

**அமெரிக்காவின் மிரட்டல்**

*அமெரிக்காவும், குறிப்பாக பிரான்ஸும்தான் ஆப்பிரிக்க நாடுகளின் இயற்கை வளங்களை கொள்ளை அடித்துக் கொண்டிருந்தனர் பிரான்ஸ் ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள 54 நாடுகளின் மீதும் நடத்திய ஆக்கிரமிப்பிற்கு அளவே இல்லை.*

*இதில் புர்கினோ பாஸோவின் முந்தைய*



**இனி வருவாய் கொட்டும், புர்கினோ பாஸோவின் இதை ஒரு சிறு ஆப்பிரிக்கநாட்டின் உலக அங்காடியின் பிரவேசம் என பொருளாதார வல்லுநர்கள் பாராட்டுகின்றார்கள்.**

ஆட்சியாளர்கள், 4.8 பில்லியன் டாலர்களை IMF என்ற பன்னாட்டு நிதியகத்திடம் கடன் வாங்கி இருந்தார்கள். அந்தக் கடனை திருப்பித் தர வேண்டும், குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள். இல்லையேல், புர்கினோ பாஸோவின் தங்கச் சுரங்கங்களில் 70%-ஐ அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குத் தந்திட வேண்டும். இந்த நிபந்தனையோடுதான் கடன் தரப்பட்டிருந்தது.

இப்போது புர்கினோ பாஸோவின் ஆட்சியை இப்றாஹிம் தரோரா ஏற்றுக்கொண்டதால், உடனேயே அந்தக் கடன்களைத் திருப்பித் தந்திட வேண்டும் என கட்டாயப்படுத்தினார்கள். இல்லையேல் உடனேயே 70% தங்கச் சுரங்கங் களையும் ஒப்படைக்க வேண்டும் என கட்டாயப்படுத் தினார்கள்.

எந்த நிலையிலும் தங்கச் சுரங்கங்களை ஒப்படைக்க மாட்டேன் எனக் கூறினார் இப்றாஹிம் தரோரா.

ஆனால், மேலை நாடுகள் குறிப்பாக, அமெரிக்காவும் பிரான்சும் அதிர்ச்சி அடைந் திடும் அளவில் ஒரு வேலையைச் செய்தார்.

IMF என்ற பன்னாட்டு நிதி அகத்திடம் பெற்றிருந்த 4.8 பில்லியன் கடனையத் திருப்பித் தந்துவிட்டார்.

இது அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் முகத்தில் அறைந்தாற்போல் அமைந்தது.



அதேபோல், இன்னொரு இடியையும் போட்டார். அது, இனி IMF என்ற பன்னாட்டு நிதியகத்திடமிருந்தும், World Bank என்ற உலக வங்கியிடமிருந்தும் கடன் வாங்கிடுவதில்லை என்ற அறிவிப்பு.

**எங்கள் தங்கம் எங்களுக்குச் சொந்தம்**

அத்தோடு பிரிதோர் அதிரடி, அது புர்கினோ பாஸோவின் தங்கச் சுரங்கங்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கினார்.

அரசின் சார்பில் பல தங்கச் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவினார். தங்கத் தாதுவை ஏற்றுமதி செய்யமாட்டோம் என்றார்.

இந்தத் தங்கச் சுத்திகரிப்பு ஆலைகள், தங்கச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் தாது பொருள்களை, தங்கம் வேறு இதரப் பொருள்கள் வேறு, எனப் பிரிக்கும். இந்தத் தங்கத்தை இனிமேல் தங்கத் தாதுவிற்குப் பதிலாக ஏற்றுமதி செய்து புர்கினோ பாஸோவின் பொருளாதாரத்தை வளர்க்கப்போகின்றேன் என அறிவித்தார்.

இனி வருவாய் கொட்டும், புர்கினோ பாஸோவின் இதை ஒரு சிறு ஆப்பிரிக்கநாட்டின் உலக அங்காடியின் பிரவேசம் என பொருளாதார வல்லுநர்கள் பாராட்டுகின் றார்கள்.

**இதர வளங்கள்**

அதேபோல் ஆப்பிரிக்காவின் இதர வளங்கள் மீது மேலை நாடுகள் நடத்தி வரும் கொள்ளைகளைத் தடுக்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றார்.

ஆப்பிரிக்காவின் இயற்கை வளங்கள் உலகில் மிகவும் முக்கியமான சொத்துக்கள். எல்லா நாடுகளிலும் கிடைக்காது.

அவையாவன : யுரோனியம், டைமண்ட், பெட்ரோல், தங்கம் என்பன. இத்தனை வளம் வரம்பெற்ற நாடு ஏன் வறுமையில் வாட வேண்டம்? அதனை கொள்ளை அடிப்பவர்கள் வாழ வேண்டும். இது என்ன நீதி என்றே கேட்டு

வருகின்றார்.

அமெரிக்கா சில சில்லரைக் காசுகளைக் கடனாகத் தந்து 60% பெட்ரோலை கொள்ளை யடித்து வந்தது. அதைத் தடுத்துவிட்டார்.

உடனேயே அமெரிக்கா அவரை 'தீவிரவாதி' என அறிவித்தது. அவர் ஒரு சர்வாதிகாரி என்றது. நாங்கள் பெட்ரோலை எடுப்பதைத் தடுத்தால் புர்கனோ பாஸோவை தாக்குவோம், இப்றாஹிம் தரோராவை கொலை செய்வோம் என்றது. சில கொலை முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

**எதிர் சவால்**

உன்னைப்போல் சுரண்டல் பேர்வழிகளுக் கும், கொலைகாரர்களுக்கும், அஞ்சுபவன் நானல்ல என்றார் பொட்டில் அறைந்தார்போல்.

ஆனால் அவரைக் கொலை செய்திட எல்லா முயற்சிகளையும் அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது. ரஷ்ய அதிபர் புட்டின் புர்கினோ பாஸோவின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற் றுள்ளார். இப்றாஹிம் தரோரா பொருளாதார விடுதலையை நோக்கிப் பயணிக்கின்றார்.

இந்தப் பொருளாதார விடுதலை அல்லது சுதந்திரத்தின் அடுத்தக் கட்டமாக, விவசா யத்தைப் பெருக்கி வருகின்றார்.

**ஆறுதலாக அமைந்த ஆறு**

ஒரு பெரும் ஆற்றை 90 பில்லியன் டாலர்கள் செலவில் உருவாக்கியுள்ளார். புர்கினோ பாஸோ வைச் சுற்றிலும் நிலபரப்புத்தான். கடலில்லை. (Land Locked) ஒரு செயற்கை கடலையே உருவாக்கிவிட்டார் எனக் கூறுகின்றார்கள். 276 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆறு.

இதனால் சுற்றியுள்ள வறண்ட பெருவெளிகள் சோலை வனமாக ஆகி வருகின்றன.

வானத்தில் கண்களைப் பதித்து நிலத்தில் கைகளை வைத்துக்கொண்டு, மழை எப்போது கொட்டும் எனக்காத்திருந்த மக்களுக்கு இந்த ஆறு ஒரு அருளாக அமைந்த ஆறு. இதனால் ஆற்றின் இருமருங்கும் விவசாயம் கொழித்து வளர்கின்றது.

வறட்சிக்கும், வறுமைக்கும் பயந்து புர்கினோ பாஸோவை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும், அங்கே வந்தார்கள்.

"விவசாயம் வளர்ந்தது. கூடவே வேலை வாய்ப்பும் வளர்ந்தது.



**Solar Power என்ற சூரிய ஒளி மின்சாரம்**

சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறையைப் பரவலாக்கினார். பல நகரங்கள் சூரிய மின் சத்தியால் மட்டுமே இயங்கும் என்ற அளவுக்கு சூரிய மின்சக்தி உற்பத்தியைப் பெருக்கினார்.

பல வாய்க்கால்களை வெட்டி விவசாயத் திற்கு கீழ்வரும் நிலப்பரப்பினை அதிகப்படுத் தினார். இந்த வாய்க்கால்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிட சூரிய ஒளியில் இயங்கும் மோட் டார்களைப் பொருத்தினார். இவை நிலத்தடி நீரையும், இப்போது செயற்கை ஆற்றுத் தண்ணீ ரையும், இதர நீர்ச் சுனைகளின் தண்ணீரையும் இந்த வாய்க்கால்களில் பாய்ச்சிக் கொண்டே இருக்கும்.

இப்படி ஐந்து லட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பை விவசாயத்தின் கீழ் கொண்டு வந்துள்ளார். (11 லட்சம் ஏக்கர்)

இதனால் பெருகிவரும் வேலை வாய்ப்புக்கு அங்கே ஆளில்லை. அண்டை நாடுகளிலிருந்து வருகின்றார்கள்.

விவசாயிகளுக்கு, எல்லா விவசாய இயந்திரங் களையும் குறைந்த விலையில் தேவைப்படும் போதெல்லாம் இலவசமாகவும் வழங்கி வருகின்றார். விவசாயம் பெருகி, சோயாபீன்ஸ் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2.6 பில்லியன் டாலருக்கு சவூதி அரேபியாவுக்கு மட்டும் ஏற்றுமதியாகி உள்ளது.

**உள்ளூர் தொழிற்சாலைகள்**

சூரிய ஒளியைக் கொண்டு இயங்கிவரும் உள்ளூர் சிற்றாலைகள் பலவற்றைக் கட்டி யெழுப்பி வருகின்றார்.

இரும்பை உருவாக்கும் தொழிற்சாலைகள் பலவற்றை வளர்த்துள்ளார்.

புர்கினோ பாஸோவில் ஏராளமான இரும்பு தாது கொட்டிக்கிடக்கின்றது. நிலத்தில் இவை

அனைத்தையும், இப்போது அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்தி வருகின்றார்.

புர்கினோ பாஸோவிற்கு தேவைப்படும் அளவை விஞ்சி இரும்பு உற்பத்தியாகின்றது. இதனால் ஏற்றுமதி பெருகி வருகின்றது. அந்நிய செலாவணி பெருகி வருகின்றது. இவற்றால் வேலை வாய்ப்புகள் பிரவாகமெடுக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐய்யமில்லை. இதனை உலக நோக்கர்கள், பொருளாதார நிபுணர்கள், ஒரு ஆப்பிரிக்க நாடு உலக அங்காடியை உலுக்கி வருகின்றது என்கின்றார்கள்.

வேலை வாய்ப்புகள் பெருகி வருவதால் பொருளாதார வளர்ச்சி வேகமாக உயர்ந்து வருகின்றன. எந்தத் திட்டத்திற்கும் நிதி இல்லை என்ற நிலை இல்லை.

### பொருளாதார விடுதலை

அனைத்திலும் தன்னிறைவு - என்ற இரு முழக்கங்கள் நடைமுயையில் - நித்திய வாழ்க்கையில் செயலில் வந்துவிட்டன.

பொருளாதார தன்னிறைவு மட்டுந்தான் புர்கினோ பாஸோவின் முழு விடுதலையை நோக்கி இட்டுச் செல்லும்.

எப்போதுமே உலக நாடுகளின் கடன்களை நம்பி வாழும் நாடும், மக்களும் கைவிலங்கு பூட்டப் பெற்றவர்களாகவே, வாழ்வார்கள் என்பது இப்றாஹிம் தரோராவின் பிரச்சாரம். அதனால் பொருளாதார விடுதலையை இலட்சியமாகக் கொண்டு புர்கினோ பாஸோவை வேகமாக வளர்த்து வருகின்றார்.

### போக்குவரத்து வசதிகள்

இந்த வேகமான வளர்ச்சியை இன்னும் வேகப்படுத்துவது, புர்கினோ பாஸோவை ஆப்பிரிக்க கண்டம் முழுவதும் இணைக்கும் சாலைகள், ரெயில் தண்டவாளங்கள்.

உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமே ஒரு நாட்டை முழு முன்னேற்றத்தின் பால் கொண்டு சென்றுவிடாது.

ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்களும், கழனிகளில் விளையும் காய்கனிகளும், அங்காடிகளுக்கு சென்று மக்களின் கைகளை அடைந்திட வேண்டும். அதற்கான போக்குவரத்து வசதிகள் வாய்க்கப்பெற வேண்டும்.

இதிலும் எந்தக் குறையுமில்லாமல், அதிவேகமாக சாலைகளை அமைக்கின்றார் இப்ராஹிம்



தரோரா. ஆலைகளையும் சாலைகளையும் இணைக்கின்றார். கழனிகளையும் அங்காடியையும் இணைக்கின்றார்.

சூரிய ஒளியால் இயங்கும் லாரிகள், ரெயில்கள் உற்பத்தியாகும் பொருள்களை அங்காடிக்கும் மக்களுக்கும், அதிகப் பொருள் செலவின்றி கொண்டு சேர்த்து விடுகின்றன. இதனால் பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்திலிருந்தும் அமெரிக்காவின் பொருளாதார சுரண்டல்களிலிருந்தும் வேகமாக விடுதலை அடைந்து வருகின்றது புர்கினோ பாஸோ, மக்களின் வாழ்க்கை ஒளிமயமாகின்றது.

### உலக நிபுணர்களின் வருகை

இப்றாஹிம் தரோராவின் அதிசயமான திட்டங்கள், அவை நிறைவேற்றப்படும் வேகம், இவையெல்லாம் உலகெங்கும் வாழும் விஞ்ஞானிகளையும், பொருளாதார நிபுணர்களையும் அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளன.

அவர்கள் புர்கினோ பாஸோவை நோக்கிப் படை எடுத்து வருகின்றார்கள்.

பல யதார்த்தங்களைக் கண்டு ஆச்சரியப்படுகின்றார்கள்.

அவற்றால் கவரப்பட்டு, தங்களால் இயன்ற ஆலோசனைகளையும் வழங்குகின்றார்கள். அவர்கள் ஆலோசனைகளுக்கும், பாராட்டுகளுக்கும் ஒன்றுபோல் நன்றி சொல்லும் இப்றாஹிம் தரோரா, என் மக்களுக்கு உங்கள் ஆலோசனைகளை வழங்குங்கள், உங்கள் அறிவுசால் கல்வியை வழங்குங்கள், எங்களைத் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்குங்கள் என்கின்றார்கள்.

எல்லாத்திலும் தன் மக்கள் தன்னிறைவு என்பதே நோக்கம் இப்றாஹிம் தராரோ.

# இப்ராஹிம் தரோரா கொல்லத் துடிக்கும் அமெரிக்கா..!



**புர்கினோ** பாஸோவை காலாகாலமாக கொள்ளை அடித்த நாடுகள் இரண்டு.

ஒன்று பிரான்ஸ், மற்றொன்று அமெரிக்கா, ஆப்பிரிக்கா கண்டத்தை கொள்ளையடித்ததில் பிரான்ஸ்தான் முதலிடத்தை வகிக்கின்றது. பல நூற்றாண்டுகளாக ஆப்பிரிக்க நாடுகளை சந்தடியில்லாமல் சுரண்டி வருகின்றது.

உலகம் கண்டுகொள்ள இயலாத அளவுக்கு அமைதி மயமானது பிரான்சின் சுரண்டல்கள்.

பிரான்ஸ் பொருளாதார ரீதியாக மட்டும் கொள்ளை அடிக்கவில்லை. அதாவது ஆப்பிரிக்க நாட்டின், கனிமங்களையும், இயற்கை வளங் களையும் மட்டுந்தான் கொள்ளை அடித்தது என்றில்லை. அங்கே அதுபல பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியதால், கலாச்சார ரீதியாகவும் பல தாக்கங்களை அந்த மக்களிடம் ஏற்படுத்தி இருந்தது.

CFA Fronc சிஎப்ஏ. பிராண்க் என்ற நாணயம் அல்லது நோட்டுதான் 14 ஆப்பிரிக்க நாடுகளிலிருந்த நோட்டு.

இப்படி பிரான்ஸ் நாட்டு ஆதிக்கம் அனைத்தையும் தழுவியதாக இருந்தது.

மத ரீதியாக 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யிலேயே இஸ்லாம் ஆப்பிரிக்காவுக்குள் நுழைந்தது. (இதுபற்றிய விரிவான வரலாறு பின்னர் வைகறை வெளிச்சத்தில் இடம்பெறும்) அதை இஸ்லாத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, கிருஸ்தவத்திற்கு தாராளமாக, இடத்தையும், பணத்தையும் அள்ளித் தந்தது பிரான்ஸ். இதனால் பிரான்ஸ் நாட்டின், சுரண்டல்கள், இவை யெல்லாம் பெரிதாகக் கண்டுகொள்ளப்பட வில்லை.

இப்போது இப்றாஹீம் தரோரா அவர்கள் பிரான்ஸ் நாட்டின் பல்வேறு தாக்கங்களிலிருந்து மெல்ல மெல்ல அந்த மக்களை விடுவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

முழுமையாக பிரான்ஸ்-இன் தாக்கத்தி லிருந்து புர்கினோ பாஸோ விடுபட 2027ஆம் ஆண்டுதான் இலக்கு.

அதையும் ஓர் தொலைநோக்கோடு செய்து கொண்டிருக்கின்றார்கள் இப்றாஹீம் தரோரா.

இதனால்தான் அவரை அமைதியானவர், பொறுமையானவர், ஆழமானவர், நடைமுயைில் எதையும் சாதிப்பவர் எனப் பாராட்டுகின்றது. புர்கினோ பாஸோ வந்த ஆய்வாளர்கள்.

### அமெரிக்காவின் அட்டூழியங்கள்

அமெரிக்காவைப் பொறுத்தவரை நிலையே வேறு. இந்த ஆப்பிரிக்க காடுகளிலிருந்துதான், தங்களுக்கு வேண்டிய “Man Power” என்ற மனித ஆற்றலைப் பெற்று வளர்ந்தது அமெரிக்க!

ஆப்பிரிக்கக் காடுகளில் உழைக்கச் சென்ற மக்களை அப்படியே கடத்திவந்து அமெரிக் காவின் சந்தைகளில் விற்பனை செய்தார்கள்.

இப்படி ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வந்தவர் களை விற்பனை செய்யும் சந்தைகளைத்தான் “அடிமைச் சந்தைகள்” என அழைத்தார்கள்.

அடிமைச் சந்தைகளில், அவர்களைத் குடும்பத்தோடு விற்பனை செய்தார்கள். சில நேரங்களில் குடும்பங்களை உருக்குலைத்து, ஆண்களைத் தனியாக, பெண்களைத் தனியாக குழந்தைகளைத் தனியாக என விற்பனை செய்தார்கள்.

இப்படி தனிமைப்படுத்தப்படும் பெண்களை அவர்கள் விற்பனையாகும் வரை தங்கள் மிருக இச்சைகளைத் தணித்துக்கொள்ள பயன்படுத்தி னார்கள்.

அவர்கள் மீது திணித்த பாலியல் கொடுமை களுக்கு அளவே இல்லை!

அவர்கள் அதாவது, அந்த கறுப்பின மக்கள் முஸ்லிம்களாகத்தான் இருந்தார்கள். அவர்களைக் கடத்தி வந்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றி விற்பனை செய்தார்கள்.


இப்படிக் கடத்தி வரப்பட்டவர்களில் ஒருவர்தான் அமெரிக்காவின் பிரபல எழுத்தாளர் அலெக்ஸ் கெய்லி. அவர் தன்னுடைய தொன்மையைத் தேடிச் சென்றபோதுதான் ஏழு தலைமுறைக்கு முன்னர் ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அப்போது தனது மூதாதையர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள் என்றும் கண்டெடுத்தார். பின்னர் அதனை ஒரு புதின மாகத்தந்தார். அந்தப் புதினந்தான் “வேர்கள்” ROOTS என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

இந்த புதினத்திற்கான தூண்டுதலை தந்தவர் மால்கம்-X இந்தத் தகவல்கள் எல்லாமல் மால்கம்-X என்ற நூலில் தரப்பட்டுள்ளது.

ஏழு பதிப்புகளைக் கடந்து உலாவந்து கொண்டிருக்கின்றது. இதனை நமது வேர்கள் பதிப்பகந்தான் வெளியிட்டிருக்கின்றது.


இன்றளவும் அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அதே அடிமைகளாகத்தான் நடத்தப்படு கின்றார்கள். வீதியிலே வைத்துக் கொலை செய்யப்படுகின்றார்கள். அந்த வகையில் உலகில் அதிகமாக அடிமைகள் வாழும் நாடு, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என போற்றப்படும் அமெரிக்காவில்தான்.

கறுப்பினத்தைச் சார்ந்த பேரக் ஒபாமா அமெரிக்காவின் குடியரசு தலைவராக இருந்த போதும், இதே அடிமைத்தனம் நடப்பிலிருந்தது. தினமும் கொலை செய்யப்படுவதும் நடந்தது. இன்று அவர்கள் அமெரிக்காவில் ஆப்பிரிக்கன்-அமெரிகன் African-American என்றுதான் அழைக்கப்படுகின்றார்கள்.


அலெக்ஸ் கெய்லி

இந்த வரலாறுகளை யெல்லாம் நாம் “வைகறை வெளிச்சம்” மாதஇதழில் அவ்வப் போது விரிவாக வெளி யிட்டு வருகின்றோம்.

அன்றும், இன்றும் நாள்களில் அமெரிக் காவின் முன்னேற்றத் திற்காக உழைத்த அடிமைகள் கறுப்பின மக்கள், ஆப்பிரிகாவிலி ருந்து கடத்தி வரப்பட்டவர்கள் என்பதை அறிந்தோம், பரப்பி வந்தோம்.



இன்றைய நாள் வரலாற்றிலிருந்து இன்னொரு உண்மையும் வெளிப்படுகின்றது.

**அடிமைகள் மட்டுமல்ல**

அது, அங்கிலிருந்து “Man Power” என்ற மனித ஆற்றலை மட்டும் கடத்திவரவில்லை. அவர்கள் அங்கிருந்த இயற்கை வளங்களையும் சேர்த்தே கொள்ளை அடித்து வந்திருக்கின்றார்கள்.

இப்ராஹீம் தரோரா அதனை மிகவும் தெளிவாகவே உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார்.

ஆப்பிரிக்காவின் குறிப்பாக புர்கினோ பாஸோவின் எண்ணெய் வளங்களில் அதாவது அங்கு கிடைக்கும் பெட்ரோலியத்தில் 60% சதவீதம் அமெரிக்காவிற்குச் சொந்தம்.

இதற்கு மலிவான விலைதான் தருகின்றார்கள் அமெரிக்கர்கள். எவ்வளவு எண்ணெய்யை - பெட்ரோலை ஆழ்ந்து எடுக்கின்றார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

இந்த பெட்ரோல் வளத்தை அமெரிக்காவின் பிடியிலிருந்து மீட்க ஆணையிட்டார் இப்ராஹீம் தரோரா. உடனேயே அமெரிக்கா இப்ராஹீம் தரோராவை கொலை செய்யவும், புர்கினோ பாஸோவை ஆக்கிரமிக்கவும் முயற்சிகளை மேற்கொண்டது.

**ரஷ்யா-சீனா-ஈரான்**

48 மணிநேரம் என்றொரு கெடுவையும் விதித்தது. உடனேயே ரஷ்யாவும், சீனாவும், வடகொரியாவும் புர்கினோ பாஸோவின் பாதுகாப்பை கையிலெடுத்தன. ரஷ்யாவும், சீனாவும் தங்களுடைய வான்வெளி பாதுகாப்பு களையும் ஆயுத ஏற்பாடுகளைக் கொண்டு வந்தது. உடனேயே எல்லா பாதுகாப்பு ஏற்பாடு களையும் செய்தன. அமெரிக்கா தன்னுடைய முயற்சிகளை கைவிட்டது.

தனக்கென எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து தந்த சீனாவிடமும், ரஷ்யாவிடமும் புர்கினோ பாஸோ மக்களை தயார் செய்து எங்களையும் இதில் பாதுகாப்பில் தன்னிறைவு உடையவர்களாக ஆக்கிடுங்கள் என்றே இப்ராஹீம் தரோரா கேட்டார்.

ஈரானும் தனது (மிசில்களை) ஏவுகனைகளை அனுப்பித் தந்தது.

“ஈரானிடம்” ஏவுகனை நுனுக்கங்களை புர்கினோ பாஸோ மக்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றார்.

இப்போது ஈரான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் புர்கினோ பாஸோவின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு அந்த மக்களை முழு மூச்சாக தயாரித்து வருகின்றன. இதனால் ஈரான், சீனா, ரஷ்யா, வடகொரியா - புர்கினோ பாஸோ என்றொரு புது அணி உலகில் உருவாகியுள்ளது.

இப்ராஹீம் தரோராவும் இராணுவத்தில் இருந்தவர். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் படையில் அங்கம் வகித்தவர் என்பது இங்கே நினைகூரத் தக்கது.

**தொடரும் ஆபத்து**

அமெரிக்காவும் பிரான்ஸும்தான் இப்போது இப்ராஹீம் தரோராவின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுபவை. இந்த இரு நாடுகளின் உளவுத்துறைகளும் முழு அளவில் ஆப்பிரிக்கக் கண்டத்தில் இயங்கி வருகின்றன. இவற்றால் இப்ராஹீம் தரோராவின் உயிருக்கு ஆபத்துகள் இருக்கின்றன.

**இஸ்ரேல்**

சர்வதேச போர்க் குற்றவாளி இஸ்ரேல் இப்போதைய பிரதமர் நெதன்யாஹு. இவர் இடையில் ஒரு இரகசிய கடிதத்தை இப்றாஹீம் தரோராவுக்கு அனுப்பினார்.

அதில் இப்றாஹீம் தரோரா பாலஸ்தீன பிரச்னையைப் பற்றிப் பேசக்கூடாது என்றும், இஸ்ரேலின் பணத்தை புர்கினோ பாஸோவில் முதலீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவற்றிற்கெல்லாம் சன்மானமாக 1.2 பில்லியன் டாலர்களைத் தருவேன் என்றும் ஆசைக் காட்டினார்.

இதனால் மிகவும் ஆத்திரமடைந்த இப்றாஹீம் தரோரா, இஸ்ரேலின் எந்த முதலீடும் தேவையில்லை என்றார். ஏற்கெனவே புர்கினோ பாஸோவில் இருந்த இஸ்ரேலிய கம்பெனிகளையும் மூடிவிட்டார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளையும், படுகொலைகளையும் கண்டிக்கத் தொடங்கினார்.

பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் உளவுத்துறைப் போலவே மொசாத்தும், இப்றாஹீம் தரோராவை குறி வைக்கின்றது. அல்லாஹ் பாதுகாப்பான்.

**- MGM**




# தமிழகத்தில் 30 லட்சம் வாக்காளர்கள் காணவில்லை

## டீஸ்டா செட்டல்வாட்

**Democracy Door No. 0** என்ற தலைப்பில், கடந்த ஆகஸ்டு 15ஆம் தேதி சென்னை தேனாம்பேட்டையில் உள்ள, அன்பகம் அரங்கத்தில், பா.ஜ.க. மற்றும் தேர்தல் ஆணையத்தின் ஓட்டு திருட்டுகளை பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு பேச்சாளர்களாக, காங்கிரஸ் எம்.எல்.ஏ. செல்வ பெருந்தகை அவர்களும், சமூக செயற்பாட்டாளர் மற்றும் வழக்கறிஞர் டீஸ்டா செட்டல்வாட் அவர்களும் கலந்துகொண்டனர்.

மேலும், ராஸ்டிரிய ஜனதா தள் கட்சியின் எம்.பி. மனோஜ் ஜா அவர்களும், ஓய்வு பெற்ற IAS அதிகாரியான Dr.தேவசகாயம் அவர்களும் இணையதளம் வாயிலாக கலந்துகொண்டு பேசினார்கள்.

வட மாநிலங்களில் நடந்த வாக்கு திருட்டுகளை பாஜகவும், தேர்தல் ஆணையமும் சேர்ந்து செய்த தகிடுத்தத்தங்களையெல்லாம் அம்பலப்படுத்தும் விதத்தில் நிகழ்ச்சியின் போக்கு இருந்தாலும், டீஸ்டா செட்டல்வாட்டின் உரை தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியையும், விவாதத்தையும் கிளப்பியுள்ளது.

**30 லட்சம் வாக்காளர்கள் தமிழகத்தில் காணவில்லை**

பீகார் மாநிலத்தில் “சிறப்பு தீவிர மறு ஆய்வு” (Special Intensive Revision) என்ற பெயரில் பா.ஜ.க. வெற்றி பெறுவதற்கேற்ப வாக்காளர் பட்டியலை மறு ஆய்வு செய்துள்ள இந்திய தேர்தல் ஆணையம், அதிகாரப்பூர்வமாகவே 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியுள்ளது.

இது இந்தியா முழுவதும் பெரும் பேசு பொருளாகியுள்ள நிலையில், தமிழ்நாட்டிலும் கடந்த தேர்தல்களின் போது 30 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்பதாக சமூக செயற்பாட்டாளர் டீஸ்டா செட்டல்வாட் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

2016 சட்டமன்றத் தேர்தலின் போது தமிழ் நாட்டில் வாக்காளர்களின் எண்ணிக்கை 5.77 கோடி.

2019 மக்களவைத் தேர்தலில் புதிய வாக்காளர்களையும் சேர்த்து மொத்தம் 6.24 கோடி பேர்.

2021 சட்டமன்ற தேர்தலில் இந்த எண்ணிக்கை 6.29 கோடியாக அதிகரித்தது.

ஆக சராசரியாக 2016, 2019-ஆம் ஆண்டுகளில் 40 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்.

ஆனால், 2021 சட்டமன்றத் தேர்தலுக்கும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடையிலான எண்ணிக்கையை ஒப்பிடும்போது வெறும் ஐந்து லட்சம் வாக்காளர்கள் மட்டும் தான் அதிகரித்துள்ளனர்.

இதன் மூலம் இந்த இடைப்பட்ட காலத்தில் மட்டும் சுமார் 30 லட்சதிற்கும் மேலான வாக்காளர்கள் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. இந்த 30 லட்சம் வாக்காளர்கள் எவ்வாறு மாயமானார்கள்? இதன் பின்னணி என்ன? இதை தமிழ்நாட்டு மக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டிய தருணமிது.


குறிப்பாக, 2016-ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் ஆணையத்தின் படிவம் 6,7-இன் தகவல்களை நாம் கேட்டுப்பெற வேண்டும். 2016 முதல் 2024-ஆம் ஆண்டு வரை 76 லட்சம் வாக்காளர்கள் வரை நீக்கப்பட்டிருக்கலாம் என்று டாக்டர் கார்க் (Dr Pyara Lal Garg) கூறுகிறார். எனவே இந்த விசயத்தில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் மக்களும் தீவிர கவனம் செலுத்துவதோடு கடந்த ஐந்து தேர்தல்களின் வாக்

காளர்கள் பட்டியலையும் ஆய்வு செய்ய வேண்டும். இல்லையென்றால், 2026 சட்டமன்றத் தேர்தலும் உங்களுக்கு எளிதாக இருக்காது.

இவ்வாறு டீஸ்டா செட்டல்வாட் தமிழ் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

Source : https://www.youtube.com/@Peralai/videos

**- Adv. Jasmin Fathima.B.Sc., B.Ed, LLM.,**



# முகமது முஸ்லிம்களுக்கு மட்டுமே சொந்தமானவரல்ல (மீலாது விழாவில் பெரியார்)

எனது அன்பார்ந்த இந்து முஸ்லீம் சகோதரர்களே!

இன்றைய தினமானது ஒரு பெரிய மகானின் பிறந்த தினமாகக் கொண்டாடப்படும் தின மாகும். ஆனால், அம்மகான் முகமதியர்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் என்றும், ஆதலால் அவர்கள் மாத்திரம்தான் அம்மகானின் பிறந்த நாள் கொண்டாட உரிமையுடையவர்களென்றும் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் அக்கூட் டத்தில் ஒரு இந்து என்பவனாகிய நான் எப்படித் தலைமை வகிக்கக் கூடுமென்றுகூட பலர் கருதலாம்.

மேலும் இவற்றிற்கு நான் சமாதானம் கூறும்போது எனது இந்து சகோதரர்கள் என்பவர்கள் பலர் என் மீதும் சந்தேகப்பட்டு நான் மகமதியர்களுக்கோ, மகமதிய மதத்திற்கோ வக்காலத்து வாங்கிப் பேசுவதாகவும் கருதலாம் என்றாலும் இந்துக்கள் என்பவர்கள் என்னைப் பற்றி எப்படிக் கருதுகிறார்கள் என்பதைப் பற்றி நான் சற்றும் கவலைப்படாமல் எனது மகமதிய சகோதரர்கள் என்னை இவ்விழாவில் கலந்துகொள்ள சந்தர்ப்ப மளித்ததுடன், மிகப்பெருமையான இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தையும் எனக்களித்ததற்கு முதன் முதலாக நான் என் மனப்பூர்வமான நன்றியறிதலை எனது முஸ்லீம் சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மதம்?**

சகோதரர்களே! நான் மதங்கள் என்பவைகளையெல்லாம் மக்களின் இவ்வுலக வாழ்க்கை நலத்திற்கும், இன்ப அனுபவத்திற்கும் அனுகூலமாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு அவ்வக்காலத்திய அறிஞர் களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் என்றுதான் கருதுகின்றவனேயல்லாமல், அவற்றை ஒரு “ஆத்மார்த்த சாதனம்“ என்றோ, “தெய்வீகத் தன்மை”யுடைய தென்றோ, இவ்வுலக வாழ்க்கைக்கு மேற்பட்ட ஏதோ ஒரு கதிக்கு மார்க்கமென்றோ நான் சிறிதும் கருதுவதும் இல்லை; அதைப் பற்றி நான் சிறிதும் கவலை கொள்ளுவதுமில்லை. அப்படி வேறு யாராவது கருதுவதாய் இருந்தாலும் கூட இவ்வுலக வாழ்க்கையின் அனுபவத்தைப் பொறுத்துத்தான் அத் “தெய்வீக கதிகள்” என்பவைகளின் பலன்களும் இருக்கக் கூடுமே ஒழிய அதற்கு விபரீதமாய் இருக்க முடியாது. ஆதலால் அதற்கென்று வேறு முயற்சிகள் வேண்டாம் என்றே அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்லுவது வழக்கம். மற்றும் அதுபோலவே தான் எந்த மதக் கொள்கைகளையும் ஒரு கடவுள் உண்டாக்கினார் என்றோ அது எப்போதைக்கும் பொருத்தமான தென்றோ, அவற்றில் ஒரு சிறிது கூட கால தேச வர்த்தமானத்தை அனுசரித்து மாற்றக்கூடாதது என்றோ நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளுவதுமில்லை. அதுபோலவே

எல்லா மதத் தலைவர்கள் என்பவர்களைப் பற்றியும் கூட நான் அவர்களை ஒரு பொதுநல சேவைக்காரர் என்றும், மக்களிடம் அன்பும் இரக்கமும் கொண்ட பெரியார் என்றும் உலக நன்மைக்காக தன்னலம் விடுத்து பிறர் நலத்திற் காகவே உழைத்த உத்தமத் தியாகிகள் என்றும் தான் நான் கருதுவதே தவிர, மதத் தலைவர்களை எல்லாம் கடவுள் என்பவர் என்றோ, கடவுளால் அனுப்பப்பட்டவர் என்றோ, கடவுள் அவதாரம் என்றோ, நான் சிறிதும் கருதுவதில்லை.

ஏனெனில், உலகில் பல மதங்களும், பல மதக் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரணா கவும், ஒருவருக்கொருவர் ஒப்புக்கொள்ள முடியாமலிருக்கும்போது ஒரே கடவுள் இத்தனை மதங்களையும் உண்டாக்கி இருப்பாரென்று எப்படி ஒப்புக் கொள்ள முடியுமென்று தோன்று வதாலேயேதான், இது ஒருபுறமிருந்தாலும், மற்றொரு புறத்தில் இந்துமதத் தலைவர்கள் மாத்திரம் கடவுளாலேயே அனுப்பப்பட்டவர் களென்று கருதுகின்றவர்களுக்கு வேறு சமாதானம் என்ன வென்றால், “எல்லா படைப்பும் எல்லா தோற்றமும் எல்லா மக்களும் கடவுளால் உண்டாக்கப்பட்டது” என்று சொல்லப்படுகையில் ஒரு சிலருக்கு மாத்திரம் கடவுள் அவதாரம், கடவுளால் அனுப்பப்பட்ட வர்கள் என்கின்ற பேர் எப்படிப் பொருந்தும் என்பதே நமது பதிலாகும். இப்படி இருக்க ஒரு சிலரை மாத்திரம் மக்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்றும், அவதாரபுருஷர்கள் என்றும், கடவுளால் அனுப்பியவர்கள் என்றும் ஏன் சொல்லுகின்றார்கள் என்று பார்ப்போ மானால், அதற்கும் ஒரு சமாதானம் இருக்கின்ற தென்பதே நமது அபிப்பிராயம்.

என்னவெனில் நாம் பொதுவாக மக்களின் சக்தியும் குணமும் இவ்வளவுதான் என்று ஒரு அளவுக்குட்படுத்தி நிர்ணயம் செய்து வைத்திருக் கின்றோம். அந்த அளவுக்கு மேற்பட்ட சக்தியையும் குணத்தையும் எங்காவது கண்டு அது மனிதத் தன்மைக்கு மீறியது என்பதாக நாம் முடிவு செய்யும்போது, சாதாரணமாக நமது வாழ்வில் மனிதத்தன்மைக்கு மீறினதாகக் கருதும் எதையும் நாம் ‘தெய்வத்தன்மை’ என்று கருதுகின்ற வழக்கமாய் விட்டதால் இதையும் “தெய்வத்தன்மை” என்று சொல்ல வேண்டியவர் களாகிவிடுகின்றோம். எப்படியானாலும் அப்படிப்பட்டவர்கள் பெரியார்கள் என்பதிலும், பாராட்டப்படவும், கொண்டாடவும், மரியாதை செய்யப்படவும் உரியவர்கள் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனால் அவர்களைக் கொண்டாடுவது என்பது அவர்களைப் போன்ற உருவத்தை ஊர்வலம் செய்வதற்கோ, பூஜை, அபிடேகம், உற்சவம் செய்வதற்கோ, அவர்கள் மீது பாட்டு, பஜனை பாடுவதற்கோ, கொண்டாட்டம் செய்வது என்பது பைத்தியக்காரத்தனம் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி வேறு எதற்கு என்போமானால் நாம் பெரியார் என்றும், மனிதத்தன்மைக்கு மீறினவர் என்றும் ஒப்புக்கொண்ட ஒருவரை பின்பற்றவும், அவரது உபதேசப்படி நடக்கவும் மற்றும் அந்தப்படி மக்களை நடப்பிக்கச் செய்ய முயற்சிக்கவுமான காரியங்களுக்கேதான் அவ்வித பெரியாரின் கொண்டாட்டங்களை உபயோ கிக்க வேண்டும் என்பேன்.

எனவே, இன்று நாம் கொண்டாடும் திரு. மகமது நபி அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டமானது நான் முன்சொன்ன முறையில் கொண்டாடத்தக்க ஒரு ஒப்பற்ற பெரியாரின் கொண்டாட்டம் என்றே சொல்லு வேன். இன்னமும் விளக்கமாகச் ‘சொல்வதானால் இப்போது நம்மால் மதத்தலைவர்கள் என்று சொல்லப்படும் பெரியார்களில் எல்லாம் திரு.மகமது நபி அவர்கள் மேலானவர்கள் என்றும், எல்லா மக்களும் பொதுவாகப் பெரிதும் அவரைப் பின்பற்ற உரியார் என்றும் கூட தைரியமாய்ச் ‘சொல்லுவேன். ஏனெனில் திரு.மகமது நபி அவர்களின் மதமே (கொள்கை களே) மற்ற எல்லா மதத்தைவிட பிந்தியதும் சமீபமானதுமான மதமாகும். ஆதலால் அது மற்ற மதங்களில் உள்ள குற்றம் குறைகளை எல்லாம் நீக்கிச் சற்றேறக்குறைய எல்லோராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய அளவு சீர்திருத்தமுடைய தென்றும் சொல்லுவேன். எப்படியெனில் சுமார் இரண்டு மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தில் எங்கும் இந்து மதக் கொள்கைகள், அதாவது, ஆரிய மதக் கொள்கைகளே பரவி வந்திருந்ததாகத் தெரிய வருகின்றது.

அது எப்படியெனில், பல தெய்வ வணக் கமும், விக்கிரக வணக்கமும், ஜீவபலி யிடுவதும் முதலான காரியங்களே ஒரு காலத்தில் உலகத்தில் மதக் கொள்கையாய் இருந்து வந்திருக்கின்றது. அதிலிருந்து ஒருபுறம் புத்தரும் மற்றொரு புறம்


vaigarai velicham official

கிறிஸ்துவும், மற்றும் பல பெரியாரும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டு மிகக் கஷ்டத்துடன் முயற்சி எடுத்து வந்திருக்கின்றார்கள்.

அவர்கள் முயற்சியானது அந்தக் காலத்திற்குப் புதியதாய்த் தோன்றியதாலேயே அவர்கள் நாத்திகர்கள் என்று பழிக்கப்படவும், துன்பத்திற்காளாகவும் நேர்ந்ததுடன், கிறிஸ்து நாதர், சாக்கரடீஸ் முதலியவர்கள் கொல்லவும் பட்டார்கள். அதற்கும் வெகுகாலத்திற்குப் பிறகு அக்கொள்கைகளிலிருந்தும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டவரே நமது திரு.மகமது நபி அவர்களாவார்கள். எனவே, நபி அவர்கள் உயரிய புதுக்கொள்கைகளை, அதாவது மிக்க மனிதத் தன்மை வாய்ந்ததாகவும், மனித வர்க்கத்திற்கு ஏற்றதும்,

அவசியமானதும், பெரிதும் அறிவிற்குப் பொருந்தியதாகவும் கண்டுபிடித்துப் பரப்பினார். இவ்வித உயரிய கொள்கைகள் அவருக்கு மாத்திரம் எப்படி தோன்றிற்று என்போமானால், அவர் மற்ற மதங்களின் குணதோஷங்களை எல்லாம் நன்கு அறிந்து கடைசியில் பிந்திய காலத்தில் ஏற்படுத்தின மதமாதலால் அது கூடுமானவரை திருத்தத்துடன் செய்ய முடிந்தது. ஆனால் அப்பொழுதும் பழைய கொள்கைக்காரர்கள் திரு.நபி அவர்களையும் நாஸ்திகர் என்றும், கடவுள் துரோகி என்றும் சொல்லி பலவிதத்திலும் துன்புறுத்தி இருக்கின்றார்கள்; கொல்லவும் முயற்சித்திருக்கின்றார்கள். என்றாலும், திரு. நபி அவர்கள் எதற்கும் அஞ்சாமல் உறுதியுடன் நின்று தமது கொள்கையை மக்களிடம் நன்றாய் பதியும்படி செய்திருக்கிறார்.

எனவே, அவரை அக்காலத்திற்கேற்ற ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் என்றும், தன்னல மற்ற பெரிய தியாகி என்றும், தீர்க்கதரிசி என்றும் சொல்லியாக வேண்டும். நான் இப்படிச் சொல்லுவதற்கு ஆதாரமாக இன்றையதினம் அப்பெரியாரின் கொள்கைகளின் பெருமைகளைப் பற்றியும், அவற்றிற்கும் நமது இந்து மதக் கொள்கைகள் என்பவற்றிற்குமுள்ள தாரதம்மியத்தைப் பற்றியும் தங்கள்முன் எனக்குத் தோன்றியதை எடுத்துச் சொல்வதில் நீங்கள் சற்று கவனம் செலுத்தி நடு நிலைமையில் இருந்து கேட்க வேண்டும் என்று இந்து முஸ்லீம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**தத்துவார்த்தமும் பிரத்தியட்ச அனுபவமும்**

சகோதரர்களே! நான் அந்தப்படி சொல்லுவதில் குரானில் என்ன சொல்லியிருக்கின்றது என்பதைப் பற்றியோ, இந்து வேதம் என்பதாகிய நான்கு வேதங்களில் என்ன சொல்லி இருக்கின்றது என்பதைப் பற்றியோ சொல்லப் புறப்பட்டு அவ்வம்மத ஆதாரங்களான புத்தகங்களில் எழுதப்பட்டவைகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை.

ஏனெனில், நான் அவைகளை எல்லாம் படித்தவனல்ல; அன்றியும் புத்தகங்களில் இருப்பதாகச் சொல்லும் பெருமைகள் நமக்கு ஒரு பலனையும் தரமுடியாது. ஒரு காகிதத்தில் சர்க்கரை என்று எழுதிக்கொண்டு நக்கினால் இனிக்குமா? அன்றியும் அவற்றிற்கு எப்படி வேண்டுமானாலும் “தத்துவார்த்தம்” செய்யக் கூடும்.

ஆதலால் அதைப்பற்றி பிரஸ்தாபிக்காமல், இரண்டு மதத்தின் பேராலும், பிரத்தியட்சத்தில் நாம் காணும் விடயங்களைப் பற்றியும் அவ்வம் மதக்காரர்கள் அனுபவிக்கும் பலனைப் பற்றியும் எடுத்துப்பேசுகின்றேன். ஏனெனில், எந்த மதத்தின் கொள்கையின் பெருமையும் அந்தந்த மதத்தைப் பின்பற்றுகின்ற மக்களுக்கு நாட்டிற்கு உண்டாக்கி இருக்கும் பலன்களைக் கொண்டு தான் நிச்சயிக்க வேண்டுமேயல்லாமல், அது ஒரு காலத்தில் செய்ததாகச் சொல்லப்படும் கதைகளைக் கொண்டோ, அம்மதத் தலைவர்கள், ஒரு காலத்தில் செய்ததாக சொல்லப்படும் அற்புதங்களைக் கொண்டோ, வியாக்கியானம் செய்வதால் ஏற்படும் அழகிய கருத்துக்களைக் கொண்டோ நிச்சயித்து விடமுடியாது. அப்படி நிச்சயிப்பதால் உலகத்திற்கு ஒரு பலனும் ஏற்பட்டுவிடாது. ஆதலாலேயே தான் பிரத்தியட்ச அனுபவத்தைச் சொல்லுகின்றேன்:-

மகமதிய மதம் என்பது ஒரு தேசீய மதமாகும். அம்மதத்தின் முக்கிய தத்துவம் என்னவென்றால், அம்மதத்தைப் பின்பற்றும் சமூகம் கொண்ட தேசங்களை அச்சமூக நன்மைக்கேற்றதான, ஆட்சிக்குள் இருக்கச் செய்வதென்பது முக்கியமானதாகும். அன்றியும் அம்மாதிரியான ஆட்சி நன்மைக்கே மதத்தைக் காப்பதுமாகும். மேலும் அது ஒரு சமத்துவக் கொள்கைக் கொண்ட மதமாகும். அதாவது மகமதிய மதத்தில் மக்களுக்குள் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது

கிடையவே கிடையாது. பணக்காரன், ஏழை, படித்தவன் படியாதவன்; இளைத்தவன் பலசாலி என்கின்ற வித்தியாசமில்லாமல் சகலருக்கும் வாழ்வில் சகல உரிமையும் அளிக்கின்றது.

மேலும் மகமதிய மதம் ஒற்றுமையையே அதிகமாய்க் கொண்டிருக்கிறது. அதாவது அந்த மதத்தைச் சேர்ந்த ஒரு தனி மனிதனுக்கு ஒரு சிறு தீங்கு அந்நியனால் செய்யப்பட்டாலும், உடனே அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி, தங்களுக்கு வந்ததுபோல் கருதி அவனுக்கு உதவி செய்ய அவசரமாய் முந்துகின்றார்கள். அன்றியும், அது அன்பையும் சகோதரத்துவத்தையும், அடிப்படை யாகக் கொண்ட மதமாகும். என்னவென்றால், ஊர்பேர் தெரியாதவர்களானாலும், மகமதியர் என்று தெரிந்தால், ஒரே இலையில் சாப்பிடும் படியான அன்பும் சகோதரத்துவமும் கொண்டி ருக்கிறது. அது ‘சண்டாளர்களையும்’ ரட்சிக்கும் சமயமாகும். ஏனெனில் நம்மால் சண்டாளர்கள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட மக்களைத் தங்கள் சமயத்தில் சேர்த்து அவர்களுக்குச் சகல உரிமை யையும் கொடுக்கின்றார்கள். மற்றும் மகமதிய மதமானது வீரத்தையும் ஆண்மையையும் கொடுக்கும் மதமாகும்.

எப்படியெனில் அவர்களுக்கு மற்றவர் களைவிட துணிவு அதிகம்; அவர்களைக் கண்டால் மற்றவர்கள் பயப்படுகின்றார்களே ஒழிய அவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை.

மகமதிய மதத்தில் பெண்களுக்கு உரிமை இருக்கின்றது. அதாவது பெண்களுக்குச் சொத் துரிமை உண்டு; விவாகம் உண்டு; கணவனும் மனைவியும் ஒத்துக்கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ளச் சுதந்தரம் உண்டு; படிக்கச் சுதந்தரம் உண்டு; ஆனால் கோஷா முறையைப் பற்றி குற்றம் சொல்லலாம். ஆனாலும் வரவர அதுவும் விலக்கப்படுகின்றது.

உதாரணமாக துருக்கியில் பெண்கள் உத்தியோகம் வகிப்பதும், ஆப்கான் தேசத்தி லிருந்து பெண்களை வெளிநாட்டிற்குப் படிக்க அனுப்பி இருப்பதும், ஹைதராபாத், நைசாம் அவர்கள், தனது புத்திரிகளுடன் தாராளமாய்ச் சென்னையில் உலவினதுமான காரியங்களைக் கவனித்தால் அதுவும் சீக்கிரத்தில் மாற்ற மடையக் கூடும். மகம்மதிய மதம் தெய்வ வணக்கத்தில் மிக்க கண்டிப்பையும் செலவு சுருக்கத்தையும் உடையதாகும். அதாவது, ஒரே கடவுள் என்பதும் அதுவும் நாமம், ரூபம், குணம், குறி முதலியவைகள் அற்றது என்பதும், அதற்கு விரோதமாய்ப் பல கடவுள்களை சொல்லுவதோ, அல்லது கடவுளுக்கு ரூபம், பெண்டு, பிள்ளை, வைப்பாட்டிகளை ஏற்படுத்துவதோ, பூசை, உற்சவம் முதலியவைகளில் செலவு செய்வதோ மிக்கதோஷம் என்றும் அப்படி கருதுகின்றவர் களையும் செய்கின்றவர்களையும் தங்கள் எதிரிகள் என்றும் கருதும்படி கற்பிக்கின்றது.

மகம்மதிய மதம் தர்ம விஷயத்தில் மிக்க பிரயோஜனமான காரியத்தைச் செய்விக்கிறது. அதாவது ஒரு முஸ்லிம் தனது சொத்தில், அல்லது தனது வரும்படியில் இன்ன பாகம் தர்மத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று இருப்பது அமுலில் இல்லாவிட்டாலும், கொடுக்கும் பணத்தை ஏழைகளுக்கும் கஷ்டப்பட்டு சம்பாதித்து சாப்பிட முடியாதவர்களுக்கும் அநாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றி, கல்வி, தொழில் கற்றுக் கொடுப்பதற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றதே ஒழிய தர்மத்தின் பேரால் சோம் பேறிகளை உற்பத்தி செய்வதில்லை. மகமதிய மதம் மற்ற மதங்களை விட, மிகவும் நாகரிகம் கொண்டது என்றுகூட சொல்லலாம்.

அதாவது மகமதியர்கள் உணவில் சத்துள்ள உட்கொள்ளுகின்றார்கள். ஒரே வகை சாப்பாடு ருசி, பலம், சத்து, திருப்தி ஆகியவை களைக் கொடுக்கும், நல்ல நல்ல பழ வர்க்கங் களும், சத்துள்ள விதை வர்க்கங்களும் பெரிதும் அவர்களாலேயே நமது நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. வைத்தியத்தில் மிக்க மேன்மை யான முறையையுடையவர்கள். அல்வாவிலும் சர்ப்பத்திலுமே எம்மாதிரியான வியாதிக்கும் மருந்து உண்டு. சங்கீதமோ மற்ற சங்கீதத்தை விட மேன்மையானது. கட்டிடங்கள் கட்டு வதிலோ மற்றவர்களைவிட அலங்காரமாக சித்திர வேலைகளமைந்ததாகவும் கட்டுவார்கள்.

வாசனைத் திரவியங்களில் மற்றவர்களை விட சிறந்தவர்கள். அரசியல் ஆட்சிமுறையில் அவர்கள் மிக்க ஞானமுடையவர்கள்; நீதி உடையவர்கள் என்றும் சொல்லலாம். எப்படி எனில், அரசியல் அதிகாரங்களுக்கு அநேகமாய் மகமதிய பெயர்களே இப்போதும் வழங்கு கின்றது. அன்றியும் அவர்களுடைய மூர் தண்ணியமான ஆதிகாலத்திலும் இந்தியாவின் செல்வத்தை அந்நிய நாட்டிற்குச் சுறண்டிக் கொண்டு போகவில்லை.

அந்நியர்! கொண்டு போக இடம் கொடுக்கவும் இல்லை. மற்றபடி ஏதாவது இரண்டொரு விஷயங்கள் மாறுபட்டதாகக் காணப்படலாமாயின், அவைகள் மகமதிய கொள்கைகள் ஏற்படுத்தப்பட்ட அந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் இப்போதைய நிலைமைக்கும் உள்ள தார தம்மியத்தைப் பொறுத்திருக்கலாமே ஒழிய வேறில்லை. மற்றும் முல்லாக்களால் ஏதாவது சில மூட நம்பிக்கைகளைப் புகுத்தியிருக்கலாம். ஆனாலும் அது அவர்கள் தேசீய கீதத்தையாவது வாழ்க்கைச் - சுதந்திரத்தையாவது கெடுக்கக்கூடிய அவ்வளவு கேடானதாக இல்லை. அன்றியும், அது இப்போதைய நிலைமைக்கு காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடி சீர்திருத்தம் செய்து மாற்றிக் கொள்ளத் துணிந்தும் இருக்கின்றது. உதாரணமாக, துருக்கி சீர்திருத்தமும் ஆப்கான்ஸ்தான் சீர்திருத்தமும், அச்சீர்திருத்தம் செய்த அவ்வரசாங்கங்களை இந்திய மகமதியர்கள் ஆதரிப்பதும், ஆகியவைகளைக் கவனித்தால் அதன் பெருமை விளங்கும்.

மேலும் மகமதிய மதம் மிக்க சுயமரியாதை உணர்ச்சியுடையது என்றும் சொல்லுவோம். எப்படி என்றால், அது இனி உலகத்திற்கு கடவுள் அவதாரங்களோ, நபிமார்களோ, தீர்க்க தரிசிகளோ வரக்கூடும் என்பதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ளுவதில்லை. மனிதனை மனிதன் வணங்குவதையோ, அவன் காலில் விழுவதையோ, அதுசிறிதும் சம்மதிப்பதில்லை. இனியும் இதன் பெருமைகள் அனந்தம் உண்டு. இவ்வளவு பெருமைகளுக்கும் காரணம் என்னவென்றால், முன் சொன்னபடி இது சமீபகால சீர்திருத்த மதமானதாலும், மகமது நபி அவர்கள் நல்ல அனுபவ மும், ஞானமும், தீர்க்க தரிசனமும், உறுதியும் கொண்டவரானதாலும், உலகத்தில் உள்ள மதங்களில் எல்லாம் சிறந்த மதம் என்று சொல்லத்தக்க தாயிருக்கின்றது.

இதற்கு நேர் விரோதமாக நமது மதம் என்பதில் உள்ள குறைகளை எடுத்துச்சொல்ல இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள எனக்கு இஷ்டமில்லாததால் அவற்றை மற்றொரு சமயம் சொல்லலாம் என்று இருக்கின்றேன். கடைசியாக, நான் இந்து மகம்மதிய சகோதரர்களுக்குச் சொல்லுவதென்னவென்றால், மதத்தின் காரணமாக இந்து முஸ்லீம்களுக்குத் துவேஷம் சிறிதும் இருக்கக்கூடாது என்பதேயாகும். எக்காரணத்தை முன்னிட்டோ, மதங்கள் என்றாலே முதலாவது, மற்றொரு மதத்தினிடத்தில் துவேஷம் கொள்ளுவதே முக்கிய கடமையாயிருக்கின்றது.

உதாரணமாக இந்துக்கள் என்பவர் மகமதியர்களை வெகு இழிவாய்க் கருதுவது எனக்குத் தெரியும். அதாவது மகமதியனைத் தொட்ட அளவுக்கு சரீரத்திலுள்ள தசையை அறுத்தெறிய வேண்டும் என்று இந்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும். இப்போதும் துலுக்கர் என்றால் மிலேச்சர் என்று சமஸ்கிருதங்களிலும் அதைச் சார்ந்த தமிழ் அகராதிகளிலும் அர்த்தம் எழுதப்பட்டிருக்கின்றது. துலுக்க பாஷையைக் கூட தமிழ் பாஷையைப் பார்ப்பனர்கள் சொல்லுவதைப் போலவே மிலேச்சபாஷை என்றே பார்ப்பன நிகண்டுகளிலும் அகராதிகளிலும் இன்னமும் இருக்கின்றது. இவ்வித துவேஷ உணர்ச்சி உள்ளவர்களிடம் மகமதியர்கள் எப்படி ஒற்றுமையாய் இருக்க முடியும்? ஆதலால் இந்துக்கள்தான் முதன்முதலாக மகமதியர்களிடம் சகோதரபாவம் காட்டி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும். கூட்டத்தில் ஒன்றாய் உட்காந்திருப்பதாலேயே ஒற்றுமை இருக்கின்றது என்று நினைத்துவிடக் கூடாது. இந்நாட்டில் உள்ள 8 கோடி முகமதியர்களை அலட்சியம் செய்தோ, அவர்கள் கூட்டுறவில்லாமலோ, நமது நாட்டிற்கு நல்லரசாட்சியை உண்டாக்கி விடவோ திருப்திகரமான வாழ்க்கையை ஏற்படுத்தவோ முடியவே முடியாதென்றே சொல்லுவேன். அன்றியும் அவர்களை இருந்த நாட்டைவிட்டுத் துரத்தி விட முடியாதென்றும் சொல்லுவேன். இந்த நாட்டிலுள்ள 8 கோடி மகமதியர்களின் பலமானது 16 கோடி இந்துக்களின் பலத்திற்குச் சமானமானதென்றுகூட சொல்லுவேன். எப்படியென்றால், இந்துக்களிடத்தில் மகம்மதியர்களுக்கு அவநம்பிக்கை இல்லாமலிருந்திருந்தால் இந்தியாவுக்கு ஜவாப்தாரியான ஆட்சி வெகு காலத்திற்கு முன்பே ஏற்பட்டு அனுபவித்துக் கொண்டிருக்குமென்பதில் சிறிதும் எனக்குச் சந்தேகமில்லை.

இப்பொழுதும் நமது நாட்டில் தீண்டாதவர்கள் என்னும் ஆறரைக் கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் நாளைக்கு மகமதியர்களாகி விட்டால் மறுநாளே இந்தியாவின் நன்மைக்கேற்ற அரசாங்கம் ஏற்பட்டுவிடும் என்று

உறுதியாய்ச் சொல்லுவேன். நிற்க, இந்தியாவுக்கு ஏதாவது ஒரு காலத்தில் பொறுப்பாட்சி ஏற்பட யோக்கியதை உண்டாகிவிட்டது என்று சொல்லப்படும் காலம் வருமானால், அந்தக் காலத்தில் இந்தியாவில் 15 கோடி மகம்மதியர் களாவது இருப்பார்கள்.

ஏனெனில், அந்தப்படி 15 கோடி மகம்மதியர்கள் இருந்தால் தான் இந்தியாவுக்கும் பொறுப்பாட்சி அடைய யோக்கியதை வரக்கூடும் என்பதாகவும் சொல்லுவேன். (ஏனெனில் பொறுப்பாட்சி அடைவதற்கு விரோதமான கொள்கைகள் 'மகமதிய மதத்தில் கிடையவே கிடையாது என்பதுதான் நான் இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னதன் தத்துவமாகும்.

அதுபோலவே மகமதியர்களும் கவனிக்க வேண்டிய விடயமும் உண்டு. மகமதியர்கள் இனி இந்தியாவை விட்டு வெளியேறிவிடலாம் என்றோ, அல்லது இந்துக்களை இந்தியாவில் இல்லாமல் இருக்கும்படி செய்யலாம் என்றோ கருத முடியவே முடியாது. எப்படியானாலும் இந்த நாட்டில் இருவர்களும் இருந்துதான் ஆக வேண்டும்.

பொதுவாக இந்தியாவுக்கு ஏற்பட்ட லாப நஷ்டத்தில் இருவர்களுக்கும் பங்கு உண்டே தவிர மகம்மதியர்கள் எவ்விதத்திலும் விலக்கப் பட்டவர்கள் அல்ல. நாட்டின் நன்மையைக் கருதி இந்துக்களுடன் ஒத்துழைத்துத் தீர வேண்டிய அவசியம் அவர்களுக் கும் உண்டு. கூடிய சீக்கிரத்தில் இந்துக்கள் என்பவர்களுக்குள் இருக்கும் அநேக குறைபாடுகள் விலகிவிடக் கூடும் என்றே நினைக்கின்றேன். அப்பொழுது இந்துக்கள் முஸ்லீம்கள் என்கின்ற வித்தியாசம் இவ்வளவு காணப்படமாட்டாது. இந்து யார்? முஸ்லீம் யார்? என்று சுலபத்தில் பிரித்துக் காண முடியாத அளவு ஒற்றுமை ஏற்படப் போகின்றது என்பதில் எனக்கு மிக்க நம்பிக்கை இருக்கின்றது.

மதத்தின் பேரால் உள்ள வெளி வேடங்கள் எல்லாம் மறைந்து மனிதவர்க்கத்தின் நன்மைக்கு ஏற்ற அவசியமான ஒழுக்கங்களுடன் மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாய்க் காணப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றேன். ஆதலால் மகம்மதிய சகோதரர்கள் மதத்தைவிட, தேசத்தைவிட முதலாவது நாம் எல்லோரும்



மனிதர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மனித சமூகத்தின் நன்மைக்கு ஏற்ற மார்க்கத்தில் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மூடப்பழக்கவழக்கங்களையும் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விரோதமானவைகளையும் உதறித்தள்ள மனிதர்கள் என்பவர்கள் எல்லாம் தயாராயிருக்க வேண்டும். கொள்கைகள்தான் மதமே ஒழிய, சடங்குகள், வேடங்கள் மதம் அல்ல என்கின்ற உணர்ச்சி தாராளமாய் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும்.

இவைகளே இப்போது எனக்குத் தோன்றிய கருத்துக்களாகும். இவற்றை ஒளிக்காமல் உங்கள் முன்னிலையில் சொல்லிவிட்டேன். ஏதாவது தவறுதல்கள் இருந்தால் அதை தள்ளிவிட்டு தங்களுக்கு சரி என்று பட்டதை மாத்திரம் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குறிப்பு : 18.08.1929ஆம் நாள் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற மகமது நபி பிறந்தநாள் விழா சொற்பொழிவு.

குடிஅரசு - சொற்பொழிவு - 25.08.1929

# வெளிச்சத்திற்கு வந்த இஸ்ரேலின் இன்னொரு இழப்பு

**ஈரானுக்கும் –** இஸ்ரேலுக்கும் இடையே நடந்த போரில் *(13.6.2025 – 24.6.2025)* இஸ்ரேல் தனக்கு ஏற்பட்ட இழப்புகளை மிகவும் சாமர்த்தியமாக மறைத்து வந்தது. ஆனால், ஆதலால் முற்றாக மூடி மறைத்திட இயலவில்லை.

அன்று ஒரேடியாக மறைத்துவிட வேண்டும் என எண்ணிய ஓர் உண்மை இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது.

அது ஹைஃபா துறைமுகப் பகுதியில் இருந்த Bassen Petro Chemical Facilities - பாசன் பெட்ரோ கெமிக்கல் ஆலை என்ற பாசன் பெட்ரோல் கெமிக்கல் ஆலை-இன் மீது ஜூன் *16*இல் ஈரான் செய்த துல்லிய தாக்குதல்.

இந்தத் தாக்குதலில் இந்த பெட்ரோலிய இராசயன ஆலை அழிந்ததோடு, அதன் உள்ளிருந்த *200*க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும், இன்ஜீனியர்களும் அழிந்திருக்கின்றார்கள்.

இதனால் ஏற்பட்ட விஷவாயு கசிவால் அதனைச் சுற்றி வாழ்ந்தவர்கள், *2000* பேர் வரை இறந்திருக்கின்றார்கள். இந்த எண்ணிக்கை இஸ்ரேலால் தணிக்கை செய்யப்பட்டது. இதனை இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் - ஹைஃபா, போன்ற இடங்கள், இதுபோன்ற பெரிய ஆலைகளை வைப்பதற்கு உகந்த இடமல்ல. ஈரான் அல்லது ஹூத்தீஸ் எந்த நேரம் வேண்டுமானாலும் தாக்கிடும் வாய்ப்பிருக்கின்றது. இந்த இடத்தில் இனி இந்த ஆலையை வைத்திடப் போவதில்லை. அதற்கான இடத்தை நான் தெரிவு செய்திட இருக்கின்றேன். இந்த டாசன் பெட்ரோலிய இராசயன ஆலை மீது நடந்த தாக்குதலால் ஏற்பட்ட இழப்பு *14* மில்லியன் டாலர்கள்.

ஆக இஸ்ரேலில் உண்மையான இழப்புகள் தெரிந்திட பல ஆண்டுகள் ஆகும்.

இன்ஷா அல்லாஹ் கிடைக்கும் தகவல்கள் நமது வாசர்களுக்கும் கிடைக்கும். இந்த தகவல்கள் வெளிவந்த நாள் *18.8.2025* (Source : Webanagh Mehr News Agency)

- MGM





# இனி விஞ்ஞான உலகிற்கு இஸ்ரேல் தீண்டத்தகாத நாடு

இஸ்ரேல் தொடர்ந்து பல இழப்புகளைச் சந்தித்து வருகின்றது. இப்போது (20.8.2025) பெரும் பண பாற்றாக்குறை. அதனை ஈடுசெய்ய, தனது ஆக்கிரமிப்பிற்குள் வாழ்ந்திடும் கிருஸ்தவ பெருங்குடி மக்களின் வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ளது.

அவர்கள், வரி ஏய்ப்பு செய்தவர்கள் எனக் குற்றம் சாட்டியுள்ளது. – இஸ்ரேல் வீழும் நாள் வெகு தொலைவில் இல்லை.

- MGM

**காஸாவில்** இஸ்ரேல் அப்பாவி மக்களைக் கொத்துக் கொத்தாக கொலை செய்து வருகின்றது. இன்றளவும் 62,500 அப்பாவி பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்துள்ளது. 1,56,000 பேரைக் கொலை செய்திருக்கின்றது.

இந்தப் படுகொலைகள் மிகப்பெரிய தாக்கங்களை உலக அரங்கில் ஏற்படுத்தி வருகின்றது. அரபு நாடுகளைத் தவிர.

இதனால் இஸ்ரேல் உலக அரங்கில் ஓர் தீண்டத்தகாத நாடாக ஆக்கப்பட்டுவிட்டது.

அண்மையில் நமது மும்பை பெரு நகரில் ஓர் அகில உலக மகா விஞ்ஞான மாநாடு. அந்த மாநாட்டிற்கு International Olympiad on astronoty and Astrophysics “IOAA” உலக வான்வெளி அறிவியல் மற்றும் வான்வெளி பௌதீக ஒருங்கிணைப்பு அவை என்று பெயர்.

இதில் 64 நாடுகளிலுள்ள அறிவியல் மாணவர்கள் (Science Student) பங்கெடுத்து வருகின்றார்கள்.

இந்த அவையில் 'இஸ்ரேல்' என்ற நாடும் ஓர் அங்கம். இந்த வருடம் இஸ்ரேல் இந்த மாநாட்டிற்குத் தன் நாட்டு மாணவர்களை அனுப்பிடவில்லை. ஆனால் ஆகஸ்ட் 18,2025இல் கூடிய மாநாட்டில் இஸ்ரேலை உலக வான்வெளி அறிவியல், வான்வெளி பௌதீக அறிவியல் அவையிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

காரணம்,

“Calls from Members of the International Scientific Community to take action over isreal, Activities in Palestine”

அதாவது, உலகெங்குமுள்ள விஞ்ஞான, அறிவியல் சமூகங்கள், தொலைபேசியில் அழைத்து பாலஸ்தீனில் இஸ்ரேல் செய்யும் அநீதிகளுக்கெதிராக, நடவடிக்கை எடுங்கள் எனக் கேட்டுக்கொண்டதுதான்.

ஆனால், இஸ்ரேலின் மாணவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ளலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

“இந்த அறிவியல் அவையின் நோக்கம், உலகெங்கிலுமுள்ள.... மாணவர்களை அழைத்து, அவர்களின் அறிவியல் வளர்ச்சிக்கு உதவுவதும், திறமையான மாணவர்களின் மேம்பாட்டுக்கு சர்வதேச உதவிகளை வழங்குவதாகும். இதில் அங்கம் வகிக்கும் நாடுகள், சர்வதேச விதிகளை மதிக்கும் நாடுகளாக இருக்க வேண்டும். மனித இனத்தின் வளர்ச்சிக்காக விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் நாடுகளாகவுமிருக்க வேண்டும்” The Hindu, 21-8-2025

இதனால், இப்போது அது காஸாவில் நடத்தும் Holocust என்ற பேரழிவில் அது தகுதியை இழக்கின்றது. அத்தோடு அது தான் பெறும் விஞ்ஞான வளர்ச்சியை, அறிவியல் வளர்ச்சியை அப்பாவிகளையும், பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்யவே, பயன்படுத்துகின்றது. - MGM


vaigarai velicham official

# நரம்பியல் மனமும்- இதயத்தின் உணர்வுத் திறனும்

ரஹ்மத் ராஜகுமாரன்

**மனித** மனதை மட்டும் அல்ல, "இதயத்தின்" மூலமாக உணர்வுகள் ஏற்படுகின்றன என்று சமீபத்திய நரம்பியல் ஆய்வுகள் (neurocardiology) கூறுகின்றன - இதயத்தில் கூட நரம்பியல் கோட்பாடுகள் உள்ளன என்ற விஷயம் நம்மை ஆச்சரியப்படுத்துகிறதா ?

இது நவீன அறிவியல் (Neurocardiology) மற்றும் இஸ்லாமிய ஆன்மீகக் கருத்துகள் (Qur'anic understanding of the Qalb) இரண்டையும் இணைக்கும் முக்கியமான பாலம். அதாவது ஆன்மீகமும், அறிவியலும் இணையும் ஓர் அற்புத ஆய்வு.

அதாவது, "இதயம் (Qalb)" என்பது வெறும் ரத்தம் பம்ப் செய்யும் கருவி அல்ல; அது உணர்வு, தீர்வு, நற்சிந்தனை ஆகியவற்றின் மையத் தளம் என்பது இப்போது நவீன விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் :

"உடலில் ஒரு சதைத் துண்டு இருக்கிறது. அது சீர் பெற்றுவிட்டால் உடல் முழுவதும் சீர் பெற்று விடும். அது சீர் குலைந்துவிட்டால் முழு உடலும் சீர்குலைந்து விடும். புரிந்து கொள் ளுங்கள். அதுதான் இதயம்!' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என நுஃமான் இப்னு பஷீர் (ரழி) அறிவித்தார். (ஸஹீஹ் அல் புகாரி: 52)

**Neurocardiology என்றால் என்ன?**

Neurocardiology என்பது இதயத்தின் (Heart) மற்றும் நரம்புக் குழாய்களின் (Nervous System) இடையே உள்ள தொடர்புகளை ஆய்வுசெய்யும் ஒரு விஞ்ஞானப் புலம். இது கூறுவது என்னவெனில்:

இதயம் ஒரு இரண்டாவது மூளை! என்கிறது.

இதயம்: சுமார் 40,000 நரம்புக் கலங்களைக் கொண்டுள்ளது (intrinsic cardiac nervous system) இது "Heart-brain" என்று அழைக்கப்படுகிறது

இதயமே தனக்கென்று ஒரு சிந்தனைத் திறன், learning, memory, மற்றும் decision-making - like process கொண்டிருக்கிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டு வியந்து போய் விட்டனர்.

முக்கியமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்:

**1. HeartMath Institute (USA):**

இதயம் மூளைக்கு அழைப்புகளை மட்டும் அல்லாமல், சில நேரங்களில் மூளையிடமே கட்டளைகள் அனுப்புகிறது.

இதயம், சுயமாக எதிர்வினை (response) அளிக்கிறது - இது ஆழமான உணர்வுகள் உருவாகும் மையமாக இருக்கக்கூடும்.

**2. இதய அலைகளும் உணர்வுகளும்:**

Coherence எனப்படும் ஒழுங்கான இதயத் துடிப்புகள் (heart rhythm coherence) ஏற்படும் போது - மனஅமைதி, தியான நிலை, கருணை, நன்றியுணர்வு போன்ற உணர்வுகள் அதிகரிக் கின்றன.

இதயத்தின் நிலை மூளையின் அலைகளையும் மாற்றுகிறது - இது குறிப்பாக முடிவெடுப்புகளில் தாக்கம் செலுத்துகிறது.

**இஸ்லாமிய பார்வையில் - قلب (Qalb):**

اَفَلَمْ يَسِيْرُوْا فِى الْاَرْضِ فَتَكُوْنَ لَهُمْ قُلُوْبٌ يَّعْقِلُوْنَ
بِهَاۤ اَوْ اٰذَانٌ يَّسْمَعُوْنَ بِهَا فَاِنَّهَا لَا تَعْمَى الْاَبْصَارُ
وَلٰـكِنْ تَعْمَى الْـقُلُوْبُ الَّتِىْ فِى الصُّدُوْرِ

அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து

(இவற்றைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், (Qulub) (நல்ல வற்றைச்) செவியேற்கும் காதுகளும் உண்டாகி யிருக்கும், நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாக வில்லை; எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் (Qalb) இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடா கின்றன. (குர்ஆன் : 22:46)

**Qulub = Plural of Qalb**

**Qalb = Heart ஒரு நபரின் இதயம்**

**Qulub = பல நபர்களின் இதயங்கள்**

இங்கு Qalb (இதயம்) என்பது உணர்வு மைய மாக (Center of understanding, awareness, and turning) குறிப்பிடப்படுகிறது - மூளை இல்லை.

**Qalb =** திரும்பும் ஒன்று **(Turning organ)**

அரபியிலேயே "Qalb" என்பது "திரும்புதல்" (to turn, to flip) என்ற அர்த்தம் கொண்டது. அதாவது மன நிலை, உணர்ச்சி நிலை சீராக இருக்காது - இது உணர்வின் மையம் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

உள்ளங்களை திருப்பக் கூடியவனே! யா அல்லாஹ், எங்கள் உள்ளங்களை உனது வழிபாட்டின் பக்கம் திருப்புவாயாக!

அரபியில் "கல்பு" என்று குர்ஆனில் பல இடங்களில் இருக்கிறது. அதை இடத்திற்கு ஏற்ற வாறு இரண்டு பதத்தில் தமிழில் சூபியாக்களால் அறிஞர்களால் மொழி பெயர்க்கப்படுகின்றது.


**முதலாவது:** நெஞ்சுக்குள் இடது பக்கத்தில் இருக்கும் மாங்காய் வடிவிலான மாமிசத் துண்டமாகிய இருதயம், அதன் நடுவில் சிறிது வெற்றிடமும் அதில் கருநிற இரத்தமும் காணப் படும். இந்த இதயம் மனிதனுக்கும் மிருகங் களுக்கும் பறவைகளுக்கும் இறந்து விட்ட மையித்துகளுக்கும் கூட உண்டு. ஆனால் முஃமினுடைய கல்பு அல்லாஹ்வினுடைய அர்ஷ் என்ற அளவிற்கு ஹதீஸில் குறிக்கப்படுகின்றது.

**இரண்டாவது:** ஜோதி மயமாகிய ஓர் ஆத்மீக தத்துவ நுட்பமாகிய உள்ளம். இந்த இரண் டுக்கும் ஒருவித காந்த சம்பந்தமுண்டு. ஆத்மீக கல்பாகிய இரண்டாவது கல்பையே அகம்- உள்ளம் என்றழைக்கிறோம்.

இந்த அகம்தான் பகுத்தறிவுள்ள மனிதனின் உண்மை ரகசிய நுட்பமாய் இருக்கிறது. திருக்குர்ஆனில் கல்பு என்று சொல்லப்பட்டு இருப்பதெல்லாம் இந்த அகம் என்ற ஹகீகதே இன்சானாகிய நுட்பத்தைக் குறிப்பதே. இந்த அகம்தான் மனிதனில் பார்ப்பதும், கேட்பதும், பேசுவதும், வஸ்துக்களின் உண்மையை விளக்கி அறிவதுமாகும்.

நவீன நரம்பியல் ஆய்வுகளும், இதயம் பற்றிய சிந்தனைகளும் இதை தெளிவாக கூறுகின்றன:

விஞ்ஞானம் இஸ்லாம் இதயத்தில் learning & memory உள்ளது. Qalb உணர்வுக்கு மையம் இதய அலைகள் மூளையை மாற்றுகின்றன




**திக்ர் (Zikr) இதயத்தில் அமைதியைக் கொடுக்கும்**

Heart Coherence அமைதி அளிக்கிறது திக்ர் Dhikr = "அல்லாஹ்வின் நினைவு இதயங்களுக்கு நிம்மதி அளிக்கிறது" (13:28) அதாவது

اَلَّذِيْنَ اٰمَنُوْا وَتَطْمَىِٕنُّ قُلُوْبُهُمْ بِذِكْرِ اللّٰهِ اَلَا بِذِكْرِ اللّٰهِ تَطْمَىِٕنُّ الْقُلُوْبُ

(நேர் வழி பெறும்) அவர்கள் எத்தகையோ ரென்றால், அவர்கள் தாம் (முற்றிலும்) ஈமான் கொண்டவர்கள்; மேலும், அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள்

அமைதி பெறுகின்றன; அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க! (அல்குர்ஆன் : 13:28)

"மனதில் உணர்வு உருவாகும் மையம் என்பது மூளை மட்டும் அல்ல, இதயமும்தான்" - என்கிற உண்மை இன்று விஞ்ஞானத்தால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது குர்ஆனிலும், சூஃபி வழியிலும் முன்னமே கூறப்பட்ட உண்மை.

இஸ்லாமிய திக்ர்கள் - "யா அல்லாஹு", "யா ரஹ்மான்", "சுப்ஹானல்லாஹ்" - இவை ஒரு அதிர்வலைகளை (vibrational patterns) உருவாக்கும் என்பதை விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது.

**Dr. Masaru Emoto (Water Experiment):** நீருக்குள் நல்ல வார்த்தைகள் கூறியபின் அமைந்துள்ள அணுக்கூறுகள் அழகாக இருப்பதை அவர் காட்டினார். இதுவே திக்ரின் ஆன்மீக அதிர்வாக இருக்கிறது என்கிறார் .

**Dr. Masaru Emoto** மற்றும் அவருடைய **"Water Experiment"** பற்றிய விஞ்ஞானம், ஆன்மீகம், மற்றும் இஸ்லாமிய திக்ரு பற்றிய சிந்தனைகளுக்கும் ஒரு ஆழமான தொடர்பு கொண்டது.

1990களில் The Hidden Messages in Water - ("ஊடலை மாற்றும் எண்ணங்களின் சக்தி") என்ற புத்தகத்தின் மூலம் பிரபலமானவர்.

"நீர் நினைவுகளை வைத்திருக்கும்" என்ற கருத்தை முன்வைத்தவர்.

### Water Crystal Experiment - நீர் அணி சோதனை

சோதனை முறை **(Method):** வெவ்வேறு வகை வார்த்தைகள், சங்கீதம், பிரார்த்தனை, திக்ர்/ தியானம் போன்ற விளைவுகளுக்கு நீரைக் கிழித்தார்.

அதை உண்மையான -25குசி போன்ற சூடுகளுக்கு வைத்து நீர்மனைகள் (Water crystals) உருவாவதை புகைப்படமாக எடுத்தார். இயல்பு ஒளிக் காந்தக் கேமராக்களில் அதைக் காண்பித்தார்.

நீர் - மனதின் அதிர்வுகளைப் பதிவு செய்யும் உயிருள்ள ஊடகம் போல இருக்கிறது. அதாவது, நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள், உணர்வுகள் அனைத்தும் அழிந்துபோவது அல்ல. அவை நம்மைச் சூழ்ந்த உலகில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன - குறிப்பாக, நீரில்.

"அல்லாஹ்வின் நினைவு இதயங்களுக்கு நிம்மதி தரும்" - (Qur'an 13:28) திக்ரு செய்வது - அதிர்வும், அதன்மூலமாக உடலில் உள்ள நீர் உணர்வைப் பதிவு செய்வதாகும்.

மனித உடல் சுமார் 70% நீரால் ஆனது. அதனால், திக்ரும், பிரார்த்தனையும் நம் உடல் - உணர்வு அமைதிக்குத் தூண்டியாக இருக்கிறது என்ற கருத்தை நிரூபித்தார் .

**Dr. Emoto** நிரூபித்தது: "நீருக்குத் தான் சுட்டும் வார்த்தைகளின் எண்ண வலையை நினைவில் வைத்திருக்கும் சக்தி உள்ளது."

இது சிந்தனைக்குரிய ஒன்று: அதாவது நாம் பேசும் வார்த்தைகள் - உணர்வு அதிர்வுகளை உருவாக்குகின்றன.

நாம் திக்ரு செய்கிற போது, அது நம் உள்ளத்து நிம்மதியை மட்டுமல்ல, நம் உடலின் நீரணுக் களையும் சீராக்குகிறது.





# உச்ச நீதிமன்றம் உண்மையான தீவிரவாதத்தைத் தடுக்கத் தவறிவிட்டது

உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில், மனுதாரர்கள் வைத்த கோரிக்கைகள் எண் ஒன்றிலிருந்து ஆறுவரை உள்ளவற்றைக் கணக்கில் கொண்டது. கோரிக்கை எண் (To) ஏழு(7)ஐ கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தீர்ப்பின் பெரும் பகுதி கோரிக்கை எண் ஒன்றை (1)–ஐப் பற்றி மட்டுமே பேசுகின்றது. இந்தக் கோரிக்கை, ஓர் ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்டு ஓர் ஆய்வுக் குழுவை அமைத்து, 2002–க்குப் பின் நடந்த குண்டு வெடிப்புகளைப் பற்றிய மறு ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கோருகின்றது. இந்த மறு ஆய்வு குழுவில் குண்டு வெடிப்புகள் பற்றிய நிபுணர்களும் இடம் பெற்றிட வேண்டும் (என்பதும் கோரிக்கை) உச்ச நீதிமன்றம், கோரிக்கை எண் ஏழு(7)ஐ நிராகரித்துவிட்டது. அதற்குப் பின்வரும் காரணங் களைக் கூறியது.

(அ) மீண்டும் ஒரு மறு ஆய்வை மேற்கொள் வது, கொடுக்கப்பட்ட புகார்களை மீண்டும், மீண்டும் துளாவிக் கொண்டிருப்பதிலேயே முடியும்.

(ஆ) மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் (அதாவது கோரிக்கை எண் (1)ஐ ஏற்றுக் கொண்டால்), எந்த விதமானச் சட்ட ரீதியான அங்கீகாரமில்லாத ஓர் அமைப்பை உருவாக்குதிலேயே முடியும். இந்த அமைப்பு ஒரு வழக்கை எப்படி அணுகுவது என்பதில் கடைபிடிக்க வேண்டிய முறைமைகளில் ஓர் நேரான வழிமுறையைத் தந்திட இயலாது. முடிவு ஒரு குழப்பமாக அமையும். இந்தக் குழப்பம் ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கும் விசாரணையிலும் புகுந்துவிடும்.

உச்ச நீதிமன்றம் மனுதாரர்களின் கோரிக் கைகள் (2)முதல் (5) வரை உள்ள கோரிக்கை களையும் இதைச் சொல்லியே முடித்து வைத்தது, அதாவது நீதிமன்றம் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்குவது என்பது, ஏற்கெனவே கிடப்பில் கிடக்கும் வழக்குகளில் குறுக்கிடுவதாக அமையும்.

வழக்கில் மனுதாரர்களின் கோரிக்கை எண் (2) இரண்டு, ஏற்கெனவே புலன் விசாரணையில் கிடைத்த தடயங்கள், அவற்றின் அடிப்படையில், எடுக்கப்பட்ட முடிவுகள் இவற்றின் வழியில் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்துக் கொண்டு செல்ல கோருவதுமாகும்.

கோரிக்கை எண் (4) நான்கு, ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்பதாகும்.

தீர்ப்பில் கோரிக்கை எண். (7)ஐ பற்றி, எந்த விவாதமுமில்லை. அந்தக் கோரிக்கை எண் (7) ஏழு என்னவெனில், நீதியின் ஆளுமையை மனதில் கொண்டு இந்த வழக்கில் தரப்பட்டுள்ள தரவுகள் (Facto) வழக்கில் சொல்லப்பட்டுள்ள சூழ்நிலைகள் இவற்றின் அடிப்படையில், தேவையான உத்தரவுகளை நீதி மன்றம், பிறப்பிக்க வேண்டும் என்பதாகும்.

(இறுதியில்) வழங்கப்பட்ட தீர்ப்பில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

## அ) வழக்கில் தரப்பட்ட தரவுகள் உண்மைகள் சூழ்நிலைகள் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டது

நீதிமன்றம், வழக்கில் வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கை எண் (7)ஐ சற்றும் கவனத்தில் கொள்ளவில்லை. இதில் நீதிமன்றம் தவறிழைத்து விட்டது. தரப்பட்ட தரவுகளில் நீதிமன்றம் தனது கவனத்தை முழுமையாகச் செலுத்தி இருக்க வேண்டும். நீதி மன்றம் இந்தக் கோரிக்கையைக் கவனத்தில் கொள்ளவில்லை, என்பது தீர்ப்பிலிருந்து தெளிவாகத் தெரிய வருகிறது. 99 பக்கத் தீர்ப்பில் வெறும் 7 ஏழு பக்கமே கோரிக்கையின் இந்தப் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதை நீதிமன்றம் முழுமையாகப் படித்திருந்தால், தன்னுடைய மனதை அதில் செலுத்தி இருந்தால், நிச்சயமாக நீதியின் நலனில் வேறு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கும். அது மனுதாரரின் கோரிக்கை எண் (7) ஏழுக்கு உகந்ததாக இருந்திருக்கும். அந்த மனு பின்வரும் முக்கியமான உண்மைகளைத் தாங்கி நின்றது.

1) அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, (ஹைதராபாத்) சம்சவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு, மாலேகான் 2006 குண்டு வெடிப்புகளில் மேற்கொள்ளப்பட்ட மறு ஆய்வுகள், வேறு வகையான பல உண்மைகளை வெளியே கொண்டு வந்தன. அவற்றுள் முக்கியமானது. இந்தக் குண்டு வெடிப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் புலன் விசாரணைகள், வேண்டுமென்றே தவறான திசையில் மேற்கொள்ளப்பட்டன. அதில் உண்மையான குற்றவாளிகள் தப்பிக்க விடப்பட்டனர். அதன்மூலம் பல பிராமிணிஸ்ட்டு அமைப்புகள் தப்பிக்க விடப்பட்டன. அப்பாவி முஸ்லிம்கள் பழிசுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள்.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

(2) குண்டு வெடிப்பு வழக்குகளில், மேற்கொள்ளப்பட்ட எல்லா விசாரணைகளும் இப்படியே அமைந்தன. உண்மையான குற்றவாளிகள் தப்பிக்கவிடப்பட்டனர். இவர்கள் பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்கள். அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டனர். அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சாட்சியங்கள் எல்லாம், ஒரே மாதிரியிலானவை. அவை சித்திரவதையின் கீழ் வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம். செல்போன்கள் போன்ற இன்னும் சில பொருட்கள்.

(3) உண்மையான குற்றவாளிகள், அந்தக் குற்றவாளிகள் அங்கம் வகித்த பிராமிணிஸ்ட்டு அமைப்புகள், இவற்றைப் பற்றிய உண்மையான சாட்சியங்கள்தடயங்கள், ஆதாரங்கள்கிடைத்தப் போதெல்லாம், அவை வேண்டுமென்றே மறைக்கப்பட்டன. புறக்கணிக்கப்பட்டன. மொத்த இந்தியாவுக்கும் எதிரான சதிகள் பற்றிய ஆதாரங்கள் கிடைத்தப் போதெல்லாம் அவை விட்டுவிடப்பட்டன. அல்லது மறைக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன. காரணம், இந்தியாவுக்கு எதிரான இந்தச் சதிகளைச் செய்தவர்கள் பிராமிணிஸ்ட்டுகள் அல்லது பார்ப்பணீயர்கள். ஆனால், அவர்கள் வகையாகத் தப்பிக்க வைக்கப் படுகின்றார்கள்.

பிராமிணிஸ்ட்டுகள் என்ற பார்ப்பனீயர்கள் தாம் குண்டுகளை வைத்தார்கள் என்பதை நிரூபிக்க பல உறுதியான, தெளிவான சாட்சியங்கள் உச்ச நீதிமன்றத்தில் இந்த மனுவோடு சமர்ப்பிக் கப்பட்டன. அவற்றுள் சில நீதிமன்றங்களிலே தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகைகள், நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் சுவாமி அசீமானந்தா போன்றவர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்கள், அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாதிகள் அமைப்

பினர் நடத்திய கூட்டங்களில் பேசியவற்றின் பதிவுகள், தடயவியல் வல்லுநர்களின் ஆய்வறிக்கைகள், மராட்டிய மாநில தீவிரவாத தடுப்பு நடவடிக்கை படைக்கும், இராணுவ தளபதி பிரசாந்த் புரோகித்திற்குமிடையே நடந்த பேச்சு வார்த்தைகள் போன்றவையாகும். இவையெல்லாம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் என மனுவோடு பிற்சேர்க்கைகளாக இணைக்கப்பட்டவை.

இவற்றையெல்லாம் நீதிமன்றம் ஏறெடுத்து பார்த்தாலே மிகவும் நீதிமிக்கதொரு ஆணையைப் பிறப்பித்திருக்கும். இந்த ஆதாரங்கள் தன்னிலை விளக்கங்களைக் கொண்டது. ஐய்யங்களுக்கு அப்பால் நின்று, குற்றவாளிகளைச் சுட்டிக் காட்டுபவை, குற்றங்களை நிரூபிப்பவை.

கோரிக்கை எண் ஏழு (7)இல் நீதியான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், சிறையில் வாடும் பல அப்பாவி முஸ்லிம்கள் வெளியே வந்திருப் பார்கள்.

## ஆ) உச்ச நீதிமன்றம் சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்த முந்தைய நிகழ்வுகள்

முதன் முதலில் புதிய சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்தால், அது எந்த வழக்கின் நடைமுறையையும் பாதிக்காது. இதில் உச்ச நீதிமன்றத்தின் அச்சம் அர்த்தமற்றது. காரணம் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏனோ தானோ என அமைந்தவை அல்ல. மாறாக, அவை துல்லிய மானவை குறிப்பானவை.

முன்னர் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரித்தவர்கள் தங்கள் கைகளில் சிக்கிய ஆதாரங்களை வேண்டுமென்றே மறைத்தார்கள், புறக்கணித்தார்கள். அத்தோடு குண்டு விசாரணைகளை மேற்கொண்டவர்கள் மாச்சர்யமிக்கவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களை பொய்யைக் கூறி எப்படியாவது குண்டு வைப்பவர்களாக காட்டிட வேண்டும் என்பதிலும், எத்தனை ஆதாரங்கள் கிடைத்தாலும் பிராமிணிஸ்ட்டுகளை (உண்மையான குற்றவாளிகளாக) கைது செய்திடக் கூடாது என்பதிலும் கவனமாக இருந்தார்கள். நாம் கோரும் விசாரணைக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்திருந்தால், அந்தக்குழு முதன் முதலில் நாம் புலன் விசாரணைக் குழுக்கள் மீது நாம் தொடுத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா? பொய்யா? என்பதை விசாரித்திருக்கும். பின்னர் எங்கெல்லாம் விசாரணைகள் தடம் பிறழ்ந்திருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்த வழக்குகளையும் விசாரணைகளையுமே கையிலெடுத்திருக்கும்.

அதேபோல், ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தால், அது ஒரு அதிகாரமற்ற குழுவாகவே அமையும். அது ஒரு இணை புலனாய்வுக் குழுவாகவும் அமையும் என்ற உச்ச நீதிமன்றத்தின் கூற்றும் உண்மையானதல்ல. எத்தனையோ வழக்குகளில் உச்ச நீதிமன்றம், மறு விசாரணைக்காக சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை ஏற்பாடு செய்துள்ளது.

அந்தக் குழுவின் விசாரணையைக் கண்காணித்து இருக்கின்றது. எடுத்துக்காட்டாக முத்திரைத் தாள் மோசடி வழக்கு. இதை தெல்ஹி வழக்கு என்பார்கள். இதில் மராட்டிய உயர்நீதிமன்றம் ஒர் சிறப்புப் புலனாய்வு குழுவை அமைத்தது. அதன் செயல்பாட்டைக் கண்காணித்து வந்தது.

அதேபோல் பல்வேறு ஐயங்களை எழுப்பிய பெஸ்ட் பேக்கரி குண்டு வெடிப்பு வழக்கையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்த வழக்கிலும் உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்கவிடும் அளவில் முதற்கட்ட விசாரணை நடைபெற்றது. இந்த முறையற்ற விசாரணையின் குளறுபடிகளையெல்லாம் உச்ச நீதிமன்றம் கொண்டு சென்றார்கள். உச்ச நீதிமன்றம் அந்த விசாரணையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. காரணம், உச்ச நீதிமன்றம், மறு புலன் விசாரணைக்கும் மறு, நீதிமன்ற விசாரணைக்கும் ஆணையிட முடிவு செய்தது.

இந்த வழக்கில் அதாவது பெஸ்ட் பேக்கரி வழக்கில், உச்ச நீதிமன்றம் கூறியவை நீதித் துறையில் ஒரு சிறிய எடுத்துக்காட்டு!

“புலன்விசாரணையில் அல்லது வழக்கைத் தொடர்வதில் நிகழ்ந்த தவறுகள் தெள்ளதின் தெரிந்திடும்போது அல்லது புலன் விசாரணையில் திரைபோட்டு மூடி மறைக்கப் பட்டவை, திரை விலகிடும்போது தெரிந்திடும் போது, உண்மைகளும் யதார்த்தங்களும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிந்திடும்போது, நீதிமன்றங்கள்


vaigarai velicham official

அவற்றை ஓர் இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்...”

இறுதியாக நீதிமன்றங்கள் நீதி நிலைத்திட வேண்டும் என்பதற்காக உண்மையைக் கண்டு பிடித்துத் தீர்ப்புகளை வழங்கிட வேண்டும். (2004–ஏ, உச்ச நீதிமன்ற வழக்குகள், 158, 2004–ஏ Supreme Court Cases 158)

ஆனால், நாம் மேலே சொன்ன வழக்கில், பல குண்டு வெடிப்புகளில் நடந்த விசாரணையில் உண்மையான குற்றவாளிகளும், தடயங்களும் கையில் கிடைத்தபோது, அவை மறைக்கப்பட்டன. அப்பாவி முஸ்லிம்களுக் கெதிராக தடயங்கள் புனையப்பட்டன. இவற்றை உச்ச நீதிமன்றத்தில் தகுந்த ஆதாரத் துடன் எடுத்துரைத்து விட்டோம்.

உச்ச நீதிமன்றம் சில சாக்குப்போக்குகளைச் சொல்லி மொத்த விவகாரத்தையும் தட்டிக் கழித்தது. உச்ச நீதிமன்றம் மறு விசாரணைக்கு ஆணை இடாவிட்டாலும், வேறொன்றை செய் திருக்கலாம். அது, எந்த ஆதாரமுமில்லாமல் சிறையில் வாடும் முஸ்லிம்களுக்கு (சிலர் பல ஆண்டுகளாக சிறையிலேயே கிடக்கின்றனர்) இந்த அப்பாவிகளுக்குப் பிணையாவது கொடுத் திருக்கலாம். அதுவும் இந்த மனுவில் கோரப் பட்டிருந்தது.

### இ) பயனற்ற சட்ட ரீதியான நிவாரணம்

உச்ச நீதிமன்றம் சட்ட ரீதியான நிவாரணத்தை பரிந்துரைப்பது வழக்கம். ஆனால், அது இப்போது எடுபடவில்லை என்பதே உண்மை.!

எந்த அப்பாவி முஸ்லிம்களைப் பிடித்து நீதி மன்றங்களில் நிறுத்தினாலும், எந்தக் கேள்விக் கணக்குமின்றி அவர்கள் சிறையிலடைக்கப் பட்டார்கள்.

அதேபோல் நீதிமன்றக் காவலைத் தொடர்ந்து காவல் துறையின் காவல் வேண்டும். (Custody of Police) எனக் கேட்டால், அதுவும் எந்தக் கேள்வியுமில்லாமல் கொடுக்கப்பட்டது.

நீதிமன்றங்களின் இந்தத் தாராளத் தன்மை, காவல்துறையினர் விரும்பும் விதத்தில் அந்த அப்பாவிகளைச் சித்ரவதைச் செய்திடவும், ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்கிடவும் உதவி செய்தன.

ஆனால், அந்த அப்பாவி முஸ்லிம்கள் பிணை கேட்டு, நீதி மன்றங்களை அணுகியபோது, எந்த விசாரணையுமின்றி அவை நிராகரிக்கப்பட்டன.

பிணை மனுக்களை கண்ணை மூடிக் கொண்டு நீதிமன்றங்கள் நிராகரித்த வழக்குகளில் பிணை கேட்டவர்கள், பல வருடங்கள் கழித்து நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட் டார்கள். அதற்குள் அவர்களின் உடல்நிலை சிதைந்து சின்னாபின்ன மாகிவிட்டன. அந்தக் குடும்பங்கள் உருகுலைந்தே போய் விட்டன. வாழ்நாள் முழுக்க தலையெடுக்க இயலவில்லை.

இந்த நிலையில்தான் நாடெங்கும் (உலகெங்கும்) பெரிதாகப் நடைபெற்ற, மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, சம்சவ்தா விரைவு ரெயில் குண்டு வெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு, மாலேகான் 2006 குண்டு வெடிப்பு நடந்தது.

மாலேகான் 2006 குண்டு வெடிப்பில் உயர் நீதிமன்றங்களே கூட பிணை வழங்கிடவில்லை.

மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்புகளில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் பலரை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதே தெரிய வில்லை. தெரிவிக்கவுமில்லை. எனவே அந்தக் குடும்பத்தவர்கள், ஆட்கொணர்வு மனுவை – (Habeas Corpus) நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். அதன்பின்னர் காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். பின்னர் கைது செய்தார்கள். காவல்துறை அத்தனை குளறுபடி களையும், சட்ட மீறல்களையும் நீதித்துறை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தது. ஆனால் அப்பாவி முஸ்லிம்கள் எத்தனை முறை பிணை கேட்டு மன்றாடினாலும் அந்த மனுக்களை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்தன. பிணை வழங்கிடவே இல்லை. இறுதியில் அவர்கள் வழக்கிலிருந்து மொத்தமாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

டெல்லி ஜாமியாமில்லியா பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் ஒருமைப்பாட்டுக் குழு 2013ம் ஆண்டு ஒரு நூலை வெளியிட்டார்கள். அந்த நூலில் 16 குண்டு வெடிப்புகளில் சிக்க வைக்கப்பட்ட 40 முஸ்லிம்களைப் பற்றி பேசி னார்கள். இந்த முஸ்லிம்களை ‘ஹூஜி’ என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்றும், ‘லஷ்கர்’ உல்பத் என்ற தீவிரவாத அமைப்பைச்

சார்ந்தவர்கள் என்றும் இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். பின்னர் அத்தனை முஸ்லிம்களும் அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்டார்கள். அதேபோல் இந்த நூலில் 21 வழக்குகளில் இதுபோன்று அப்பாவிகள் கைது செய்யப்பட்டதையும், அவர்கள் விடுதலை செய்யப்பட்டதையும் குறிப்பிட்டிருக்கின்றோம். ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்றம் – சாட்சியங்கள் புனையப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கின்றது. அதேபோல் புலன்விசாரணை நடத்தியவர்கள் பொய்யான சாட்சியங்களைத் தயாரித்து, அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைச் சிக்க வைத்திருக்கின்றார்கள் எனக் கூறி இருக்கின்றது. காவல் துறையின் மேல் கண்டனங்களை பாய்ச்சி உள்ளது.

ஆனால், இந்த இளைஞர்கள் 5 முதல் 10 ஆண்டுகள் வரை சிறையிலிருக்க வேண்டிய தாயிற்று. சில வழக்குகளில் 10 முதல் 20 ஆண்டுகள் வரை சிறையிலிருக்க வேண்டியதாயிற்று.

புலன்விசாரணையைச் செய்தவர்களின் மாச்சார்யங்கள் – தகிடுத்தத்தங்கள், பொய்கள், சதி இவையெல்லாம் எல்லோருடைய கண்களுக்கும் நன்றாகத் தெரிந்தது. இதுபோன்ற சூழலில் அப்பாவி முஸ்லிம்கள் சிக்கி இருக்கும்போது, அவர்களை சட்டத்தின் தீர்வை நாடுவார்கள், என்றுரைப்பது எப்படிப் புத்திசாலித்தனமாக இருக்கும்?

### ஈ) மறு விசாரணையைக் கோருவது Vs 173(8) இந்திய சட்ட முறைமை


உச்ச நீதிமன்றம், ஒருவர் மறு புலன் விசாரணையைக் கோரலாம் (178 Cr.PC)என்றும், அது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டாலும் சரியே, என்றும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இப்படி சொன்ன உச்ச நீதிமன்றத்தின் மனநிலை, என்னவெனில், புலன்விசாரணையில் நடந்த தவறுகள், வேண்டுமென்றே தொடர்ந்ததில்லை. அவை ஏதோ கவனக்குறைவால் நடந்தது என்பதாகும். ஆனால், இதில் நீதிமன்றம் மிகப்பெரியதொரு தவறைச் செய்து விட்டது. நாம் சுட்டிய வழக்குகளில் நடந்த தவறுகள் வேண்டுமென்றே நடந்தவை.

(i) அஜ்மீர் ஷரீஃப் தர்கா குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு இவற்றைப் பொறுத்தவரை முக்கியமான தடயங்கள் ஒரு வாரத்திற்குள் கிடைத்துவிட்டது. புலன் விசாரணை செய்தவர்கள் அவற்றை வேண்டுமென்றே புறக்கணித்தார்கள். மூன்று வருடங்கள் கழித்து இன்னொரு புலன் விசாரணை குழுமம் விசாரணை செய்தது, உண்மையான குற்றவாளிகளை கைது செய்தது.

(ii) 2008 மாலேகான் குண்டு வெடிப்பில் மூன்று மடிக்கணினிகள் சிக்கின. இந்த மடிக்கணினிகள் 2009 பிப்ரவரி மாதம் முதலே புலன் விசாரணைக் குழுவின் கைகளில் இருக்கின்றன. ஆனால், இன்றளவும் அதை புலன் விசாரணைக் குழுக்கள் முழுமையாக ஆராய்ந்திடவில்லை. அவற்றில் மிகவும் முக்கியமான ஆடியோக்களும் வீடியோக்களுமிருக்கின்றன. அதாவது மடிக்கணினியில் இடம்பெற்ற சதிகாரர்களின் உரையாடல் குறித்த ஒலி, ஒளி காணொளியும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

**- தொடரும்**





# பயங்கரவாத சதித்திட்டம்-2

**UAPA வளையத்திற்குள் கொண்டுவர சாட்சிகளையும், ஆதாரங்களையும் உருவாக்குதல்.**

அத்தியாயம் 8 மிகவும் முக்கியமான, முஸ்லிம் சமூகத்தின் செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் கவனிக்க வேண்டிய அத்தியாயமாகும். வாசகர்களின் புரிதலுக்காக இந்த ஒரு அத்தியாயத்தை மட்டும் இரண்டு பாகங்களாக கொடுத்துள்ளோம். எனவே சென்ற தொடரை படித்து விட்டு இந்த தொடரை படிக்கவும்.

**IPC FIRக்கள் மற்றும் FIR 59 விசாரணை களுக்கிடையிலான முரண்பாடுகள்**

FIR 59 வழக்கின் விசாரணை, முழுமையான மிகப்பெரிய “சதி” மூலம் கலவரங்களை ஏற்படுத்தியதாகக் சொல்கின்றது. அதே நேரத்தில் வடகிழக்கு டெல்லி காவல்நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட பிற IPC வழக்குகள், கலவரங்கள் நடைபெற்றபோது நடந்த தனிப் பட்ட வன்முறைக் சம்பவங்களை மட்டுமே தொடர்புடையவையாக உள்ளன. FIR 59 வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றச் சாட்டாளர்கள் இந்த IPC வழக்குகளிலும் ஒரே குற்றச்சாட்டுகளுக்காக (தனிப்பட்ட வன்முறைகளில் பங்கேற்றதாக அல்லது சதி செய்ததாக) குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

IPC வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட வர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுகள் மற்றும் ஆதாரங்கள், FIR 59இல் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுடனும் ஒத்துபோகின்றன. இதற்கிடையே IPC வழக்கு களில் நடத்தப்பட்ட விசாரணையை FIR 59 விசாரணையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில முக்கிய முரண்பாடுகள் தெரிய வருகின்றன. இவ்வாறான முரண்பாடுகளை கீழே எடுத்துக் காட்டுகிறோம். குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் இந்த பகுதியில் மறு பெயரிடப் பட்டுள்ளன.

FIR 48/2020 மற்றும் FIR 50/2020 தொடர்பான முரண்பாடுகள்

FIR 48/2020 குற்றப்பத்திரிக்கையில், டெல்லி போலீஸ் குற்றம் சாட்டப்பட்டவர்களான X மற்றும் Y ஜாப்ராபாத் மெட்ரோ நிலையம் அருகே, 2020 பிப்ரவரி 22 அன்று இரவு 8 மணியளவில் கூட்டத்தை கூட்டி கலவரத்திற்கு தூண்டி போலீசாரின் நடவடிக்கையை தடுத்ததாகக் கூறுகிறது.

FIR 50/2020 குற்றப்பத்திரிக்கையில் X மற்றும் Y ஜாப்ராபாத் மெட்ரோ நிலையம் அருகே பிப்ரவரி 22 அன்று இரவு 9 மணியிலிருந்து பிப்ரவரி 25 அன்று மாலை 7 மணிவரை கலவரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுப்படி, பிப்ரவரி 25 அன்று அவர்கள் கூட்டத்தை தூண்டி கற்களை எறிந்து,

துப்பாக்கிச்சூடு செய்ததாகவும், இதனால் முஸ்லிம் சிறுவன் ஒருவர் உயிரிழந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அதே சம்பவத்துக்கு தொடர்புடைய FIR 59 வழக்கில் சிறப்பு பிரிவு கூறுவதாவது,

"பெரிதான சதி திட்டத்தின் படி X மற்றும் Y உள்ளிட்டோர், ஜாப்ராபாத் மெட்ரோ நிலையத்தில் அமர்ந்து போராட்டம் செய்த பெண்களை வன்முறைக்கு தூண்டி, அவர்களுக்கு ஆசிட், கட்டைகள், கற்கள் மற்றும் மிளகாய் தூள் போன்றவற்றை வழங்கினார்கள் என்பதாகும்."

ஆசிட், மிளகாய் தூள் போன்ற ஆயுதங்களை விநியோகித்ததாகச் சொல்வது FIR 59 இல் மட்டும் தான் இடம்பெறுகிறது. ஆனால், இந்த மூன்று FIRக்களும் ஒரே சம்பவமான ஜாப்ராபாத் மெட்ரோ நிலைய கலவரத்தைப் பற்றியே குற்றச்சாட்டுகளை கூறுகின்றன.

வன்முறையை தூண்டியதற்கான ஆதாரங்கள்

FIR 48 மற்றும் FIR 50 வழக்குகளில் X மற்றும் Y ஆகியோருக்கு பிணை வழங்கியபோது, நீதிமன்றங்கள் ஜாப்ராபாத் மெட்ரோ நிலையத்தில் வன்முறையைத் தூண்டியதாகக் காட்டக்கூடிய எந்த ஆதாரமும் இல்லை என்று கண்டறிந்தன.

FIR 48 வழக்கில் பிணை வழங்கிய மெட்ரோப்பாலிடன் மஜிஸ்திரேட், வழக்குக்கான Case Diary மற்றும் விசாரணை அதிகாரியின் அறிக்கையைப் பார்த்தபின் குற்றச்சாட்டாளர்கள் எந்த வன்முறையிலும் ஈடுபட்டதாகக் காட்டும் ஆதாரம் இல்லை என்று கூறினார். மேலும், அவர்கள் வெறுமனே CAA எதிர்ப்பு அமைதிப் போராட்டத்தில் பங்கேற்றதையே காட்டுகிறது என்றும், போலீசாரின் சட்டப்பூர்வ நடவடிக்கையைத் தடுத்ததாகக் கூறும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் மஜிஸ்திரேட் கருத்து தெரிவித்தார்.

FIR 50 வழக்கில் Xக்கு பிணை வழங்கிய டெல்லி உயர்நீதிமன்றம், அரசுத் தரப்பில், Case Diary மற்றும் முறையாக சீல் வைக்கப்பட்ட ஆதாரங்களை ஆராய்ந்தபின், குற்றச்சாட்டாளர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகக் காட்டக்கூடிய எந்த ஆதாரமும் இல்லை என்றும் X ஆர்ப்பாட்டக்காரர்களை தூண்டியதாகக் காட்டக்கூடிய எந்த ஆதாரமும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியது.

மேலும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டது:

"அவர் அமைதிப் போராட்டத்தில் பங்கேற்றது Article 19ன் கீழ் அவரது அடிப்படை உரிமைதான். ஆனால், அவர் எந்தவொரு பேச்சிலும் பெண்களை வன்முறைக்கு தூண்டியதாகவோ, துயரகரமான உயிரிழப்பு மற்றும் சொத்துகள் சேதம் ஏற்படுத்தியதாகவோ எந்த ஆதாரமும் இல்லை. போராட்டம் நீண்ட நாட்களாக நடைபெற்றுவந்தது, அப்போது ஊடகங்கள் மற்றும் போலீஸ் கேமராக்கள் இருந்தன. இருந்தும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் எந்த ஆதாரமும் இல்லை."

மேலும் நீதிமன்றம் குறிப்பிடுகிறது:

"குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக காட்டப்படும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மிகவும் தாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த சாட்சிகள் டிசம்பர் 2019 முதல் கலவரத்திற்குப் பின்னர் முழுதும் சம்பவ இடத்தில் இருந்ததாகக் கூறப்பட்டும், அவர்களின் வாக்குமூலங்கள் மட்டும் 2020 ஜூன் 30, ஜூலை 3 மற்றும் ஜூலை 8 அன்று மட்டுமே (CrPC பிரிவு 164ன் கீழ் கூட ஜூலை 8 அன்று) பதிவு செய்யப்பட்டுள்ளது."

அடுத்து நடந்தது என்னவெனில், டெல்லி போலீஸ் சமர்ப்பித்த போராட்ட வீடியோக்களை விசாரித்த பிறகு, டிரையல் நீதிமன்றம் FIR 50 வழக்கில் Yக்கு பிணை வழங்கியது. அதில் அவர் வன்முறையை தூண்டியதாக எந்த ஆதாரமும் இல்லை என்று நீதிமன்றம் தெளிவாகக் கூறியது.

FIR 48 மற்றும் FIR 50 வழக்குகளில் ஜாப்ராபாத் மெட்ரோ நிலையத்தில் வன்முறையைத் தூண்டியதாகக் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எந்த ஆதாரமும் காவல்துறைக்கு கிடைக்கவில்லை என்பது, FIR 59 விசாரணையின் போது "வன்முறையை தூண்டியதாக புதிய ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டது" என்ற காவல்துறையின் வாதத்தில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

FIR 59இல் X மற்றும் Y மீது வன்முறையை தூண்டியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் PWs DELTA, GAMA, SMITH, SIERRA மற்றும் ECHO ஆகியோரின் வாக்குமூலங்களின் அடிப்படையில்தான் உள்ளது. இவர்கள் அனைவரும் ஜாப்ராபாத் மெட்ரோ நிலையத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். இவர்களின் வாக்குமூலங்கள் ஏப்ரல் 2020க்குப் பிறகே பதிவு

செய்யப்பட்டுள்ளன. SMITH வாக்குமூலம் கூட செப்டம்பர் 2020-இல்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FIR 50 வழக்கில் டெல்லி உயர்நீதிமன்றம், தாமதமாகப் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் இங்கு இதேபோல் பொருந்துகின்றன.

இத்தனை மாதங்களுக்குப் பிறகு பதிவான சாட்சிகளின் வாக்குமூலங்கள் தவிர, குற்றச் சாட்டாளர்கள் வன்முறையை தூண்டியதாக காட்டக்கூடிய எந்த சுயாதீன ஆதாரமும் போலீசிடம் இல்லை. போராட்டங்கள் ஊடகங்கள் மற்றும் போலீசாரின் கண்காணிப்பில் தொடர் வீடியோ பதிவு செய்யப்பட்ட நிலையில், இதுபோல் எந்த ஆதாரமும் இல்லாமல் இருப்பது மிக அபூர்வமானதாகும்.

**மிளகாய் தூள் மற்றும் பிற ஆயுதங்களை விநியோகித்த குற்றச்சாட்டு**

FIR 59 வழக்கில் இரண்டு சாட்சிகள், BRAVO மற்றும் HELIUM குற்றச்சாட்டாளர்கள் மிளகாய் தூள், ஆசிட் மற்றும் பிற ஆயுதங்களை விநியோகித்ததாக விரிவாகத் தகவல் தருகிறார்கள். ஆனால் FIR 48 மற்றும் FIR 50 வழக்குகளில் சாட்சிகள் எவரும் குற்றச்சாட்டாளர்கள் போராட்டக்காரர்களுக்கு இத்தகைய ஆயுதங்களை வழங்கியதாகக் கூறவில்லை.

ஜாப்ராபாத் மெட்ரோ நிலைய போராட்டங்களில் கலந்து கொண்டதாகக் கூறப்படும் மற்றும் கூட்டத்தை தூண்டியதாகக் கூறிய சாட்சிகள் கூட ஆயுத விநியோகத்தைப் பற்றிக் கூறவில்லை

FIR 48 மற்றும் FIR 50 வழக்குகள் IPCயின் கலவர குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் FIR 59 வழக்கு UAPA பிரிவு 15ன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. IPC வழக்குகளில் சாட்சிகள் கலவரத்தை மட்டுமே சொல்கின்றனர். ஆனால் FIR 59 வழக்கில் ஆயுத விநியோகத்தைச் சொல்கின்றனர். இதனால் சாட்சிகளின் வாக்குமூல்கள், தீவிரவாத குற்றமாக நிரூபிக்க வேண்டி, FIRக்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்டிருக்க வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது.



மேலும், FIR 59 மற்றும் மற்ற குற்றப் பத்திரிக்கைகளில் மிளகாய் தூள் அல்லது ஆசிட் காரணமாக ஏற்பட்ட காயங்கள் தொடர்பான எந்தவொரு புகார் அல்லது மருத்துவச் சான்றிதழும் இல்லை. ஒருவர் கூட மிளகாய் தூள் பயன்படுத்தப்பட்டதாக நேரில் சொல்லவில்லை. சம்பவ இடத்திலோ குற்றச்சாட்டாளர்களிடமோ மிளகாய் தூள் கைப்பற்றப்பட்டதாக எந்த பதிவும் இல்லை. ஆசிட் அல்லது மிளகாய் தூள் விநியோகத்தின் வீடியோ அல்லது CCTV காட்சிகளும் இல்லை. இவை அனைத்தும் விசாரணை அதிகாரி ஆய்வு செய்ய வேண்டிய முக்கிய அம்சங்களே. குறைந்தபட்சமாக, அவை எங்கே எப்படிப் பெற்றார்கள், யாருக்கு கொடுத்தார்கள் என்பது பற்றி விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய ஆதாரங்களின் இல்லாமை குற்றப்பத்திரிக்கையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் மீது சந்தேகம் ஏற்படுத்துகிறது. இதனால் சாட்சிகளின் வாக்குமூலங்கள் fabrication செய்யப்பட்டிருக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

**300 பெண்களை கலவரத்திற்கு கொண்டு வந்ததாகக் குற்றச்சாட்டு**

FIR 59 வழக்கில், PW HELIUM கூறுவதாவது, 2020 பிப்ரவரி 23 அன்று ஜஹாங்கிர்புரியில் இருந்து 300 பெண்கள் பேருந்தில் ஜாப்ராபாத் கொண்டு வரப்பட்டு, X, Y மற்றும் W அவர்களை வரவேற்றதாகவும், அவர்களுக்கு ஆசிட் மற்றும் மிளகாய் தூள் வழங்கியதாகவும் கூறுகிறார்.

குற்றச்சாட்டுப்படி, இந்த 300 பெண்களே X மற்றும் Y தூண்டுதலின் கீழ் 2020 பிப்ரவரி 23 அன்று இரவு 11 மணி முதல் 24 தேதி அதிகாலை 12.54 வரை கலவரத்தைத் தொடங்கினர். ஆனால் அந்த 300 பெண்களில் யாரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை

அல்லது விசாரிக்கப்படவில்லை. அவர்கள் FIR 48 மற்றும் FIR 50 வழக்குகளிலும் குற்றச் சாட்டாளர்களாக சேர்க்கப்படவில்லை. இத்தகைய முக்கிய விவரங்களுக்கு குற்றப் பத்திரிக் கைகளில் எந்தவொரு விளக்கமும் இல்லை.

**FIR 59 குற்றப்பத்திரிக்கையில் போலீசார் வெளியிட்ட செய்திகளைப் பற்றிய எதிர்மறைத் துறைகள்**

FIR 59இல், குற்றப்பத்திரிக்கையில் டெல்லி போலீஸின் ஸ்பெஷல் பிராஞ்ச் அதிகாரிகள் “North West Zone (NWZ)” மற்றும் “SB/ops” எனும் வாட்ஸ்அப் குழுக்களில் பரிமாறிக்கொண்ட செய்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பெரிதும் ஆய்வு செய்தபோது, ஜஹாங்கிர்புரியில் இருந்து கிளம்பிய 300 பெண் போராட்டக்காரர்கள் கொண்ட பேருந்து தொடங்கியதிலிருந்து தொடர்ந்து போலீஸ் கண்காணிப்பில் இருந்தது என்பது தெளிவாகிறது.

இது, “North West Zone” குழுவில் அப்துல் அஜீஸ் என்பவர் அனுப்பிய செய்தி ஒன்றில் கூறப்பட்டுள்ளது:

“சார், சி பிளாக் ஜஹாங்கிர்புரியில் இருந்து சிலர் பேருந்தில் சாஹீன் பாக் போகின்றனர். எண்ணிக்கை சுமார் 250/300 ஆகும். இதில் சுமார் 80% பெண்கள் உள்ளனர். இஸ்தரஃபீல், தப்ரேஸ் ஆகியோரின் தலைமையில் சாஹீன் பாக் சென்றுள்ளனர்.”

அதேபோல் “SB/ops” குழுவில் பரிமாறப் பட்ட செய்திகளிலும், பெண்கள் போராட்டக் காரர்கள் கொண்ட பேருந்து இரவு 9:55 மணி வரை போலீசார் கண்காணிப்பில் இருந்தது தெளிவாகிறது. NWZ பிராந்திய அதிகாரி ஒருவர் 9:55 மணிக்கு அனுப்பிய செய்தியில் கூறுகிறார்:



“பெண்களை காலை ஜஹாங்கிர் புரியில் இருந்து 6 பேருந்துகளில் சாஹீன் பாக் அனுப்பி யிருந்தோம். அவர்கள் ஜஹாங்கிர்புரிக்கு திரும்பி தற்போது வீடுகளுக்கு சென்றுவிட்டனர். NWZ இல் மற்ற பகுதிகள் அமைதியாக உள்ளன.”

FIR 59-இன் முதல் குற்றப்பத்திரிக்கையின் படி, ஜாப்ராபாத் மெட்ரோ நிலைய கலவரம் பிப்ரவரி 23, 2020 அன்று இரவு 11 மணி முதல் பிப்ரவரி 24 அதிகாலை 12:54 வரை நடந்தது எனக் கூறப்படுகிறது. ஆனால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாட்ஸ்அப் செய்திகள் போராட்டக்காரர்கள் இரவு 9:55 மணிக்கே வீடுகளுக்கு சென்றுவிட்டனர் என்று காட்டு கின்றன. அதனால் இவர்கள் அதே இரவு ஆயுதங்கள், ஆசிட் பாட்டில்கள், மிளகாய் தூள் கொண்டு கலவரத்தைத் தூண்டினர் என்ற ஸ்பெஷல் செல் வாதத்தில் எதிர்மறை உருவாகிறது.

மேலும், அந்த 300 பெண்கள் கண்காணிப்பில் இருந்ததால் போலீசாருக்கு அவர்கள் வீட்டு முகவரிகள் தெரிந்திருக்க வேண்டும். இந்த பெண்கள் கலவரத்தில் ஈடுபட்டதாக விசாரணை குழு நம்பினால், அவர்கள் அடையாளம் காணப்பட வேண்டியதும், அவர்களிடம் விசாரணை நடத்தப்பட வேண்டியதும் அவசியம். அவர்களது வாக்குமூலங்கள் குற்றச்சாட்டாளர்களான X மற்றும் Y மீது வலுவான ஆதாரமாக இருந்திருக்கும். அவர்களை விசாரிக்காதது விசாரணையின் மிகப்பெரிய குறையாகும்; இதனை சாதாரண அலட்சியம் எனக் கருத முடியாது.

**FIR 101/2020 தொடர்பான முரண்பாடுகள்**

Z என்பவர், மார்ச் 21, 2020 அன்று FIR 59இல் டெல்லி கலவரத்தை திட்டமிட்டு நடத்திய தாகக் கைது செய்யப்பட்டார். மூன்று மாதங் களுக்குப் பிறகு ஜூன் 6, 2020 அன்று அவரே FIR 101 (கஜூரி காஸ் காவல் நிலையம்) இல் கைது செய்யப்பட்டார். இதில் மற்றொரு நபருடன் சேர்ந்து மக்கள் கூட்டத்தை தூண்டி கலவரம் ஏற்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக இருப்பது PW SATURN என்ற ஒரே சாட்சியின் வாக்கு மூலம்தான். Sessions நீதிமன்றம் Zக்கு


vaigarai velicham official

FIR 101இல் பிணை வழங்கும்போது கூறியது:

“PW SATURN FIR 59இல் சாட்சியாக இருக்கிறார், அதே குற்றப்பத்திரிக்கையில் குற்றசதி குறித்த விசாரணை நடைபெறுகிறது. ஆனால் 21.05.2020 அன்று அவரது வாக்குமூலத்தில் குற்றச்சதி குறித்து ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. ஆனால் 27.09.2020 அன்று திடீரென குற்றச்சதி பற்றி குற்றச்சாட்டுகளை கூறுகிறார்.”

அதேபோல், நீதிமன்றம் Zக்கு பிணை வழங்கும்போது கூறியது:

“இந்த வாக்குமூலத்தில் இருந்து பெரிய குற்றச்சதி உள்ளது என எப்படிக் கூற முடியும் என்று எனக்கு புரியவில்லை. இத்தகைய வலுவற்ற ஆதாரத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது போலீசாரின் பொறுப்பற்ற செயலாகும்.”

FIR 59 குற்றப்பத்திரிக்கையிலும் குற்றச்சதி குறித்த பிரதான ஆதாரம் மறுதலிக்கப்பட்ட PW SATURN வாக்குமூலமே ஆகும். இது FIR 101இல் நம்பிக்கை பெறவில்லை என்பதை FIR 59இல் கூட ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். மேலும், FIR 59இல் அவரை பாதுகாக்கப்பட்ட சாட்சியாகக் கொண்டிருப்பது விசாரணைக் குறை என்று கூறப்படுகிறது, ஏனெனில் FIR 101இல் அவருடைய பெயர் வெளிப்படையாகவே உள்ளது. இதற்கான எந்த விளக்கமும் இல்லை.

**ஆயுதங்கள் பெற்றல் குறித்த முரண்பாடுகள்**

U மற்றும் Z ஆகியோர் மீது FIR 59இல் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை மற்றும் ஜகத்புரி காவல் நிலையத்தின் FIR 44/2020 குற்றப் பத்திரிக்கையை ஒப்பிடும்போது மற்றொரு முக்கிய முரண்பாடு தெரிகிறது.

FIR 59இல் U என்பவர், Z என்பவருக்கு துப்பாக்கி வாங்க நிதி உதவி செய்தார் என்று ஸ்பெஷல் செல் கூறுகிறது. ஆனால் FIR 44இல் Z என்பவர் ஒரே தலைமையில் துப்பாக்கியை வாங்கி மற்றொரு குற்றச்சாட்டாளரான Vக்கு போலீசாரை சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டார் என்று கூறப்பட்டுள்ளது. அதே சமயம், U என்பவர், FIR 44இல் குற்றச்சாட்டாளராக இருக்கிறார். ஆனால் அவரிடம் எந்த நிதி அல்லது ஆயுதம் வாங்கிய ஆதாரமும் இல்லை. இதுபோன்ற முரண்பாடுகள் குற்றச்சாட்டுகளை முழுமையாக சந்தேகத்தில் ஆழ்த்துகிறது.

இந்த எதிர்மறைகள் மற்றும் முரண்பாடுகள் FIR 59 விசாரணையின் நம்பகத்தன்மையைப் பெரிதும் கேள்விக்குள்ளாக்குகின்றன. IPC வழக்குகளில் கூட நீதிமன்றங்கள் இதே ஆதாரங்களைப் பிணை வழங்க முடியாதவையாகக் கண்டுள்ளன. விசாரணை முகாம்கள் ஒரே சம்பவத்திற்கே முரண்பாடான விளக்கங்களை அளிப்பது, முக்கிய சாட்சிகளை விசாரிக்க மறுப்பது மற்றும் ஆதாரங்களை போலியாகக் கொண்டு வருவது ஆகியவை சேர்ந்து இந்த வழக்கின் விசாரணையை மிகத் தாழ்ந்த தரத்திற்கு கொண்டுசென்றுள்ளன.

**ஒரே மாதிரியான ஒப்புதல் அறிக்கைகள்**

FIR 59 குற்றப்பத்திரிக்கையில் கவலையை ஏற்படுத்தும் இன்னொரு அம்சம் பல்வேறு குற்றச்சாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரே மாதிரியான ஒப்புதல் அறிக்கைகள் ஆகும். இந்தக் குற்றப்பத்திரிக்கையில் மொத்தம் 38 ஒப்புதல் அறிக்கைகள் உள்ளன. ஒரு குற்றச்சாட்டாளர் போலீசாரிடம் அளிக்கும் ஒப்புதல் அறிக்கை சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படாதது. இருப்பினும், அந்த ஒப்புதல் அறிக்கையின் அடிப்படையில் முக்கிய சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டால், இந்திய ஆதாரச் சட்டம், 1872 இன் பிரிவு 27ன் கீழ் அது ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்த வெளிப்படுத்தும் அறிக்கைகளைக் கவனித்துப் பார்க்கும் போது, 38 அறிக்கைகளில் சுமார் 20 அறிக்கைகள் ஒரே மாதிரியாக உள்ளன என்பதை இந்தக் குழு கண்டுபிடித்துள்ளது. சில அறிக்கைகள் முழுவதும் ஒரே மாதிரி இருக்கின்றன; சிலவற்றில் ஒரே போன்ற பத்திகள் இருக்கின்றன.

ஒப்புதல் அறிக்கைகள் குற்றச்சாட்டாளர் தன்னிச்சையாக பேசியதை சொல்லி எழுதப்பட்டு இருப்பது அவசியம். வெவ்வேறு நேரங்களில் விசாரிக்கப்பட்ட குற்றச்சாட்டாளர்கள் ஒரே மாதிரியான சொற்களைப் பயன்படுத்தி ஒரே மாதிரி அறிக்கைகள் அளிப்பது இயலாத காரியம். இதனால் இந்த அறிக்கைகள் முன்பே கற்பித்துக் கொடுக்கப்பட்டவையோ அல்லது முழுவதும் உருவாக்கப்பட்டவையோ என்ற சந்தேகம் எழுகிறது.

உதாரணத்திற்கு, மீரான் ஹைதர் 2020 ஏப்ரல் 8ஆம் தேதி அளித்த அறிக்கையும் சஃபூரா ஜர்கர்

2020 ஏப்ரல் 14இல் அளித்த அறிக்கையும் பெயரைத் தவிர மற்றபடி சொற்படுத்துதல் வரை, அனைத்தும் ஒரே மாதிரியானவை. அதே போல ஷதாப் அகமது, சலீம் மாலிக், அதார் கான் ஆகியோரின் மே மாதம், ஜூன் மாதம், ஜூலை மாதங்களில் அளித்த ஒப்புதல் அறிக்கைகள் மற்றும் முகம்மது சலீம் கானின் (தேதி குறிப்பிடப்படாத) அறிக்கைகள் அனைத்தும் ஒரே மாதிரியாக உள்ளன.

அதேபோல ஷதாப் அகமது மற்றும் அதார் கான் ஆகியோரின் ஆகஸ்ட் 28, 2020இல் அளித்த ஒப்புதல் அறிக்கைகள், நடாஷா நார்வால் மற்றும் தேவாங்கனா கலிதா ஆகியோரின் ஜூன் 7, 2020இல் அளித்த அறிக்கைகளுடன் ஒரே மாதிரி இருக்கின்றன.

காலித் சைஃபி மற்றும் இஷ்ரத் ஜஹான் ஆகியோரின் ஏப்ரல் 4, 2020இல் அளித்த வெளிப்படுத்தும் அறிக்கைகளின் பகுதிகள் கூட ஒரே மாதிரி உள்ளன. மீரான் ஹைதரின் ஏப்ரல் 4, 2020இல் அளித்த அறிக்கையுடனும் அது பொருந்துகிறது.

இதில் ஒரே மாதிரியான பிழைகள் எல்லா அறிக்கைகளிலும் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒருவரின் சொற்பிரயோக பாணியும் இலக்கண பிழைகளும் தனிப்பட்டவை. ஒரே மாதிரியான இலக்கணப் பிழைகள் பல குற்றச்சாட்டாளர்களின் அறிக்கைகளிலும் இருக்கின்றன என்பதால் அவை ஒரே நபரால் உருவாக்கப்பட்டதாகவே தோன்றுகிறது.

சட்டப்படி எந்தப் பொருட்கள் கைப்பற்றப் படாமல் இருப்பின் அத்தகைய ஒப்புதல் அறிக்கைகள் செல்லாதவை. ஆனாலும் National Investigation Agency v. Zahoor Ahmad Shah Watali வழக்கில் (Watali வழக்கு) உச்ச நீதி மன்றம் கூறியப்படி, பிணை கேட்ட நிலையில் குற்றப்பத்திரிக்கையில் உள்ள ஆதாரத்தின் செல்லுபடியற்ற தன்மை கருத்தில் எடுக்கப் படுவதில்லை. ஆகவே, குற்றச்சாட்டாளர்களுக்கு எதிரான இந்தப் போலியான ஒப்புதல் அறிக்கைகள் தண்டனைக்கு ஆதாரமாக இருக்க இயலாவிட்டாலும் UAPAஇன் கீழ் பிணை மறுக்கச் சிறந்த காரணங்களாக பயன்படுத்தப் படுகின்றன.



முடிவாக!

FIR 59 விசாரணை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று கொண்டிருக்கிறது. இதில் மூன்று கூடுதல் குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைப் பரிசீலிக்க இந்தக் குழுவுக்கு வாய்ப்பு இல்லை என்பதால் முழு வழக்கின் நிலையைப் பற்றி கருத்து கூற முடியாது.

தனிப்பட்ட குற்றச்சாட்டாளர்களை குறித்த சில சான்றுகள் வெளிப்படுதலைக் கொண்டு சாத்தியக்கூறுகளைக் கொடுக்கக்கூடும். ஆனால் அவை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். எனினும், முழு வழக்கின் அடித்தளமாக இருக்கும் “திட்டமிட்ட பெரிய சதி” குறித்த குற்றச்சாட்டு சட்டப்படி நம்பகமற்ற தாமதமான வாக்குமூலங்கள் மீது மட்டுமே சார்ந்திருப்பது மிகப்பெரும் குறை ஆகும்.

மேலும் ஒரே மாதிரியான ஒப்புதல் அறிக்கைகள், FIR 59 மற்றும் IPC FIRக்களுக் கிடையேயான முரண்பாடுகள் மற்றும் முக்கிய சாட்சிகள் விசாரிக்கப்படாதது போன்ற விசாரணையின் அம்சங்கள் fabrication அல்லது உருவாக்கப்பட்ட ஆதாரங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை உறுதி செய்கின்றன. ஆகவே, FIR 59 இன் விசாரணையில் உள்ள இந்த குறைபாடுகள், முழு வழக்கின் நம்பகத்தன்மையையே பெரிதும் சந்தேகத்துக்குள்ளாக்குகின்றன.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.....!

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

தமிழில்: **Adv. Jasmine Fathima**

# அவரவர் குலத் தொழிலை அவரவர் செய்ய வேண்டுமாம்!

– சாவித்திரி கண்ணன்

பிராமணர் அல்லாதவர் கதா காலட்சேபம் செய்யக் கூடாதாம். செய்தால் கடும் தண்டனையை அமல்படுத்தி தண்டிக்கும் சூழல்கள் இன்றும் நிலவுகிறது! இதை அகில இந்திய பிராமண சபை நியாயப்படுத்துவதா..? நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் நாம் நவீன இந்தியாவில் தான் வாழ்கிறோமா? என அதிர்ச்சி தருகிறது;



பிராமணர்கள் இந்துக்களின் தலைமை பீடத்துக்கு உரியவர்களாம்! இந்துக்களின் பாதுகாவலர்களாம். அப்படி என்றால், பகவத் கீதையின் பெருமையை பேசும் ஒரு சாதாரண இந்துவை போட்டு இந்த சாத்து சாத்துவது ஏன்? என்று நமக்கு புரியவில்லை.

விவகாரம் இது தான்;

உத்திரபிரதேசத்தில் எட்டவா என்ற மாவட்டத்தில் ஒரு கோவில் திருவிழா.

ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து பணம் போட்டு செய்கிறார்கள். உ.பியில் இந்து மத புராணங்களை ஆகா, ஒகோவென்று பேசி கதாகாலட்சேபம் செய்வதற்கு பேர் போனவர் முகுந்த் மணி யாதவ். இவர் சுமார் 15 வருடங்களாக பட்டிதொட்டி யெங்கும் கதாகாலட்சேபம் ஆற்றி வருகிறார்.

மிக எளிமையாகவும், நகைச்சுவையாகவும் எளியோர்களும் ரசிக்கும்படி பேசுவதால் இவருக்கு ஒரு மவுசு ஏற்பட்டுள்ளது. இது உ.பி.பிராமணர்களுக்கு பிடிக்கவில்லை. உ.பி.அரசியலில் பிராமணர்கள் சக்தி வாய்ந்தவர்கள். ஏனென்றால், மக்கள் தொகையில் அங்கு 10 சதவிகிதம் உள்ளனர். 'காலம் காலமாக தாங்கள் செய்து வந்த கதா காலட்சேபத்தை இப்படி பிராமணரல்லாதவர்களும் செய்து நம் பிழைப்பை கெடுக்கிறார்கள்' என்கிற ஆத்திரம் அவர்களுக்கு நெடு நாட்களாகவே இருந்துள்ளது.

இந்த நிலையில் முகுந்த் மணி யாதவ் கதா காலாட்சேபத்தை செய்யும் போதே, "நீ யார்? உன் ஜாதி என்ன?" என கூட்டத்தில் இருந்தவாறே குரல் எழுப்பி உள்ளனர். "இப்போது இந்தக் கேள்வி இங்கு அவசியம் இல்லாதது" என்று அவர் கூறியுள்ளார். ஏனெனில், அவரது பெயரிலேயே 'யாதவ்' என ஜாதி பெயர் தொற்றிக் கொண்டுள்ளது. ஆனால், பிராமணர்கள் விடவில்லை. "சொல்லுடா, என்ன பயமா..?" என்று கேட்டு கல் எறிந்து கலாட்டா செய்துள்ளனர்.

பிறகு முகுந்த் மணியையும் அவரது உதவியாளர் சந்த் சிங்கையும் அழைத்துச் சென்று மொட்டை அடித்து மீசையை வழித்து விட்டு, மூஞ்சியில் காலால் அழுத்தி விட்டு மூத்திரம் அடித்துள்ளனர். "பிராமணர் அல்லாதவங்க கதா காலட்சேபம் செய்தால் தீட்டு. அந்த தீட்டை தீர்க்கவே இந்த மூத்திர அபிசேகம்" எனக் கூறியுள்ளனர்.

"நீங்க யாதவ் சமூகத்தினர் மாடு மேய்க்கவும், மாட்டு பாலை விற்கவும் தான் வேண்டுமே ஒழிய, கதாகாலாட்சேபம் செய்யக் கூடாது. அவரவர் குலத் தொழிலை அவரவர் தான் செய்ய வேண்டும்." என எச்சரித்துள்ளனர். இத்துடன் விடாமல், "உன்னுடைய காலட்சேபத்தை பெண்கள் கேட்டுவிட்டனர். அந்த பாவ காரியத்திற்கு பிராசித்தமாக ஒரு பெண்மணியின் காலில் விழு" என விழ வைத்துள்ளனர். மேலும் அவரிடம் உள்ள ரூ 25,000த்தையும், தங்க செயினையும் பறித்து அனுப்பி உள்ளனர்.



## உத்தர பிரதேசத்தில் 15 ஆண்டுகளாக கதாகாலட்சேபம் செய்பவர் மீது தாக்குதல்

பிராமணர் அல்லாதவர் பிரசங்கம் செய்யக் கூடாது என மிரட்டல்

ஆர்.ஷபிமுன்னா

புதுடெல்லி

உ.பி.யின் அரையாநகரில் வசிப்பவர் முகுந்த்மணி சிங் யாதவ். இவர் கடந்த 15 ஆண்டுகளாக உ.பி. முழுவதும் கதாகாலட்சேபம் செய்து வருகிறார்.

இச்சூழலில் அவர் மேற்கு உ.பி.யின் எட்டாவா மாவட்டம், தந்தர்பூர் கிராமத்தில் 2 வாரங்கள் கதாகாலட்சேபம் செய்ய அழைக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு ஒரு கும்பல் இவரை தாக்கியதுடன் அவரது தலையை மொட்டை அடித்து விரட்டியது. இவரது உதவியாளர் சந்த் குமார் யாதவும் அப்போது தாக்கப்பட்டார். இது தொடர்பான வீடியோ பதிவு சமூக வலைதளங்களில் பரவி உ.பி.யில் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

சம்பவம் குறித்து முகுந்த்மணி சிங் அளித்த புகாரில், "எனது சமூகம் என்னவென்று கேட்டு, நான் பிராமணர் இல்லை என்று உறுதி செய்த பிறகு அக்கும்பல் என்னை தாக்கியது. என்னிடம் இருந்த ரூ.25,000 ரொக்கம் மற்றும் தங்க செயினை பறித்துக் கொண்டது" என்று கூறியுள்ளார்.

• முகுந்த்மணி சிங் யாதவ்

இது தொடர்பாக எட்டாவா போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவத்துக்கு சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சாதுக்கள் சபையின் தேசியப் பொதுச் செயலாளர் சுவாமி ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறும்போது, "வால்மீகி முதல் கபீர்தாஸர் வரை பிராமணர் அல்லாத பலரும் கதாகாலட்சேபம் செய்துள்ளனர். இதை காரணமாக வைத்து தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

ஆனால், சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்த், "கதாகாலட்சேபம் செய்ய பிராமணர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் எட்டாவா எஸ்எஸ்பி பிரஜேஷ்குமார் ஸ்ரீவத்ஸவாவை அகில இந்திய பிராமணர் சபையின் உ.பி. தலைவர் தலைமையில் ஒரு குழு சந்தித்தது. இவர்களுடன் இருந்த நடுத்தர வயது பெண் ஒருவர், முகுந்த் மணி சிங் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக புகார் அளித்துள்ளார்.

இதனால் முகுந்த் மணி காவல் நிலையம் சென்று புகார் தருகிறார். உடனே அகில இந்திய பிராமண சபையினர் பொங்கி எழுகிறார்கள். காவல்துறை உயர் அதிகாரியை சந்தித்து ஒரு பிராமணப் பெண்ணை வைத்து பாலியல் புகார் தருகிறார்கள் முகுந்த் மணி மீது. முகுந்த் மணி யாதவ் கிராமத்தார் அழைப்பில் தான் வந்தார். அவர்கள் பராமரிப்பில் தான் இருந்தார். இந்த அட்டூழியக் குற்றச்சாட்டை கிராமத்தார் ஏற்கவில்லை.


இத்துடன் நில்லாமல், 'தன்னை பிராமணன் என பொய் கூறி கதா காலட்சேபம் செய்துள்ளார்' என்ற வழக்கும் முகுந்த் மணி யாதவ் மீது காவல்துறையில் பதிவாகி உள்ளது. தன் பெயரிலேயே சாதியொட்டு இருக்கும் ஒருவர் தன்னை வேறுசாதியினராக எப்படிச் சொல்லி இருக்க முடியும்? அதுவும் 'யாதவ்' என்பதாகவே பிரபலமாகி இருக்கிறார்! இது தான் உ.பி. அரசின் நிலைபாடு. இந்த தகவல்கள் உ.பியில் பெரு வாரியாக இருக்கும் யாதவ் சமூகத்தினரை களத்தில் இறக்கிவிட்டது. இன்று பெரும் போராட்டமாக்கிவிட்டது. இதனால் சம்பந்தப்பட்ட சிலரை பார்மாலிட்டிக்காக கைது செய்துள்ளது காவல்துறை.

இந்த சம்பவத்தில் சங்கராச்சாரியார் அவிமுஸ்தேஸ்வரானந்த், "கதா காலாட்சேபம் செய்ய பிராமணர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு" எனப் பேசியுள்ளார்.

"பகவான் கண்ணனே இடையராக பிறந்தவர் என்கின்றன புராணங்கள். எனில் அவன் புகழை பரப்ப எங்களுக்கே உரிமை இல்லையா? நாங்களும் இந்துக்கள் தானே" என்கிறார்கள் யாதவர்களுக்கான சாதி அமைப்புகள். ராமாயணத்தை எழுதிய வால்மீகி முனிவர் வேட்டுவ சமூகமான பழங்குடி சமூகத்தில் இருந்து வந்தவர். அந்த பழங்குடி சமூகத்து மக்கள் வால்மீகியின் ராமாயணத்தை குறித்து இன்று கதா காலட்சேபம் செய்வதை நினைத்து பார்க்க முடியாத நிலையில் இன்று வைக்கப்பட்டுள்ளனர்.


இந்து என்ற ஒரு மதமும், கடவுள் நம்பிக்கையும் ஒரு சமூகத்தின் மேலாண்மையை தொடர்ந்து நிலை நிறுத்துவதற்காகத் தான் என்ற போக்கு இதுகாலம் வரை சாத்தியமாகி இருக்கலாம். ஆனால், இனியும் அது சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தை இந்த பிராமணர்கள் ஏற்க மறுக்கிறார்கள்.

**நன்றி : அறம் வலைத்தளம்**



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# விடுதலைக்குப் பின் இந்திய முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்கள்!

**இதற்குப்** பிறகு இந்திய முஸ்லிம்கள் புதியதோர் அனுபவத்தை எதிர்கொண்டனர், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதிக்குள் நுழைந்தனர். அதுவே, சுதந்திர இந்தியாவில் அவர்கள் பெற்ற வாழ்வியல் அனுபவம்.

ஏனென்றால் சுதந்திர போராட்டத்திற்கு முதன் முதலில் அழைப்பு விடுத்து, வீர தீரத்தோடு அதில் பங்கேற்று, மகத்தான அர்ப்பணிப்பு செய்தவர்கள் முஸ்லிம்களே. இந்த நாட்டின் குடிமக்களாக, இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இதில் பங்கேற்றார்கள்.

அந்நிய ஆட்சியில் இருந்து சுயராஜ்யத்திற்கு இந்தியா மாறியது. இந்த காலகட்டத்தில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன. சமூக அமைப்பு புதிய முறையில் வடிவமைக்கப்பட்டது. கல்விக்கான புதிய அமைப்பு முறை உருவாக்கப்பட்டது.

சுதந்திர நாட்டை சில நேரங்களில் பிரிவினைவாதம் ஆட்சி செய்தது, மற்ற நேரங்களில் உணர்ச்சி தூண்டல்கள் மற்றும் பதட்டச் சூழல்கள் ஆட்சி செய்தன. இந்த அனைத்து காலகட்டங்களிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக, மிகவும் பின் தங்கிய சமூகமாகவே இருந்தனர். இத்தகைய சமூகத்தை மேலும் பலவீனப்படுத்த ஆங்கிலேய அரசு, வாழ்க்கையின் அனைத்து தளங்களிலும் இந்த சமூகத்தை பின்னுக்கு தள்ளியிருந்தது.

கடந்த கால தோல்விகள், சம்மதம் இன்றி அவர்கள் மீது புனையப்பட்ட அவநம்பிக்கைகள், சற்றும் பொருத்தமில்லாத வகையில் அவர்கள் நடத்தப்பட்ட முறை, இவையனைத்தும் இந்திய முஸ்லிம் சமூகத்தின் பொறுப்புகளின் கனத்தை கூட்டியது, அதன் நிலையை பலவீனப்படுத்தியது, அதன் இருப்பையே சிக்கலாக்கியது.

ஆனாலும் இவை அனைத்தையும் எதிர்கொண்டு, இந்த இந்தியத் திருநாட்டிலேயே இருந்து, தங்களது மார்க்க அடையாளங்களை, தங்களது தனித்துவமிக்க நாகரிகத்தை முழுமையாகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இவற்றிலிருந்து சிறிதுகூட அவர்கள் விலகி விடவில்லை.

இது புத்திசாலித்தனத்திற்கும், விசுவாசத்திற்குமான சோதனை, உறுதியான கொள்கைக்கான சோதனை, நேர்மையான தேசபற்றிற்கான சோதனை, வலுவான ஆளுமைக்கான சோதனை, பக்குவமடைந்த ஆன்மாவுக்கான சோதனை. இதற்கு நிகரான சோதனைகளை கடந்த கால இஸ்லாமிய வரலாற்றில் காண்பது மிகவும் அரிது. இதனை எதிர்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை இஸ்லாமிய வரலாற்றில் தேடுவது சாத்தியமற்றது. ஃபிக்ஹ் மற்றும் ஃபத்வா நூல்களில் இது குறித்து மிகவும் அரிதான செய்திகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

மிகப் பெரும்பான்மையாக வாழும் மற்ற மதத்தினருக்கு மத்தியில் 60 மில்லியன் அல்லது

அதை விட கூடுதலாக மட்டுமே முஸ்லிம்கள் வாழக் கூடிய நாட்டில், பாராளுமன்றம் ஆட்சி செய்யும் நாட்டில், அரசியல் சட்டங்கள் ஆட்சி செய்யும் நாட்டில், மதச்சார்பின்மையை தனது கொள்கையாக கொண்ட நாட்டில், இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட ஒரு வாழ்வியலை வாழ்வது சாத்தியமில்லை!

ஆனால் அதே நேரத்தில் நிலைத்தன்மை கொண்ட இஸ்லாமிய அடிப்படை கொள்கை, அறிவுக்கூர்மை, வலுவான ஆளுமை திறன், உண்மையான உறுதி, அசைக்க முடியாத இறைநம்பிக்கை, இழிவான வாழ்வை விட கண்ணியம் நிறைந்த வாழ்விற்கு முன்னுரிமை வழங்குவது, எந்த சமூகத்தாலும் நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இருந்து வந்த ஒழுக்க ரீதியான தலைமையை ஆசைப்படுவது, இந்த நாட்டின் பொது அரங்கில் தூய எண்ணம் கொண்ட அழைப்பாளராக, மனித ஒழுக்க விழுமியங்களுக்கான தலைவராக மிளிர்வது, இந்த தலைமையானது சுயநலம், தனிமனித விருப்பம் தாண்டி பொதுநலம் சார்ந்து செயல் படக் கூடிய தலைமையாக இருப்பது,

இவை இந்த நாட்டை ஒழுக்க வீழ்ச்சியின் அதல பாதாளத்திலிருந்து, பொருள் முதல்வாதம் மற்றும் சந்தர்ப்பவாதத்தை புனிதமாக கருது வதிலிருந்து படைத்தவனை மறந்து வாழ்வதி லிருந்து நிச்சயம் பாதுகாக்கும், என்ற அளவில் இந்த நாட்டில் முஸ்லிம்கள் இஸ்லாத்தை பின்பற்றி வாழ்வது நிச்சயம் சாத்தியமாகும். இந்த சமூகத்தை சாதாரண நிலையிலிருந்து முன்னோடியான தலைமை நிலைக்கு உயர்த்தும் ஒரே பாதை இது தான்.

இறைவனை விடுத்து மற்றவற்றை புகழ்வது எனது நோக்கம் அல்ல, இறைவன் புரிந்த அருளை எடுத்துச் சொல்லும் பொருட்டு, உண்மையான வரலாற்றின் ஒப்புதல் வாக்குமூலத்தை கூறுகிறேன்,

இந்திய முஸ்லிம் சமூகத்தின் நீண்ட வரலாறு முழுவதிலும் அவர்கள், தங்களது வலுவான மார்க்கப்பற்று, அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள ஆழமான அன்பு, இஸ்லாத்தின் பிறப்பிடம் மற்றும் தலைமையகத் தோடு அவர்கள் கொண்டிருக்கும் தொடர்பு, ஆகியவற்றிற்கு பேர் பெற்றவர்கள்.

இவைதான், பல்வேறு காலகட்டங்களில் இந்த நாட்டிற்குள் நுழைந்த பல்வேறு சமூகங்கள் இறுதியில் அதன் கலாச்சாரங்கள் உள்வாங்கப் பட்டு, அதன் தனித்துவத்தை இழந்து, இந்திய கலாச்சாரத்தோடு கரைந்துபோனது போல கரைந்து போகாமல், முஸ்லிம் சமூகத்தை தனது தனித்துவத்தை இழக்காமல் பாதுகாக்கிறது.

இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் இறுதியில் கூட இஸ்லாம் மற்றும் முஸ்லிம் உம்மத்தின் பிரச்சனைகளில் மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். உஸ்மானியா கிலாஃபத் ஆட்சிக்கு ஆதரவான போராட்டத்தில் ஒப்பற்ற பேரார்வத்தோடு உணர்ச்சித் ததும்ப பங்கேற் றார்கள். மேலும் இதற்காக உருவாக்கப்பட்ட கிலாஃபத் இயக்கம், இந்திய துணை கண்டத்தில் அரசியல் மற்றும் தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் மகத்தான பங்களிப்பை ஆற்றியது.

இந்த இயக்கம் மிகப்பெரிய வெகுஜன இயக் கங்களில் ஒன்றாக, காலனித்துவ சக்திகளுக்கு மிகவும் திகைப்பூட்டும் ஒன்றாக, வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு விரிவான ஆய்வுக்கு உட்படுத்தும் தலைப்பா கவும் விளங்கியது. இதேபோல இந்திய முஸ்லிம்கள் ஃபாலஸ்தீன மற்றும் மஸ்ஜிதுல் அக்ஸாவின் பிரச்சனைகளிலும் ஆழ்ந்த அக்கறை செலுத்தியுள்ளனர். கிழக்கு அல்லது மேற்கில் உள்ள முஸ்லிம்களுக்கு துன்பம் விளைவுக்கும் எந்தவொரு

விஷயத்திற்கும் இந்திய முஸ்லிம்கள் எளிதில் புண்படக்கூடியவர்களாக, விரைவில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக மேலும் அதனை எதிர்த்து தீவிரமாக எதிர்வினை ஆற்றக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

இந்திய முஸ்லிம்களது வலுவான இஸ்லாமிய உணர்வு, அவர்களது மார்க்கம், அது சார்ந்த கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றோடு அவர்கள் கொண்டிருக்கும் பற்றுறுதி, இந்தியா முழுவதும் பரவலாகக் காணப்படும் மத்ரஸாக்கள் மற்றும் மக்தப்கள் மூலம் தெளிவாக வெளிப்படுகிறது.

இத்தகைய மத்ரஸாக்கள் மற்றும் மக்தப்கள் பெரும் நகரங்கள் மட்டுமின்றி கிராமங்களில் இல்லாமல் இருப்பதும் மிகவும் அரிது. ஆங்கிலேய அரசு நிறுவப்பட்ட பின்னர், அது கல்வியை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்ட பிறகு, முஸ்லிம்களால் இவை இந்தியா முழுவதும் நிறுவப்பட்டன.இதன் எண்ணிக்கை


vaigarai velicham official

ஆயிரங்களை அடையலாம்.

இவற்றில் பெரும் எண்ணிக்கையில் அரபி மத்ரஸாக்களே காணப்பட்டது. இந்த வகை மத்ரஸாக்களில் இஸ்லாமிய சன்மார்க்க கல்வியை அரபு மொழியில் எழுதப்பட்ட நூல்களை கொண்டு கற்பிப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. குர்ஆன் மற்றும் ஹதீஸ் பாடங்கள் அரபு மொழியில் கற்பிக்கப்பட்டது. ஸஹீஹ் முஸ்லிம், ஜாமிஉத் திர்மிதீ,ஸுனன் அபூதாவூத் ஆகிய ஹதீஸ் நூல்கள் பொதுவாகவும் ஸஹீஹ் புகாரி ஹதீஸ் நூல் குறிப்பாகவும் அங்கே கற்பிக்கப்பட்டது.

இந்த மதரஸாக்கள் அனைத்தும் முஸ்லிம் பொதுமக்களின் மூலமாகவே நடத்தப்பட்டது. அவர்களே பொறுப்பேற்று நிதி உதவி செய்தார்கள். இது தங்களுக்கு கிடைத்த பாக்கியம் என்றும், இதனை இபாதத்தாகவும் கருதினார்கள். இந்த விஷயத்தில் தங்களுக்கிடையே போட்டி போட்டு கொண்டார்கள்.

எல்லா காலங்களிலும் தன்னலமற்ற மார்க்க அறிஞர்கள், தன்னார்வமிக்க இஸ்லாமிய அழைப்பாளர்கள், தூய எண்ணம் கொண்ட ஆசிரியர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருப்பதற்கான இரகசியம் இதுதான். இத்தகைய மகான்கள் தங்களிடம் உள்ளவைகளைக் கொண்டு போதுமான வாழ்க்கையை வாழ்ந்து, இதனைக் கொண்டே சன்மார்க்க கல்வியை பரப்புவதற்கும், மக்களை இந்த மார்க்கத்தை நோக்கி அழைப்பதற்கும், அதனை கற்பிப்பதற்குமான பணிகளை மேற்கொண்டார்கள்.

இந்த மதரஸாக்களிலிருந்து வெளியேறிய மார்க்க அறிஞர்களின் மிக முக்கியமான குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களில் ஒன்று, நாட்டுச் சுதந்திரத்திற்காகவும், காலனித்துவவாதிகளை வெளியேற்றுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் முன்னணியில் இந்த மார்க்க அறிஞர்கள் இருந்தனர். இந்த சக்தி வாய்ந்த மக்கள் இயக்கத்தை வழிநடத்தும் தலைமையகமாக திகழ்ந்தார்கள். உண்மையில் ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்கு எதிரான சிந்தனை இவர்களிடமிருந்தே முதலில் உதித்தது.

இவர்களில் பலர் ஆற்றலுடனும், துணிச்சலுடனும் ஆக்கப்பூர்வமான எதிர்ப்பு இயக்கங்களையும் ஆயுதப் புரட்சிகளையும் வழி நடத்தினர். இவர்களில் சிலர் ஷஹீதாக்கப்பட்டனர். இன்னும் சிலர் தூக்கிலிடப்பட்டனர். இன்னும் அந்தமான் தீவிற்கு நாடுகடத்தப்பட்டனர். இன்னும் சிலர் மால்டா தீவிற்கு நாடு கடத்தப்பட்டனர். இன்னும் சிலர் தங்களது வாழ்நாளின் பாதியை உள்நாட்டில் இருக்கும் சிறைச்சாலையில் கழித்தனர். இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறும் இந்திய இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் வரலாறும் பின்னிப் பிணைந்த ஒன்று. இரண்டும் பிரிக்க முடியாத அளவு ஒன்றோடொன்று இறுக்கமாக பிணைந்துள்ளன.

இவர்களது அடுத்த சிறப்பம்சங்களில் ஒன்று இவர்கள் இந்திய துணை கண்டத்தில் இலக்கிய செயல்பாட்டை வழிநடத்தினார்கள். 1857 புரட்சிக்கு பிறகு இலக்கிய உலகின் கோட்டைகளை தாங்கி நிற்கும் உயரமான வலுவான தூண்களாக இவர்களே விளங்கினார்கள். ஒவ்வொருவரும் தனித்தனி இலக்கிய பள்ளிகளை கொண்டிருந்தனர். இன்றும் இதனைப் பின்பற்றுபவர்கள் இதற்கான ஆதரவாளர்கள் இருக்கின்றனர். இவர்களில் பலர் எழுத்துத் துறை, இலக்கிய விமர்சனம், கவிதை மற்றும் இலக்கிய வரலாறு ஆகியவற்றிற்கு புத்துயிர் ஊட்டிய தலைவர்களாக விளங்கினர். இந்தத் துறைகளின் மூல நூல்களாக இவர்களது நூல்களே விளங்குகின்றன.

பொதுவாக மற்ற நாடுகளில் மார்க்க அறிஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகள், இலக்கியம் மற்றும் மார்க்கத்தில் மத்தியில் ஒரே நேரத்தில் ஏற்படும் இடைவெளிகள் போல இந்தியாவில் மார்க்க கல்வி,நவீன இலக்கியம், நாட்டின் மொழி ஆகியவற்றிற்கு மத்தியில் எந்தவொரு இடைவெளிகளும் ஏற்படவில்லை.

இந்திய முஸ்லிம்கள் இஸ்லாத்தைக் கொண்டு தன்னிறைவடைந்துள்ளனர். இஸ்லாத்தின் தூய மூலாதாரங்களான குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்தும், முதல் தலைமுறை முஸ்லிம்களது நடத்தை, அவர்களது போராட்டம், நேர்மை, வீரம் ஆகியவற்றிலிருந்தும், இஸ்லாத்தை ஆழமாக புரிந்த, அதன் போதனைகளை எளிய முறையில் தெளிவுபடுத்தி, அந்தப் பாதையில் நிலையாக வாழ்ந்த ஸாலிஹீன்களது வரலாற்றிலிருந்தும் தங்களுக்கான வலிமையையும், உறுதியையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

இந்திய முஸ்லிம்கள் தங்களது கொள்கைகளை, எதிர்காலத்தை, வாழ்வியலை இஸ்லாத்

தோடு பிணைத்துள்ளனர். அரபு மற்றும் அரபு அல்லாத முஸ்லிம்களோடு பிணைக்கவில்லை. ஏனென்றால், அவர்கள் ஈமான் கொண்டார்கள் அதனால் நாங்கள் ஈமான் கொண்டோம், அவர்கள் நிராகரித்தார்கள் நாங்கள் நிராகரித்தோம், அவர்கள் நிலைத்திருந்தார்கள் நாங்கள் நிலைத்திருக்கிறோம், அவர்கள் மாறிவிட்டார்கள் நாங்கள் மாறிவிட்டோம், அவர்கள் இஸ்லாமிய சமூகமாக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தி வாழ்வதால் நாமும் வாழ்கிறோம் என்று இருப்பதற்கு இந்திய முஸ்லிம்கள் தலையாட்டி பொம்மைகள் அல்ல.மாறாக இந்த இஸ்லாத்தை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியாக வேண்டிய, அவன் வழங்கிய மிகப்பெரிய அருளாக கருதுகிறார்கள்.


இன்னும் அவர்கள் இஸ்லாமிய சமூகமாக பற்றுறுதியோடு வாழ வேண்டும், இஸ்லாமிய நாகரிகம் மற்றும் தத்துவங்களை கொண்டு பெருமிதம் கொள்ள வேண்டும்,

மற்றைய ஏனைய சமூகங்கள் தங்களது அழிந்து போன கலாச்சாரங்கள், இஸ்லாத்திற்கு மாற்றமான அல்லது எதிரான சித்தாந்தங்களை வழிபட்டுக் கொண்டும் பின்பற்றி கொண்டிருக்கும் நிலையில்

இஸ்லாமிய மார்க்கத்தை முழுமையான மார்க்கமாக வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கு வழிகாட்டும் மார்க்கமாக, எல்லா காலங்களிலும் எல்லா சமூகங்களையும் வழிநடத்தும் மார்க்கமாக உறுதியாக நம்ப வேண்டும் என்று அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்கிறார்கள்.

மேலும் இந்த சடவாத உலகில் தாங்கள் பின்பற்றி வாழும் இந்த இஸ்லாமிய கொள்கைக்கான மதிப்பும், அதற்கு சாதகமான வாய்ப்புகளும் எந்த அளவில் இருந்தாலும் தங்களது கொள்கைகளில் உறுதியோடு நிலைத்து நிற்பதற்கும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறார்கள்.

தொடரும்....







ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்



## இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்...

### "The Wests Resurgent War on Islam"




**ஜான் பெஃபர் கூறுகின்றார் :**

*சிலுவைப் போர் 1.0, 2.0 இரண்டுமே பெரிதாக வெற்றிபெற்றிட வில்லை. இதனால் மேலை நாடுகள், தங்களையும், தங்கள் கலாச் சாரத்தையும் காப்பாற்றிட ஒரு பெரும் போரை திட்டமிட்டார்கள்.*

*தீவிரவாதத்தின் மீதான உலகளாவிய போர் எனப் பெயர் வைத்தார்கள்.* Global war on terror)

*(இங்கே தீவிரவாதம் என்பது இஸ்லாம் எனப் பொருள்படும்)*

*அதனால் இஸ்லாத்தைத் தூக்கிப் பிடிப்பவர் களையும், அவர்களுக்குப் பக்கபலமாக வருபவர் களையும், தீமைகளின் முன்னோடி என்றார்கள்.*

Finding Precedent - *வரலாற்றைப் புனைவது*

*அமெரிக்கா, இந்த சிலுவைப் போர்களில் மிகவும் காலதாமதமாகவே கலந்துகொண்டது.*

*9/11 என்ற இரட்டைக் கோபுரங்கள் தாக்கப் பட்டபின், அமெரிக்கா உலகெங்கும் உள்ள நாடுகளை ஒன்றிணைத்தது. இந்த ஒன்றிணைந்த நாடுகள், முஸ்லிம்களை உள்ளும் புறமும் தாக்கிட வேண்டும் எனப் பணித்தது. அதாவது, அமெரிக்காவின் உள்ளே உள்ள முஸ்லிம் களையும் அமெரிக்காவுக்கு வெளியே உலகெங்கும் வாழ்ந்திடும் முஸ்லிம்களையும் தாக்கிட வேண்டும்.*

*முஸ்லிம்களுக்கெதிரான இந்தப் போர் பிரகடனத்திற்கு எதிராக சில அமெரிக்கர்கள் புறப்பட்டார்கள். இவர்கள், முஸ்லிம்கள் நல்லவர்கள், இவர்களுக்கெதிரான போர்ப் பிரகடனங்கள் நியாயமானவை அல்ல, என அறிவுறுத்தினார்கள்.*

*குறிப்பாக தாமஸ் ஜெஃபர் பின் என்பவர் என்னிடம் ஓர் திருக்குர்ஆன் பிரதி இருக்கின்றது. அதை நான் படித்துவிட்டேன். அது அமைதி யையும், நீதியையுமே சார்ந்து இருக்கின்றது எனப் பிரகடனப்படுத்தினார். அமெரிக்கா இன்றளவும் முஸ்லிம்களுக்கு சாதகமாக தொடர்ந்து இருந்து வருகின்றது என்றார்.*

*முந்தைய காலங்களில் கிளிண்டன் நிருவாகம், முதலில், போஸ்னியா முஸ்லிம்களையும், பின்னர் கோசோவா முஸ்லிம்களையும் காப்பாற்றிட முனைந்தது என்பதை எடுத்துக்காட்டினார்கள்.*

*அதேநேரத்தில் அமெரிக்க முஸ்லிம்கள், மதத் சுதந்திரத்தோடுதான் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். அவர்களின் சராசரி வீட்டு வருமானம், ஏனைய அமெரிக்கர்களின் வீட்டு*




வருமானத்தைப் போலவே இருக்கின்றது. சில நேரங்களில் சற்று அதிகமாகவே இருக்கின்றது.

அவர்கள் கல்லூரிகளில் பெறும், Degree பட்டங்கள், ஏனைய அமெரிக்க மக்களைவிட இரண்டு மடங்காகும்.

மக்களின் மனங்களைக் கவர்ந்திட உழைத்த முஸ்லிம்கள், அமெரிக்கா எப்போதுமே அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களுக்கும், அதேபோல் உலகெங்கும் வாழும் முஸ்லிம்களுக்கும் சிறந்த நண்பனர்காளகவே இருந்து வருந்திருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டினார்கள். இந்தத் திசையில் அவர்கள் கொட்டிய உழைப்பிற்கு அளவே இல்லை எனலாம். (அடிக்குறிப்பு 1-ஐ பாக்கவும்)

ஆனால், இதற்கெதிராக ஒருபெரும் எதிர் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதை கிருஸ்தவ மதப் பிரச்சாரகர்கள், அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள் ஆகியோர் மேற்கொண்டார்கள்.

'அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்ததே முஸ்லிம்களுக்கெதிரான ஓர் வெறுப்புணர்வால் தான்' என்றார்கள். இந்த எதிர்ப்பாளர்கள். அமெரிக்காவின் இராணுவ கட்டமைப்பே, முஸ்லிம்களுக்கெதிரகத்தான் கட்டப்பட்டது என்றார்கள். அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கு எதிரானப் போர் ஏதோ, திடுதிப்பென தொடங்கப்பட்டதல்ல. மாறாக, காலாகாலமாக வளர்ந்து வந்த வரலாற்றுப் பகையின் ஒரு பகுதியாக தொடர்ந்து கொண்டிருப்பதுதான் எனப் பிரச்சாரம் செய்தார்கள்.

பெந்தகோஸ்த் என்ற கிருஸ்தவ மதப் பிரிவின் பிரச்சாரகர் 'ராட் பார்ஸ்லி' Rod Parsely என்பவரின் பிரச்சாரத்தை ஓர் உதாரணமாக எடுத்துச் சொல்லலாம். அவர் கூறினார் அமெரிக்கா என்றொரு நாடு நிறுவப்பட்டதன் நோக்கம். இந்தப் போலி மார்க்கமான இஸ்லாத்தை ஒழிப்பதுதான். இஃதோர் வெற்றுப் பேச்சல்ல.

அவர் இதை ஒரு வரலாற்று நிகழ்வோடு பொருத்திக் காட்டி நிரூபிக்கின்றார். அது, கொலம்பஸ், தான் கால்பதித்த இடங்களிலெல்லாமிருந்த முஸ்லிம்களை வெளியேற்றினார். இப்படித்தான் ஸ்பெனியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைப் பார்த்திட வேண்டும் என்றொரு வரலாற்றைச் சொன்னார். கொலம்பஸ், தனது ஸ்பெய்ஸ் "Spice" வியாபாரத்தில் கிடைத்த இலாபத்தை இந்தியாவிலுள்ள முஸ்லிம் ஆட்சியை வீழ்த்திட பயன்படுத்தினார். முடிவில் அந்தச் சிலுவைப் போரில் வென்றார். (முஸ்லிம்களின் ஆட்சி இந்தியாவில் கவிழ்க்கப் பட்டது.) அதேபோல் ஜெரூசலத்திலும் முஸ்லிம்களின் கைகளிலிருந்து மீட்கப்பட்டது. இதையும் இணைத்துக் கொண்டார். (பார்க்க அடிக்குறிப்பு-2)

இப்படி இஸ்லாத்திற்கெதிரான போர் ஒரு பெரும் வரலாற்று பின்னணியைக் கொண்டது என்பதை பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தார்கள். இதனால் முஸ்லிம்களுக்கு அனுசரணையாக இருந்த அமெரிக்கா முழுக்க முழுக்க முஸ்லிம்களுக்கெதிராக ஆகிக்கொண்டே இருந்தது.

எதிர்பாளர்களின் முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருந்தது.

- இதுபோல் அமெரிக்காவில் நடந்த பலப்


vaigarai velicham official

*பிரச்சாரங்களை ஜான் பெஃப்பர் கூறுகின்றார், அவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.*

*இன்ஷாஅல்லாஹ்*

அடிக்குறிப்பு-1

அமெரிக்க முஸ்லிம்கள் ஒரு பெரும் வேலையைச் செய்திருக்கின்றார்கள். அது 9/11 என்ற இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட பின்னணியில் செய்யப்பட்ட பெரும் வேலை. அந்த வேலை அமெரிக்கா, அமெரிக்க முஸ்லிம்களுக்கெதிராகவும், உலக முஸ்லிம்களுக்கெதிராகவும் திரும் பிடாமலிருக்க தங்களால் இயன்றதை யெல்லாம் செய்வது என அமைந்தது.

அடிக்குறிப்பு-2


உலகெங்கிலும் நடந்துகொண்டிருந்த இஸ்லாமிய ஆட்சியை அல்லது முஸ்லிம் களின் ஆட்சியை வீழ்த்திட வேண்டும் என்பது கிருஸ்தவ உலகின் மிக முக்கிய மான நோக்கங்களில் ஒன்று என்பது வரலாறு. இதற்காக வரலாற்றைத் தேவையான அளவுக்குத் திரித்திருக்கின்றார்கள். குறிப் பாக இந்தியாவில் வீற்றிருந்த முஸ்லிம் களின் ஆட்சியைக் கவிழ்ப்பது அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியத்தின் குரூரமான திட்டம்.

1453இல் கான்ஸ்டாண்டி நோபிள் வெற்றிகொள்ளப்பட்டபோது, முஸ்லிம் உலகிற்கு கிடைத்த மகத்தான வெற்றி. அதுதான் இன்றளவும் இஸ்தான்புல் என அழைக்கப்படுகின்றது.

உலகை ஆளுவதற்கு ஒரு மைய்யப் புள்ளி - மைய்ய இடம் - உண்டு என்றால் அது கான்ஸ்டாண்டி நோபிள்தான் எனக் கூறினார் நெப்போலியன். அந்த இடத்தை முஸ்லிம்கள் வெற்றிக்கொண்டதை, கிருஸ்தவ உலகத்தால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. இதற்கு பழிதீர்க்கும் முகமாகத்தான் இந்தியாவில் நடந்து கொண்டிருந்த முஸ்லிம்களின் ஆட்சியை வீழ்த்திடும் முயற்சிகள், சதிகள், இவை மேற்கொள்ளப்பட்டன.

முதலில் டச்சு கிறிஸ்தவப்படை வந்தது. அதனால் சாதிக்க இயலவில்லை. பின்னர் வெள்ளைக்கார படைகள் வியாபாரம் என்ற முகத்தோடு வந்தன. விரிவான விளக்கங்களுக்கு பார்க்க "In the Shade of the swords" by - M.J. Akbar

**- MGM**


*அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.*

*"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.*

*16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.*

*ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.*

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**



# அன்னை ஸஃபிய்யா (ரழி)

**அன்னை** ஸஃபிய்யா (ரழி) அவர்களுக்கு வரலாற்றில் தனித்ததோர் இடமுண்டு. இறைத்தூதர் ஹாரூன் (அலை) அவர்களின் சீர்மிகு பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதால்.

ஆம். அன்னை ஸஃபிய்யா (ரழி) வின் தந்தை ஹுயய் என்பார் இஸ்ரவேலர்களின் புகழ்மிக்க பனூ நளீர் எனும் கிளையைச் சார்ந்தவர். ஒரு இறைத் தூதரின் வழித்தோன்றல் இவர் என்பதால் பெருமையும் கண்ணியமும் இவரைச் சூழ்ந்து நின்றன. பனூ நளீர் கோத்திரத்தினர் அனைவருமே இவரின் பாரம்பரியப் பெருமையை உணர்ந்து தம் தலைவராகவே இவரை ஏற்றுக் கொண்டனர். பனூ நளீர்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஈடு இணையற்றதலைவராகத் திகழ்ந்தார் ஹுயய் பின் அஹ்தப்.

இவரின் மனைவி பெயர் பர்ரா (அல்லது ளர்ரா) இஸ்ரவேலர்களின் இன்னொரு புகழ் மேவிய குலம் பனூ குறைளா. அதவ் மாண்புயர் தலைவராக அக்காலத்தில் ஓங்கி நின்றவர் சாமவேல். இவரின் அருமைப் புதல்விதான் அந்த பர்ரா.

பனூ நளீர் கிளையின் ஏற்றம் மிகு தலைவர் ஹுயைய் பின் அஹ்தப் பனூகுரைழாவைச் சார்ந்த பர்ரா பின்த் சாமவேல் ஆகியோரில் அழகுத் திருமகள் தான் அன்னை ஸஃபிய்யா (ரழி) அவர்கள். ஹிஜ்ரத்துக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஹைப்பர் பகுதியில் பிறந்தார்கள். ஹைபர். இது மதீனாவின் வடக்கே சிரியா நோக்கிச் செல்லும் வழியில் மதீனாவிலிருந்து சுமார் தொன்னூற்றி ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு பசுமையான நகர். அடர்ந்த பேரீத்தம் தோட்டங்களும் விளை நிலங்களும் கொண்ட அந்நகரில் யூதர்கள் பெரும் கோட்டை கொத்தளங்களைக் கட்டி பெருவாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அல்லாஹ்வின் அறுதித் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற தலைமையின் கீழ் ஒளி சிந்தும் மதீனாவில் அழகுற அமைந்திருந்த இஸ்லாமிய அரசுக்கு எதிராக தொல்லை தந்து கொண்டே இருந்தனர், அந்த யூதர்கள். மதீனாவின் நகர்ப் புறத்தில் மற்றும் புற நகரில் வசிக்க கின்ற யூதர்களை தங்களின் கீழறுப்பு வேலைகளுக்கு பயன்படுத்திக் கொண்டனர். இஸ்லாமிய அரசு மீது முழுவீச்சில் தாக்குதல் நடத்தவும் முஸ்லிம்கள் மீது அழிவு வேலைகளை அவிழ்த்து விடவும் மக்காவின் இணை வைப்பாளர்களுக்கு எல்லா வகையான ஒத்துழைப்புக் களையும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் செய்து வந்தனர் ஹைபர் வாழ் யூதர்கள்.

ஒரு புறம் அண்ணல் நபியுடன் ஒப்பந்தம், மறுபுறம் எதிரிகளுடன் திரைமறைவுக் குலாவல் என தங்க ளின் குலப் புத்தியைக் காட்ட ஆரம்பித்த மதீனா வாழ் யூதர்களை அண்ணல் நபி (ஸல்) ஏற்கனவே ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு வாக்கில் நாடு கடத்தியிருந்தார்கள். இப்படி இஸ்லாமிய அரசு கழித்துக் கட்டிய இந்தக் கழிவுகள் தங்களின் இனத்தாரோடு ஹைபரில் தஞ்சம் புகுந்துகொண்டன. அங்கே போய் சும்மா இருந்துவிடவில்லை இந்தப் பதர்கள். தங்களால் இயன்ற மட்டும் குழப்பங்கள் செய்வதை தொய்வின்றித் தொடர்ந்தனர்.

இதற்கு ஒரு இறுதி முடிவு கட்டிட தயாரானார்கள் தாஹா நபி (ஸல்) அவர்கள். ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான நபித் தோழர்களுடன் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஹைபர் நோக்கிப் புறப்பட்டார்கள். ஹைபருக்கு அருகே ஓரிடத்தில் பஜ்ர் தொழுது விட்டு அண்ணல் நபி (ஸல்) 'அல்லாஹ் மிகப் பெரியவன் ஹைபர் அழிந்துவிட்டது. நாம் ஒரு

சமுதாயத்தை எதிர்த்துப் போரிட களம் இறங்கி விட்டால் எச்சரிக்கப் பட்ட அச் சமுதாயத்துக்கு அது மிகக்கெட்ட காலைப்பொழுதாகவே இருக்க முடியும்" என்று திருவாய் மலர்ந்து அருளினார்கள்.

ஏகத்துவ மாண்பினை தன் நெஞ் சில் நிறைத்த ஒரு சமுதாயம் களத்தில் கால் பதித்துவிட்டால் இணை வைப்பு எனும் இழிவைச் சுமக்கும் கும்பல் ஓடி ஒளிந்திடவே செய்யும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது ஹைபர். ஆமாம்; ஹைபர் வாசிகள் முஸ்லிம் படையைக் கண்டதும் வீதிகளில் ஓடினர் அந்த நகரையே முஸ்லிம்கள் பத்து (அல்லது அதைவிட சற்று அதிசமான) நாட்கள் முற்றுகையிட்டனர். இறுதியில் முஸ்லிம்கள் வென்றனர். அங்கே என்னைப்பார் என் வனப்பைப் பார் என்று நிமிர்ந்து நின்ற கோட்டைகள். வளம் தரும் விளை நிலங்கள், பலன் தரும் பேரீத்தம் தோட் டங்கள். எல்லாம் முஸ்லிம்களின் வசமாயின. இப்போரில் பதினைந்து முஸ்லிம்கள் உயிர்த் தியாகிகளின் வீர வரிசையில் இடம் பெற்றனர். தொன்னூற்று மூன்று யூதர்கள் கொல்லப் பட்டனர். ஏராளமானோர்சிறை பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர்.

அவ்வாறு அடிமைகளாகப் பிடிக்கப்பட்டவர் களில் ஸபிய்யாவும் ஒருவர். அவர்களுக்குத் திருமணம் நடந்து புதுமணப்பெண்ணாக இருந்த நேரம் அது. அவர்களின்கண வர்கினானாபின் அபில் ஹகீக் என்பவர் பனூகுரைழா வம்சத்தின் தலைவர்களில் ஒருவர். இந்தப் போரில் ஸஃபிய்யா அவர்கள் கணவர், தந்தை, சகோதரர்கள் என உற்றார் அனைவரையும் பறி கொடுத்துவிட்டு தனிமரமாய் ஆதரவற்று நின் றார்கள். ஒரு சில நாட்களுக்கு முன்பு வரை உயர் குடும்பத்து நங்கையாக ஏற்றமிகு எழிலார்ந்த வாழ்க்கை வாழ்ந்த ஸபிய்யா இன்று அதே ஊரில் கைதியாக அடிமையாக நின்று கொண்டிருந்தார்.

ஹழ்ரத் பிலால் (ரழி) அவர்கள் ஸஃபிய் யாவை கைது செய்து அழைத்து வந்தார்கள். வரும் வழி யூதர்களின் பிணங்கள் ஆங்காங்கே கிடந்தன. அவர்களே விரும்பி பிடிவாதமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இழிவான மரணம். அது. தம் உற்றாரின் பிணங்கள் சொல்லவொண் ணாக் கோலத்தில் கிடப்பதைக் கண்ட ஸஃபிய்யா மனம் வருந்தினார்கள். அழுது ஆர்ப்பாட்டம் புரிந்து அல்லோகல்லோலப்படுத்திடவில்லை. அமைதியாக ஒரு ஓரத்தில் சோகமாக அமர்ந்து விட்டார்கள். இதனை அறிந்த அண்ணல் நபி (ஸல்), ஹழ்ரத் பிலால் (ரழி)அவர்களிடம் "என்ன பிலாலே நீங்கள்?! இவர்களின் தந்தையின் பிணமும் சகோதரர்களின் பிணமும் கிடக்கும் வழியாகவா இவர்களை அழைத்து வந்தீர்கள்? இரக்கத் தன்மையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டாமா?" என்று கடிந்து கூறினார்கள்.

போர் செல்வங்கள் பங்கு வைக்கப்பட்ட போது ஸஃபிய்யா அவர்கள் திஹ்யா (ரழி) அவர்களின் பங்கில் வந்து சேர்ந்தார்கள். நபித்தோழர்களில் சிலர், ஸபிய்யா அவர்கள் பனூ நளீர், பனூ குரைழா ஆகிய இரு பெரும் கோத்திரத்தினரின் மரியாதைக்குரியவர். இவரின் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மனைவியாக வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என்று விரும்பி னார்கள். அந்த விருப்பத்தை நபி (ஸல்) அவர் களிடமும் கூறினார்கள்.

நபித் தோழர்களின் விருப்பத்தை திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டார்கள் ஏந்தல் நபியவர்கள்.

திஹ்யா (ரழி) அவர்களுக்கு வேறொரு அடிமையை வழங்கிவிட்டு ஸஃபிய்யாவை தனக்கென தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள். செல்வமும் செல்வாக்கும் பெற்ற குடும்பத்தில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்த ஸஃபிய்யாவை அடிமையாக வைத்திருக்க அண்ணல் நபி (ஸல்) விரும்பவில்லை. தன் குடும் பத்தினரை போரில் பறிகொடுத்து பரிதவித்து நிற்கும் ஸஃபிய்யாவுக்கு கண்ணியமும் பெருமையும் மிக்கதோர் வாழ்வினை வழங்கிட வள்ளல் நபி (ஸல்) அவர்கள் முன் வந்தார்கள்.

ஸஃபிய்யாவை விடுதலை செய்து அந்த விடுதலையை (மஹ்ர்) மணக் கொடையாக வழங்கி அவர்களைத் திருமணம் செய்து கொண் டார்கள் திருமேனி (ஸல்) அவர்கள். வெற்றியின் நெடிதுயர்ந்த படிக்கட்டுகளில் அழுத்தமாகக் கால் பதித்து நின்றபோதும் ஆணவத்தின் நிழ லைக்கூட தன்னருகே அண்டி வர அனுமதிக் காமல் பகைவர்க்கும் அருளும் பாங்கினை பாரறிய பறை சாற்றினார்கள் படைத்தவனின் தூதரவர்கள். இருளும் இழிவும் சூழ்ந்ததோர். எதிர்காலம் தான் இனி நமக்கு என்றெண்ணி வாடி வதங்கி வழி தெரியாமல் நின்ற ஸஃபிய் யாவை உலக் முஸ்லிம்களின் அன்னை என்ற ஒப் புயர்வற்ற உயர் பீடத்துக்கு அழைத்து கனிவாய்க்

கேட்டார்கள் காருண்ய நபியவர்கள். அதற்கு (உங்களின் மனைவியும் என் சக தோழியுமான) “ஹப்ஸா (ரழி) என்னை ஒரு யூதனின் மகள் என்று கூறியதாக வந்ததக வலைக் கேட்டேன்; அதனால் அழுகிறேன் என்றார்கள்” உடனே நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக நீ (ஹாரூன் அலை என்ற) ஒரு இறைத் தூதரின் வழித் தோன்றலாவாய். (மூஸா அலை என்ற) ஒரு இறைத்தூ தர் (ஒருவகையில்) உனக்கு சிறிய தந் தையாவார். ஒருதூதருடைய (என்னு டைய) மனைவியுமாவாய். இப்படி இருக்க உன்னைவிட எந்த வகையில் தன்னை உயர்ந்தவராகக் கருதிக் கொண்டு ஹப்ஸா (ரழி) அப்படிப் பேசினார்? என்று அன்பு மொழியால் அன்னையை வருடிக்கொடுத்த வாஞ்சை நபி(ஸல்), பின்னர் “ஹப்ஸாவே... நீ அல்லாஹ்வை அஞ்சிக் கொள்'' என்று அழுத்தமாகக் கூறினார்கள்.

ஹிஜ்ரி முப்பத்து ஐந்தாம் ஆண்டு மூன்றாம் கலீஃபாஹழ்ரத் உஸ்மான் பின் அஃப்பான்(ரழி) அவர்களின் ஆட்சிக்கு எதிராக கலகக்காரர்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர். இதன் ஒரு பகுதியாக கலீஃபா வையே முற்றுகையிட்டு வீட்டுக் காவலில் வைத்தார்கள். உண்பதற்கு ஒழுங்கான உணவோ, குடிப்பதற்கு சுத்தமான நீரோ தந்திடாமல் அந்த மாமனிதரை வதைத் தார்கள் கிளர்ச்சியாளர்கள். கலீஃபாவுக்கென உள்ள எந்த மரியாதையும் தரவில்லை. அவர்களின் முதுமைக்குரிய கண்ணியத்தையும் பேணிட வில்லை அந்தப் பாவிகள்.

அண்ணல் நபியின் மருமகனாம் ஹழ்ரத் உஸ்மான் (ரழி) அவர்களுக்கு நேர்ந்த நிலையை அறிந்து ஸஃபிய்யா (ரழி) அவர்கள் கண் கலங்கினார்கள். உடன் தன் அடிமை ஒரு வரை துணைக்கு அழைத்துக்கொண்டு அவர்களை சந்திக்கக் கிளம்பினார்கள். இவர்கள் பர்தா அணிந்திருந்ததால் யாரும் இவர்களை அடை யாளம் காணவில்லை. அன்னையவர்கள் ஏறி அமர்ந்து சென்ற கோவேறு கழுதையையும் உடன் சென்ற அடிமையையும் பார்த்த அஷ்தர் நஹ்டி என்பவன் சென்று கொண்டிருப்பது அன்னை ஸஃபிய்யா (ரழி) அவர்கள் தான் என்றும் கலீஃபா உஸ்மான் (ரழி) அவர்களுக்கு உதவிடத் தான் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிந்து கொண்டான். வேகமாக முன்னால் வந்து நின்று அவர்களின் கோவேறு கழுதையை அடிக்க ஆரம்பித்தான். கடுமையாகத் தாக்கினான். அஷ்தர் நஹ்ஈயை மீறி முன்னேறிச் செல்ல முடியாது என உணர்ந்த அன்னைதம் இல்லம் திரும்பினார்கள். தம் திருக்கரத்தால் சுவை யான உணவைத் தயாரித்து ஹழ்ரத் ஹுசைன் பின் அலீ (ரழி) மூலமாக கலீஃபா உஸ்மான் (ரழி) அவர்களுக்கு கொடுத்தனுப்பினார்கள்.

அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக அடக்கமாக இருந்து காரியம் ஆற்றுவதில் அன்னையவர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு அஃதோர் சான்று.

பொறுமை, ஈகை, இரக்கம், அமைதி ஆகிய குணங்களின் குவியலாய்த் திகழ்ந்த இந்தப் பெருமாட்டி தனது அறுபதாவது வயதில் ஹிஜ்ரி

ஐம்பதாம் ஆண்டில் ரமலான் மாதத்தில் ஏக இறைவனாம் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று இறுதிப் பயணம் மேற்கொண்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர்கள் உடன் நபித்தோழர் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் ஸஜ்தாவில் விழுந்தார்கள். இந்த சமயத்தில் ஸஜ்தா செய்கிறீர்கள் என ஒருவர் கேட்டபோது ஒரு துன்பம் நேர்ந்தால் ஸஜ்தா செய்யும் என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். அண்ண லாரின் துணைவியரில் ஒருவர் இறப்பதை மிகப்பெரிய துயரம் வேறென்ன இருக்க முடியும்” என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் பதில் கூறினார்கள்

தான் வாழ்ந்து வந்த சொந்த வீட்டை தன் வாழ்நாளிலேயே அல்லாஹ்வின் பாதையில் வழங்கி விட்டார்கள் நம் அன்னை ஸஃபிய்யா (ரழி) ஒரு லட்சம் வெள்ளிக் காசுகளை வாரிசுதாரர்களுக்கு விட்டுத் சென்றார்கள். அதில் மூன்றில் ஒரு பங்கை தன் சகோதரியின் மகனுக்கு (அவர் ஒரு யூதர்) தந்து விடும்படி வஸிய்யத் செய்திருந்தார்கள்.

இதை நிறைவேற்ற சிலர் காலதாமதம் செய்தனர். இதனை அறிந்த ஆயிஷா (ரழி), “மக்களே. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஸஃபிய்யா (ரழி) அவர்களின் வஸீயத்தை நிறை வேற்றுங்கள்'' என்று வலியுறுத்தியதைத் தொடர்ந்து அது நிறைவேற்றப்பட்டது. இஸ்லாமிய அரசில் அந்த யூதருக்கு நீதி கிடைத்தது.

அன்னையின் உடல் ‘ஜன்னத்து பகீ’ யில் நல்லடக்கம் செய்யப்பட்டது. வரலாற்றின் வரிகளில் வாழ்ந்த இந்த உத்தமிகளின் வழி நின்று வாழ்ந்திட பெண்குலம் முன் வர வேண்டும். வரலாறு படைத்திட வேண்டும்.

# பெற்றோரைப் பேணுங்கள்



## சொர்க்கத்தை வெல்லுங்கள்...

பெற்றோர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அதனால் முதியோர் இல்லங்கள் பெருகுகின்றன.

இதை மார்க்க அறிஞர்கள் ஓர் சமுதாய அமைப்பு சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக் கின்றது என்பதன் அடையாளம் என்கின்றார்கள்.

மேலை நாடுகளில் ஒரு காலக்கட்டத்தில் மதத்திற்கும் விஞ்ஞானிகளுக்குமிடையே போர்.

மதத்தை கெட்டியாகப் பிடித்துக்கொண்டி ருந்தவர்கள்.

பூமி தட்டை - என்றார்

பூமி சுற்றவில்லை என்றார்கள்.

இதுபோல் எத்தனையோ முரண்கள் விஞ்ஞானத்திற்கும் - மதத்திற்கும்.

இங்கே மதம் எனப்படுவது கிருஸ்தவம் அன்றைய காலக்கட்டங்களில், மதவாதிகளின் கைகளில்தாம் ஆட்சி!.

இதனால் தங்களை எதிர்த்தவர்களை தாங்கள் மத நம்பிக்கை எனப் பிரகடனப்படுத்தியவற்றை - விஞ்ஞானம் ஆராய்ச்சி என சொல்லி எதிர்த்தவர்களை தூக்கிலேப் போட்டார்கள்.

தாங்கள் சீரிய ஆராய்ச்சிகளின்வழி கண்டு பிடித்தவற்றை எதிர்த்த மதவாதிகளை எதிர்த்தனர். நாத்தீகம் வளர்ந்தது.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனத் தறுதலைகளாய் வாழ்ந்திட தொடங்கியது ஒரு சமுதாயம்.

அது உலகை - உலக சுகங்களில் சொக்கிட்டு.

முதுமையை அடைந்த தங்கள் பெற்றோர் களை மாபெரும் பளு என்றார்கள். ஆகவே முதியோர் காப்பகங்கள் வளர்ந்தன.

இந்த நிலை இஸ்லாமியச் சமுதாய அமைப்பிற்கு அறவே பொருந்தாது.

ஏனெனில் அனைத்தையும் படைத்த அல்லாஹ். பெற்றோர் பேணும் வழிமுறைகளை தெளிவாகச் சுட்டிக்காட்டிற்று. போற்றிப் பேசியது, மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கைக்கு வழி காட்டியது.

**அந்த வழிகாட்டுதல்கள்**

**அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோ ருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின் றான்; அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!**

**- அல்குர்ஆன் - 17:23.**

**இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக் காகவும் நீர் தாழ்த்துவீராக; மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு)**

**அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்று கூறிப் பிரார்த்திப்பீராக!**

**- அல்குர்ஆன் - 17:24.**

**(பெற்றோரை நடத்துவது பற்றி) உங்களுடைய உள்ளங்களிலிருப்பதை உங்களுடைய இறைவனே நன்கு அறிவான்; நீங்கள் ஸாலிஹானவர்களாக (இறைவன் ஏவலுக்கு இசைந்து நடப்பவர்களாக) இருந்தால்; (உள்ளந்திருந்தி உங்களில் எவர் மன்னிப்பு கோருகிறாரோ அத்தகைய) மன்னிப்புக் கோருபவர்களுக்கு (அல்லாஹ்) மிக மன்னிப்பவனாக இருக்கின்றான்.**

**- அல்குர்ஆன் - 17:25.**

*அல்லாஹ் தான் படைத்தவற்றிலெல்லாம் மிகவும் அழகான படைப்பாக மனிதனைப் படைத்தான்.*

*இந்த அழகான படைப்பாக இந்த உலகில் நீங்கள் சஞ்சரிக்கவும், சாதிக்கவும் காரணமானவர்கள் பெற்றோர்கள். தாயும்-தந்தையும்தான்.*

*உங்களைப் பெற்றெடுப்பதிலுள்ள மரண வேதனையை சந்தித்தவள் தாய்.*

*நீங்கள் உங்களுக்கென எதையும் செய்து கொள்ள முடியாத மழலைப் பருவத்தில் உங்களுக்கு அனைத்தையும் செய்தவர்கள் பெற்றோர்கள். தாயும்-தந்தையும்.*

*அரும்புகளாய் நீங்கள் உங்களுக்கு தீங்கிழைத்த போதெல்லாம் அதனை தடுத்துக் காத்து உங்களைத் தயாரித்து உலவ விட்டவள் தாய்.*

*ஆகவே நீங்கள் நன்றிப் பெருக்கோடு பெற்றோர்களைக் காத்திட வேண்டும். அவர்களுக்கு உங்கள் மீது உரிமை இருக்கின்றது என்பதை நீங்கள் உணர வேண்டும்.*

*ஏனெனில் உங்களுக்கு அவர்கள் மீது பல உரிமைகள் இருந்தன. அதனை நீங்கள் அறிந்திடவில்லை. உணர்ந்திடவில்லை.*

*அதுபோது அவர்கள், உங்கள் உரிமைகளைத் தந்தார்கள். உங்களை மகிழ்வாக வைத்துக்கொள்ள தங்களைத் தந்தார்கள். மழலைப் பருவத்தில் உங்களுக்காக இழந்ததையெல்லாம் உங்கள் ஒரு சிரிப்பில் மறந்தார்கள்.*


*உலகில் இருப்பவற்றையெல்லாம் விட உங்களையே பெருமையாகவும் பெருமிதமாகவும் எடுத்துக் கொண்டார்கள். அன்பு செலுத்தினார்கள். அரவணைத்தார்கள்.*

*அவர்கள் வயதான காலத்தில் உங்களோடு வாழ்ந்திருந்தால் அதே அன்போடும் அரவணைப்போடும், அவர்களைக் கவனிக்க வேண்டும். அதில் உங்கள் மறுமை வாழ்க்கை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையின் வெற்றி இருக்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்திட வேண்டும். அந்த நிரந்தர வெற்றியை அடைந்திட அழகிய சொத்தாக அவர்களின் வயோதிக வாழ்க்கை உங்களுக்கும் இருக்கின்றது. உணருங்கள், உதவுங்கள்.*

*இதில் அல்லாஹ்வை அஞ்சுங்கள். பெற்றோர் பேணுங்கள், மறுமையின் வெற்றியைத் தட்டிச் செல்லுங்கள்.*

*இன்ஷா அல்லாஹ் தொடரும்.*

- MGM





# புற்றுநோய்

**புற்றுநோய்** என்பது எல்லா வயதிலும், எல்லாப் பருவத்திலும் வரலாம். முதுமையில் புற்றுநோய் ஏற்பட்டால் அவர்களுக்கெனப் பிரத்யேகக் கவனிப்பும், அக்கறையும் அவசியம். அதற்கான சிறு வழிகாட்டி இது.

**முதியோர் பராமரிப்பாளரின் பணி**

புகைப்பிடிப்பது, புகையிலை பயன்படுத்துவது, குடிப்பழக்கம் போன்றவை மூத்த குடிமக்களுக்கு இருந்தால் அவற்றை நிறுத்தச் சொல்ல வேண்டும்.

இரவில் படுக்கப் போகும்போது புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டிருந்தால், அவ்வாறு செய்ய வேண்டாமெனக் கூற வேண்டும். அதனால் மேலும் வரும் புற்றுநோய் ஆபத்தை விளக்கி அறிவுரை கூற வேண்டும்.

வைட்டமின் சி அதிகமுள்ள சிட்ரஸ் பழங்கள் மற்றும் சத்துள்ள உணவைக் கொடுத்தால் வயிறு, உணவுக்குழல் ஆகிய உறுப்புகளைப் புற்று நோயிலிருந்து பாதுகாக்கலாம். பெண்களுக்கு நீர்த்தாரையில் அரிப்பு, சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாத நிலை. கர்ப்பப்பை கீழ் இறங்குதல், ரத்தக்கசிவு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் மருத்துவரிடம் கூறுமாறு அறிவுறுத்த வேண்டும்.

**புற்றுநோய் வந்திருந்தால்...**

மனதளவில் அவர்களுக்குப் புற்றுநோயின் காரணமாக வரக்கூடிய பயம், வலி, உடல் சோர்வு, மனச்சோர்வு போன்றவற்றுக்குப் பக்க பலமாக இருந்து ஆறுதல் கூறி உற்சாகப்படுத்த வேண்டும்.

கொடுக்கப்பட வேண்டிய சிகிச்சையை நாள், நேரம் தவறாமல் கிடைக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

படுக்கையிலேயே இருக்கும் நோயாளிக்கு அதற்கேற்ற பராமரிப்பும், வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

நோயின் காரணமாக அவர்கள் விரும்பி உணவு உண்ண மாட்டார்கள். உடலுக்கு வேண்டிய சத்துணவும் தேவையான தண்ணீரும் எடுத்துக்கொள்ள உதவ வேண்டும்.

இரவு நன்றாக தூங்கினார்களா என்பதைக் கண்டறிந்து மருத்துவரின் ஆலோசனைப்படி ஊசி அல்லது மருந்து மூலமாக முதியோரைத் தூங்கச் செய்ய வேண்டும். நோயின் தன்மை குறித்து உறவினரிடம் தெளிவாக எடுத்துக்கூற வேண்டும்.

**நன்றி - முதுமை எனும் பூங்காற்று**


# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 20-07-2025 அன்று பெருநாள் சந்திப்பு சகோதர சமத்துவ நிகழ்ச்சி














**தாருல்** இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 20-07-2025 அன்று மாலை 5 மணியளவில் ஆரம்பமானது. தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் செயலாளர் அப்துல் ரவூஃப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.


யாசர் அரஃபாத் அவர்கள் அல்குர்ஆன் வசனங்களை வசித்து நிகழ்ச்சியானது ஆரம்பமானது. வரவேற்புரை சர்தார் அவர்கள் ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக மோ.எல்லாளன் (மாநில அமைப்பு செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி) மற்றும் வெ.கனியமுதன் (மாநில துணை பொதுசெயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி) அவர்களும் இந்து முஸ்லிம் சகோதரத்துவத்தை பற்றியும், முஸ்லிம்களுக்காக குறள் கொடுத்ததையும் மக்கள் மன்றத்தில் சொல்லி சிறப்புரையாற்றினார்கள்.

சிறப்பு பேச்சாளராக ரஃபீன் அவர்கள் பேசும்போது, அல்லாஹ் என்பவன் யார்? அல்லாஹ் முஸ்லிம்களுக்கான கடவுளா? அல்குர்ஆன் முஸ்லிம்களின் வேதமா? அல்லாஹ் நம் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான் என்ற அல்குர்ஆன் வசனத்தை சொல்லி நாம் பிறப்பால் அனைவரும் சமம். நாம் ஒரு தாய், ஒரு தந்தையின் மூலம் பிறந்துள்ளோம் நாம் அனைவரும் சகோதரர்களே. பிராமணர்கள் எப்படி கீழ்மட்ட இந்துக்களை அடிமைப்படுத்தி அவர்களுக்கு வேலை செய்யும் அடிமட்ட அடிமைகளாக வைத்துள்ளார்கள் என்பதை சுட்டிக் காட்டினார்கள்.

அதன்பின் ஜாகீர் உசேன் அவர்கள் பேசும்போது, இந்துத்துவவாதிகள் முஸ்லிம்களின்













அடையாளங்களையும், முஸ்லிம்களுக்கு எதிராக பாடப் புத்தகங்களில் எப்படியெல்லாம் வெறுப்பை பரப்பி வருகின்றார்கள் அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்பதை விளக்கமாக பேசினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு இரா.காளிமுத்து (தெற்கு மாவட்ட செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி) மற்றும் அஜ்மீர் அலி (மனிநேய மக்கள் கட்சி, திருமங்கலம்), சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துக் கொண்டு முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள். இறுதி உரையாக கி.அன்வர் (தாருல் இஸ்லாம்) அவர்கள், முஸ்லிம்கள் எதனால்? ஏன்? தாக்கப்படுகின்றார்கள் உலகளவில் என்பதை அமெரிக்காவின் சதித் திட்டங்களை விரிவாக விளக்கினார். முஸ்லிம்களை அழிப்பவர்களுக்கு எதிரி முஸ்லிம்கள் அல்ல, இஸ்லாம்தான் அவர்களின் நிலையான எதிரி ஏனென்றால் இஸ்லாம்தான் அனைவரையும் ஒர் ஆண் ஒர் பெண்ணிலிருந்து படைத்துள்ளது, பிறப்பால் அனைவரும் சமம் என்கின்றது. கடவுளின் பெயரால் இந்து மதத்தில் ஏற்றத் தாழ்வுகளை வைத்துள்ளார்கள்.

இஸ்லாத்தில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை அனைவரும் சமம் என்கின்றது. அதனால்தான் உலகளாவிய அளவில் முஸ்லிம்களை தீவிரவாதிகளாக இஸ்லாத்தை ஓர் தீவிரவாத மார்க்கமாக காட்டுகின்றது உலக மீடியாக்கள் என்பதை ஆழமான உரை நிகழ்த்தினார்.

நன்றியுரையாக ரஃபீன் அவர்கள் ஆற்றினார்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் இரவு விருந்து உபசரிப்புடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. உங்கள் இறைவன் யார்? உங்களை படைத்ததின் நோக்கம் என்ன?, ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும், வைகறை வெளிச்சம் ஜூலை இதழ் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

**– S.யாசர் அரஃபாத்**




# இறைவனிடமிருந்து வந்தோம் அவனிடமே திரும்புவோம்

“என் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடினேன். எழுந்து வந்த அலை, என்னைத் தாக்கி தரையில் தள்ளிற்று. எனக்குத்தான் அடிபட்டது. என் குழந்தை அப்படியே கீழே வீழ்ந்தது. ஆனால் என் குழந்தை எனக்குக்கிடைக்கவில்லை.”

“என் குழந்தைகளை விட்டிருக்கலாமே. என் உயிரை குடித்திருக்கலாமே!

“என் குடும்பத்தை என் கண்களின் முன்னாலேயே இழந்தேனே!’

நெஞ்சை நொறுக்கி துகள்களாக்கும் தாய் மார்களின் அவலம் கண்டு கண்ணீர் சிந்தினோம்! அலை முழங்கும் கடல், அலைபாய்வது கண்டு நெக்குருகினோம்.

அத்தனையும் நொடிக்குள் நடந்து முடிந்தது!

26.12.04 அன்று காலை 6.28 மணிக்கு வீட்டிலிருந்த அசையா சொத்துக்களெல்லாம் அசைந்தன. நம்மையும் அசைத்தன. நம்மிடம் அவையும் அவற்றிடமிருந்து நாமும் விடை பெற்றுச் செல்வது போல் இருந்தது.(இறைவனிட மிருந்தே வந்தோம் அவனிடமே திரும்பச் செல்வோம்.)

சில நொடிகள் நீண்ட இந்த நிலை ஒரு முடிவுக்கு வந்தது. ஒன்றும் ஆகிவிடவில்லை.

எல்லோரும் உயிருடனும், பிரக்ஞையுடனும் தானிருக்கின்றோம், என்றே நிலைகொண்டோம். நேரம் போக போக நாட்கள் நகர நகர நடந்த கடலின் சீற்றத்தில் சிக்கி சுமார் 12,000 பேர் பலியாகிவிட்டனர் என்ற செய்திகேட்டு நிலை குலைந்தோம்!

இந்தோனேசியாவில் தொடங்கிய நில நடுக்கம் பங்களாதேஷ், வங்காளம், ஆந்திரா, சென்னை, பாண்டிச்சேரி, கோட்டைக்குப்பம், நாகப்பட்டினம், மல்லிப்பட்டினம், முத்துப் பேட்டை தூத்துக்குடி, உவரி, கன்னியாகுமரி, பணகுடி, குளச்சல், கொல்லம், திருச்சூர், என கடற்கரைப் பகுதிகளை மயானமாக்கியது. அந்தமான், இலங்கை இலக்குத் தெரியாமல் தவிக்கின்றது. எந்த நிமிடமும் ஒரு முடிவுக்கு வரலாம் என எதிர்பார்த்தார்கள். தெற்கு ஆசியாவில் குறிப்பாக தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள்.

இந்த இழப்புகள் நம்மை நிலை நடுங்க செய்பவைதான். உண்மை என்னவெனில், இந்த உலக வாழ்க்கையே நிலையற்றதுதானே.

நிச்சயமாக இந்த முழு உலகமும் ஒரு நாள் இதுபோன்ற நிகழ்வுகளால் பீடிக்கப்படும். அன்று அனைத்தும் ஓர் முடிவுக்கு வரும். சிலர் வாடவும் பலர் வாழ்ந்திருக்கவுமான நிலை அப்போது வராது. எல்லோரும் ஒன்றுபோல் அன்று ஆட்கொள்ளப்படுவோம். இதில் உண்மை என்னவென்றால் அந்த நாளைப் பற்றிய அறிவிப்பு 1425 ஆண்டுகளுக்கு முன்பே நமக்குக் கிடைத்துவிட்டது.

அந்த நாளைப்பற்றிய இறைவனின் அறிவிப்பு இதோ:

(கொடிய பூகம்பத்தில் பூமி) பலமாக அதிர்ச் சியுறும்நாளில், (பின்னும்) அதனைத் தொடர்ந்து (பல பூகம்ப) அதிர்ச்சிகள் வரும் (நாளில், உலகம் முடிவுற்றே தீரும்) அந்நாளில் இருதயங் களெல்லாம் திடுக்கிட்டு நடுங்கிக் கொண்டி ருக்கும். (அல்குர்ஆன் 79:6-8)

(யுக முடிவின்போது) செவிடுபடும்படியான (பயங்கரச்) சப்தம் ஏற்படுமாயின், அந்நாளில் மனி தன் (திடுக்கிட்டு) தன் சகோதரனைவிட்டும் தன் தாயைவிட்டும், தன் தந்தையைவிட்டும் தன் மனைவி யைவிட்டும், தன் மக்களைவிட்டும் வெருண்டோடுவான். அந்நாளில் ஒவ்வொரு மனிதனுக்கும் மற்றவர் களைக் கவனிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும்.

(அல்குர்ஆன் : அபஸ 80:33-37)

இன்னும் சில யதார்த்தங்களை இறைவன் இப்படிப் பட்டியலிடுகின்றான்.

(யுக முடிவுக்காகச்) சூரியனின் ஒளி மங்கும் போது நட்சத்திரங்கள் கடமிழந்து உதிர்ந்து விழும்போது, மலைகள் பெயர்த்துப் பறக்கடிக் கப்படும்போது, சூல்கொண்ட ஒட்டகங்கள் கவனிப்பாரற்றுக் கட்டுத் தெறித்து அலைய விடப்படும்போது காட்டு மிருங்கள் ஒன்று கூட்டப்படும்போது கடல் கொதித்துக் கொந்த ளிக்கச் செய்யப்படும்போது, உயிர்கள் ஒன்று

சேர்க்கப்படும்போது.

(யுக முடிவில்) வானம் வெடித்து, நட்சத் திரங்கள் சிதறி, சமுத்திரங்கள் அகற்றப்பட்டு. சமாதிகளும் திறக்கப்பட்டால். (மரித்தோர் உயிர் பெற்றெழுந்து) (அல்குர்ஆன்: தக்வீர்: 81:1-7)

ஒவ்வோர் ஆத்மாவும் தான் (உலகத்தில்) முன்னர் (செய்து) அனுப்பியதையும் (உலகத்தில்) தான் விட்டு வந்ததையும் நன்கறிந்துகொள்ளும்.

இன்னும் இறைவன் எச்சரிக்கின்றான்:

(அல்குர்ஆன்: அல்இன்பிதார்: 82:1-5)

பலமான பூமி அதிர்ச்சி ஏற்பட்டு, பூமி தான் சுமந்திருப்பவைகளை (எல்லாம் வெளியில்) எறிந்துவிடும் சமயத்தில், மனிதன் திடுக்கிட்டு இதற்கு என்ன நேர்ந்தது எனக் கேட்பான். அந்நாளில் அதுதன் விஷயங்களையெல்லாம் அறிவிக்கும். ஏனென்றால் உனது இறைவன் எனக்கு வஹி மூலம் எனக்குக் கட்டளை யிட்டான் (என்று கூறும்) அந்நாளில் மனிதர்கள் (நன்மையோ, தீமையோ) தங்கள் வினைக ளைக் காணும் பொருட்டு, கூட்டங் கூட்டமாக வருவார்கள். ஆகவே! எவர் ஓர் அணுஅளவு நன்மையைச் செய்திருக்கின்றாரோ அவர் அங்கு அதனையும் கண்டுகொள்வார்கள். (அவ்வாறே) எவன் ஓர் அணுஅளவு தீமை செய்திருந்தானோ அதனையும் அவன் கண்டுகொள்வான்.

(அல்குர்ஆன்: ஜில்ஜால் 99:1-8)

ஆக இங்கே அறிவிப்பு தெளிவாக இருக்கின்றது.

இத்தகையதொரு நாள்தான் இந்த உலகம் முடிவுக்கு வரும் நாள். அதன்பின் மனிதர்கள் இந்த உலகில் செய்த நன்மைகள் அவன் செய்த தீமைகளை விஞ்சி நிற்குமேயானால் அவன் மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் வெற்றி பெறுவான். சுவர்க்கம் புகுவான்.


அவன் இந்த உலகில் தீமைகள்-அநியாயங்கள் பாவங்கள்-இவற்றையே மிகையாகச் செய்திருப் பானேயானால் அவன் தண்டிக்கப்படுவான். இந்த உலகில் அவன் மிகவும் சாதுரியமாகத் தப்பித்த தவறுகளுக்கும் அவன் தண்டிக்கப்படும் இடமாகவும் அது மறுமை அமையும்.

இங்கே நம்மை விட்டுப் பிரிந்தவர்கள் அங்கே நம்மோடு ஒன்று கூட்டப்படுவார்கள்.

ஆக அந்த நாளை நினைப்போம், இந்த நாளின் சோகங்களிலிருந்து விடுபட முயற்சி செய்வோம். அந்த நாளில் வெற்றி பெறும் அளவில் இந்த உலகில் நன்மைகள் நிறைந்த அநியாயமற்ற ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம். இதைச் செய்தால் இந்த உலகில் ஏற்படும் அழிவுகளும் அவலங்களும் நம்மை நிரந்தரமாகப் பாதிக்கமாட்டா! இறைவனிட மிருந்தே வந்தோம் அவனிடமே மீளுவோம் என்பதை அழுத்தமாக நம்புவோம். அனைத் திற்கும் மேலாக, இந்த உலகையும் நம்மையும் அந்த உல கையும், அந்த உலக முடிவு நாளையும் படைத்த அந்த அல்லாஹ்வை ஏற்போம், அவன் வகுத்து வழங்கிய வழியில் வாழ்வோம்.

அந்த நாள் எந்த நொடியும் வரலாம், என்பதனால் தாமதமின்றி அகிலத்தின் அதிபதியை ஏற்போம்!

அந்த நிரந்தர உலகின் அழிவிலிருந்து நம்மைக் காத்திடுவோம்.



அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,<br>அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்<br>லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,<br>காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

46. **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** - ரூ.400.00
எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

47. **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி - ரூ.150.00

48. **இஸ்லாம் ஒன்றே வழி!** - ரூ.120.00
அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத்

49. **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு** - ரூ.400.00
ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

50. **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?** - ரூ.300.00
ஹஸ்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

51. **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** - ரூ.20.00

52. **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** - ரூ.100.00

53. **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி** - ரூ.20.00
கரன் ஆம்ஸ்ட்ராங்

54. **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** - ரூ.50.00

55. **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** - ரூ.50.00

56. **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** - ரூ.40.00

57. **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** - ரூ.60.00

58. **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** - ரூ.60.00

59. **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** - ரூ.25.00

60. **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** - ரூ.20.00

61. **அயா சோபியா உருவான வரலாறு** - ரூ.50.00

## எமது விற்பனையில்...

01. **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்** - ரூ.100.00
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான்

02. **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்** - ரூ.100.00
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு

03. **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்** - ரூ.170.00
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி,

04. **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?** - ரூ.140.00
தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர்

05. **பலி கடாக்கள்** - ரூ.300.00

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் | - ரூ.60.00 |
| 02. | **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி**<br>கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் | - ரூ.30.00 |

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

G Pay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

Vaigarai Velicham Official  vaigarai velicham official

darultrust@yahoo.com  Website : Darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002